
# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 10
குவிப்பு - 04
பக்கங்கள் - 20
விலை ரூபா 25.00
ஏப்ரல் - 2007
(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St. Mannar, Sri Lanka.
Telephone No : 023-2232377, Fax No - 023 - 2232377, E-mail - christhunesan@pre.slt.lk / pc_nesan@yahoo.com


# உயிர்ப்பு விழா சிறப்புப் பொழிவு




Happy Easter



உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்!

## மன்னாரில் மாதா இரத்தக்கண்ணீர்!




கடந்த மார்ச் 22ம் திகதி மன்னாரில் உள்ள அமல உற்பவமாதா கன்னியர் இல்லத்தின் சிற்றாலயத்தில் உள்ள றோஜா மாதா (றோஜா மிஸ்ரிக்கா) திருச்சுரூபத்தின் கண்களில் இருந்து இரத்தக் கண்ணீர் வெளி வந்துள்ளது. இந்த அசாதாரண நிகழ்வு மன்னார் மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.


அன்றைய தினம் சிற்றாலயத்தில் காலை 8 மணியளவில் கன்னியர் இல்லத்தில் வசிக்கும் ஓர் இளம் பெண் இந்தத் திருச்சுரூபத்தின் முன்னால் இருந்து செபித்தார். நாட்டின் சமாதானத்திற்காக - குறிப்பாக வன்னியில் எழுந்துள்ள துன்பகரமான சூழ்நிலைகளை தன் மனதில் கொண்டுணர்ந்து உருக்கத்தோடு அப்பெண் செபித்துக்கொண்டிருந்தார். அந்த வேளையில் அன்னையின் திருச்சுரூப முகம் வழமைக்கு மாறாக ஆழ்ந்த துக்கத்தில் இருந்ததையும் - திடிரென பலத்த காற்று வீசுவதுபோன்ற இரைச்சல் சத்தம் கேட்டதையும் இவர் உணர்ந்துள்ளார். அவ்வேளையில் அவர் பார்த்துக்கொண்டேயிருக்க அன்னையின் கண்களில் இருந்து இரத்தமாகக் கண்ணீர் வெளிவந்துள்ளது.

தன்னை நன்கு சுதாகரித்துக்கொண்டு, நன்றாக உற்றுப் பார்த்தபோது அது அன்னையின் கண்களில் இருந்து வந்த கண்ணீர் என்பதை அறிந்துகொண்டார். உடனே எழுந்து அருட்சகோதரிகளை அழைத்து இச்செய்தியைக் கூறியுள்ளார். அவர்களும் ஓடிவந்து பார்த்தபோது அவர்கள் பார்த்துக்கொண்டிருந்த அந்த நேரத்திலும் கண்ணீர் வந்ததை அவர்களே பார்த்து உறுதிசெய்துகொண்டனர்.

பின்னர் கன்னியர் இல்ல தலைமைச் சகோதரி றெஜினா மேரி அவர்கள் பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி. தேவராஜா கொடுதோர் அவர்களுக்கு இச்செய்தியை அறிவித்தார். சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்த அருட்பணி தேவராஜா கொடுதோர், குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார், அருட்பணி டலிமா ஆகியோர் திருச்சுரூபத்தைப் பார்வையிட்டனர்.

இச்செய்தி காட்டுத்தீபோல மன்னார் எங்கும் பரவவே மக்கள் பெருந்திரளாக படையெடுத்து வந்தனர். அனைத்து மக்களும் வசதியாக திருச்சுரூபத்தைப் பார்வையிடும் பொருட்டு கண்ணாடிப் பேழையினுள் வைக்கப்பட்ட திருச்சுரூபம் பேராலயத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அன்றைய தினமும் அடுத்தநாளும் மறைமாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்த மக்கள் இத்திருச்சுரூபத்தைப் பார்வையிட்டனர். பேராலயத்தில் அன்னையைத் தரிசிக்க வரிசையாக நிற்கும் மக்களைக் கீழே காணலாம்.





## உள்ளே...


* உயிர்ப்பு(பூ)க்கள் மலரட்டும் ---------------------- பக் 02
* புதிய ஒளிக்கீற்றுக்களை சுடர்விடச் செய்வோம் ----- பக் 03
* அமெரிக்கத் தூதுவர் மன்னார் விஜயம் ------------- பக் 03
* கத்தோலிக்க ஆயர்கள் யாழ் விஜயம் ---------------- பக் 03
* உலகத் திருச்சபைச் செய்திகள் --------------------- பக் 04
* உயிர்ப்பில் வாழ எழும் தடைகள் ------------------ பக் 07
* கிறிஸ்துவின் உயிர்ப்பும் மண்ணில் மனித வாழ்வும் - 07
* மறைசாட்சிகளின் மண்ணில் மறைத் தியானம் ---- பக் 08
* பழைய ஏற்பாட்டில் உயிர்ப்பு ---------------------- பக் 10
* செபமே வாழ்வு ------------------------------------ பக் 11

# மன்னா

மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## உயிர்ப்பு பூக்கள் மலரட்டும்!

உயிர்ப்பு விழா - அது கல்லறை பிளந்த விழா, பூமி அதிர்ந்த விழா, பாவம் தோற்ற விழா, மீட்பு மலர்ந்த விழா.

### சாவு வீழ்ந்தது, வாழ்வு வந்தது

"இயேசுவைக் கொன்றுவிட்டோம், அவனை மண் தின்றுவிட்டது" என்று கொக்கரித்தவர்களின் கனவு நனவாகவில்லை. "சரித்திரம் படைக்க வந்த இயேசுவுக்கு சமாதி கட்டிவிட்டோம்" என்று சந்தோசித்தவர்களின் சந்தோசம் நீடிக்கவில்லை. சரித்திர நாயகன் விசித்திரமாய் உயிர்பெற்று எழுந்தார். சத்தியத்திற்குச் சான்றுபகர்ந்த இயேசு, நித்தியத்திற்கும் வாழுகின்றவராய் உயிர்பெற்று எழுந்தார்.

ஆம், கல்லறையால் அவரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கல்லறை திறந்தது, காரிருள் மறைந்தது. சாவு வீழ்ந்தது, வாழ்வு வந்தது. இயேசு கல்லறைக்குள் புதைக்கப்படவில்லை, அவர் விதைக்கப்பட்டார். இயேசுவின் அடக்கம் என்பது புதுவாழ்வின் தொடக்கம்.

### உயிர்ப்பே உறைவிடம்

உயிர்ப்பே கிறிஸ்தவ விசுவாசத்தின் உறைவிடமாக, உரைகல்லாக உள்ளது. கிறிஸ்தவ விசுவாசம் உயிருள்ளதாய், பொருளுள்ளதாய் இருப்பது கிறிஸ்துவின் உயிர்ப்பில்தான்.

"கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றுகிற நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்ற - தாயிருக்கும்" (1கொரி. 15:14) என்கிறார் பவுல் அடியார்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு சிலரைத் தோற்கடித்த வெற்றியல்ல, மாறாக எல்லோருக்கும் வாழ்வுதரும் வெற்றி. உயிர்ப்பு கிறிஸ்துவில் மட்டுமே சாத்தியம். "உயிர்த்தெழச் செய்பவனும், வாழ்வுதருபவனும் நானே." (யோவான் 11:25) என்கிறார் இயேசு. அவரே இன்று நம் வாழ்வையும் உயிர்ப்பிக்க வல்லவர்.

### உயிர்ப்போம் உயிர்ப்பிப்போம்

நம்பிக்கைகள் நலிவடைந்த மனிதர்களே இன்று உலகில் அதிகம். "எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது... கடவுள்மீது மட்டுமல்ல மனிதர்கள்மீதும்தான். நிச்சயம் இறைத்துணையுடன் மனிதர்களால் புதுவழி திறக்க முடியும்." என்கிறார் பேராயர் ஒஸ்கார் ரொமேரா. "சோர்ந்துவிட்ட மனிதன் தனக்குத்தானே பகைவன், துணிந்தவனோ சாவுக்கும் பகைவன்" என்பர்.

நம்மால் 'உடல்' உயிர்ப்பை நம்மிலோ பிறரிலோ நிகழ்த்த முடியாது. ஆனால் 'உள்ள' உயிர்ப்பை இப்பூமியில், நாம் வாழும் சமூகத்தில் நிகழ்த்த முடியும். நம்முடைய கனிவான பார்வை, சின்னப் புன்னகை, புரிந்துகொள்ளும் தன்மை, பரந்த மனப்பான்மை, பாராட்டு மொழிகள், உற்சாக வார்த்தைகள், சிறு சிறு உதவிகள் இவை மூலம் இன்றும் உயிர்ப்பை நாம் பிறருக்கு வழங்க முடியும்.

### உறவுகள் உயிர்க்கட்டும்

பெரும்பாலான உறவுகளில் இன்று உயிர் இல்லை. உறவுகள் பலவும் உறங்கிக்கொண்டிருக்கின்றன. இயேசு இறந்துவிட்டார் என்று கல்லறையில் தேடாமல் உயிர்த்துவிட்டார் என்று உறவுகளில் தேடுவோம்.

மலை சாய்ந்தால் சிலையாவதுபோல, மரம் சாய்ந்தால் சருகாவதுபோல மனிதன் சாய்ந்தால் மறுகிறிஸ்துவாக உயிர்த்தெழ வேண்டும்.

உடைந்த உறவுகளை, உறங்கும் உறவுகளை மீண்டும் தட்டி எழுப்புவோம், கட்டி எழுப்புவோம்.

### வழுக்கலா? உலுக்கலா?

புதைக்கப்பட்ட கிறிஸ்து உயிர்த்தது மட்டுமன்று அவரின் கொள்கைகளும் கோட்பாடுகளும் தினம் தினம் புதுவடிவம் பெறவேண்டும். இயேசுவின் உயிர்ப்பு வரலாற்றில் வழுக்கலாக இல்லாமல் மனிதகுல எழுச்சியின் ஓர் உன்னதமான உலுக்கலாக மாறவேண்டும். மாற்றுவோமா?

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,

அன்புடன், அருட்பணியாளர் நேசன்

மன்னா பதிப்பாசிரியர்



# வாசகர் எண்ணங்கள்




## மக்கள் மனதில் இடம் பிடித்த மன்னா!

மக்கள் மனதில் இடம்பிடித்த எம் இனிய மன்னாவே,

நீ, என் மனதில் மட்டும் இடம்பிடிக்கவில்லை. பல பங்குகளில் வாழும் மக்கள், பல இடங்களில், பல ஊர்களில் ஏன் பல்வேறு நாடுகளில் உள்ளவர்களிடம்கூட நீ இடம்பிடித்துவிட்டாய். இதற்கு காரணம் நீ சுமந்துவரும் பகுதிகள்தான். ஒவ்வொரு பகுதியும் வாழ்க்கைக்குப் பலன்தரக்கூடிய வகையில் அமைகின்றது. இந்நிலைதான் மாதம் எப்போ முடியும் அடுத்த இதழ் எப்போதுவரும் எனச் சிந்திக்க வைக்கின்றது. உன் சேவை வளர வாழ்த்துகின்றேன்.

திருமதி. சுகந்தி மனோகரன்,
ஒல்லிமோட்டை, சவாற்கட்டு மன்னார்.

## உறவுப் பாலமாய் வலம் வருகின்றாய்



அன்பின் மன்னா! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் "அன்பின் கங்கை அன்னை திரேசா" படு ஜோர். இன்னும் உறவுகளை இழந்து வாழும் உள்ளங்களின் உறவுப் பாலமாய் வலம் வருகின்றாய். உனது சேவை வளர என் இனிய வாழ்த்துக்கள்.

*வே. மார்த்தாள், நமுனுகுல, பதுளை.*

## தினமும் எதிர்பார்த்து தவிக்கிறேன்

என் இனிய மன்னாவே! முதன் முதலில் உன்னைப் பார்த்ததும் தவித்தேன். "இது என்ன மன்னா?" என்று. ஆனால் இன்று உன் வரவைத் தினமும் எதிர்பார்த்துத் தவிக்கிறேன், "இதுவே என் மன்னா" என்று. என்னில் எழும் அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் தருகின்றாய். என்னுயிர் நண்பனான மன்னாவே, நீ தாங்கும் சகல கருத்துக்களுக்காகவும் என் இதய நன்றிகள், வாழ்த்துக்கள் என்றென்றும் உனக்கே.

*கே. வியூறிதா, பள்ளங்கோட்டை, நானாட்டான்.*

## இன்னும் நீ உயரத்தில் கொடிகட்டிப் பறக்க வேண்டும்



சொர்க்கம் நீ ! சொந்தம் நீ
உயிரும் நீ ! உணர்வும் நீ
உலகமும் நீ ! நீ இதேபோல் இன்னும் உயரத்தில் கொடிகட்டிப் பறக்க வேண்டும். உனக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

*எஸ். அமுதினி,*
*சிறுக்கண்டல், முருங்கன்.*

## உன் சேவை எங்கள் அனைவருக்கும் தேவை!



பல்லாயிரக் கணக்கான உள்ளங்களில் தவழ்ந்து நீங்காத இடம்பிடித்துக் கொண்டு வருகின்ற என் இனிய மன்னாவே!

நீ அனேக விடயங்களை மாதா மாதம் புதிது புதிதாகச் சுமந்துகொண்டு வருகின்றாய். அயல் நாடுகளிலே புலம்பெயர்ந்து வாழும் கத்தோலிக்க மக்களிடையேயும் கடல் கடந்து சென்று மக்கள் மனங்களில் இடம்பிடித்துக் கொண்டே இருக்கின்றாய்.

எப்போது? எங்கே? என்ன நடக்கும்? என்று இருக்கும் இச்சூழ்நிலையில் நீ மட்டும் ஒவ்வொரு மாதமும் தவறாது வீடுதேடி வருகின்றாய். உன் சேவை தொடர்ந்து நடைபெற வாழ்த்துகின்றேன். நீ சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரின் உள்ளங்களிலும் வந்து தங்குகிறாய்.

மன்னாவே, நீ செய்யும் இந்தச் சேவைக்கு ஆயிரம் நன்றிகள் சொன்னாலும் போதாது. உன்னுடைய சேவை என்றும் பாரினில் மலர்ந்திட, புதிய புதிய ஆக்கங்கள் வெளிவந்திட, உன் சேவை தொடர்ந்திட என் உள்ளங் கனிந்த வாழ்த்துக்களை உனக்குக் கூறுகின்றேன். வாழ்க! வளர்க.

*க. லூசியா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.*

## புத்துணர்வு அளித்திடும் புதுமலர் நீதான்!

மாதமொருமுறை மலர்வாய் மன்னாவே
மக்கள் மனங்களில் நிறைவாய் மன்னாவே
எண்ணங்கள் யாவும் தாங்கியவனாய்
எம்மிடையே வலம் வருவாய் மன்னாவே!
ஆன்மீக சிறுகதை மறையறிவுப் போட்டிகளுடன்
வத்திக்கான் முதல் மன்னார் வரையிலான
அனைத்துச் சங்கதிகளையும் தாங்கி
அ.ம.தி. அன்புராசாவின் கருத்துக் களத்துடன்
அட்டகாசமாக எம்மிடையே மலர்ந்து
புத்துணர்வு அளித்திடும் புத்தம் புது மலரே மன்னாவே,
என்றும் எம்மிடையே வாடாமல் மலர
மனமார வாழ்த்துகின்றேன்.

*து. ஷமிலா, பள்ளிமுனை, மன்னார்.*

# மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காலத் தியானங்கள்

## மன்னார் தோட்டவெளி

வேதசாட்சிகள் ஆலயம் (16.17.18 மார்ச் 2007)



குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார், மறைக்கல்வி இயக்குனர் நேசன் அடிகளார், மன்னார் வலையக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆபேல் றெவல், தோட்டவெளிப் பங்குத் தந்தை இராயப்பு அடிகளார்.





தியானத்தின்போது பாடல்களைப் பாடிய திரு. மாசில்லாமணி, செல்வன். அன்பன், செல்வி. விமலா, செல்வி, சோபா ஆகியோர்.

## வவுனியா

அந்தோனியார் ஆலயம் (09.10.11 மார்ச் 2007)



வவு/ இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி அதிபர் சகோதரி யோசப்பின், வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளர் திருமதி ஒஸ்வேல்ட், வவுனியா கல்வியியல் கல்லூரி பீடாதிபதி திரு. பேனாட் ஆகியோர்.





அருட்பணி அ. யூட் குரூஸ் அடிகளார் மனமாற்ற வழிபாடு நடத்துவதையும் பங்கெடுத்த ஆசிரியர்களையும் காணலாம்.

உண்மை, இரக்கம், அன்புநிறை கருணை, சகிப்புத்தன்மை என்னும்

# புதிய ஒளிக்கீற்றுக்களை சுடர்விடச் செய்வோம்

## இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் உயிர்ப்பு விழாச் செய்தி

உண்மை, இரக்கம், அன்பு நிறை கருணை, சகிப்புத்தன்மை என்னும் புதிய ஒளிக்கீற்றுக்களை சுடர்விடச் செய்வோம் என்று இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் இவ்வருடத்திற்கான உயிர்ப்புப் பெருவிழாச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. மனுக்குலத்தின் இரட்சகராம் இயேசுக் கிறிஸ்து சாவை வென்று எழுந்தார் என்பதே உயிர்ப்பு விழா வழங்கும் இனிய செய்தியாகும். எனவே எமது கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமாக விளங்கும் மாபெரும் மறைபொருள் கிறிஸ்து இயேசுவின் உத்தானமாகும். இதனாலேயே இந்த உயிர்ப்புப் பெருவிழாவை உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் கொண்டாடி மகிழ்கின்றனர்.

மனிதனின் கடைசி எதிரியான மரணம் முற்றிலும் முறியடிக்கப்பட்டுவிட்டது. புதிய வாழ்விற்கான அடிவானம் தோற்றம் பெற்றுள்ளது. எனவே, கிறிஸ்துவின் உயிர்ப்பின்மீதான நம்பிக்கையே கிறிஸ்தவ விசுவாசத்தின் உயிர்நாடி. இதனை புனித பவுல் அடிகளார் "உயிர்ப்பு என்னும் உண்மை இன்றேல் போதனைகள் யாவும் பயனற்றதும், விசுவாசம் வீணானதுமாகும்" என அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடுகின்றார்.

உயிர்ப்பை இழந்திருப்போமாயின் உலகிலுள்ள எல்லாத் துர்ப்பாக்கியவான் மத்தியிலும் நாம் மிகவும் பரிதாபத்துக்கு உரியவர்களாயிருந்திருப்போம். இவ்விழா மரணத்தினதும் துன்பத்தினதும் கொடுக்கை முறித்துப்போட்டு அவற்றின் வல்லமையின்மீது திடகாத்திரமான வெற்றியைப் பொழிந்து நிற்கின்றது. இது உத்தானத்தின் மாட்சிமையின் பேரொளியிலிருந்தே எமக்குத் தெளிவை வழங்கி நிற்கின்றது.

கிறிஸ்து இயேசுவின் அந்த ஒளியிலிருந்தே உண்மையான சமாதானமும் நம்பிக்கையும் சுடர்விடுகின்றது. இயேசுக் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளில் உண்மைக்கும் - நயவஞ்சகத்திற்கும், வன்முறைக்கும் - இரக்கத்திற்கும், பாவத்திற்கும் - தூய்மைக்கும், ஈற்றில் வாழ்விற்கும் சாவிற்கும் இடையிலான போராட்ட நாடகம் ஒன்று அரங்கேறுவதைக் காண்கிறோம். இவை யாவற்றிலும் வாழ்வே இறுதியில் வெற்றிகொள்கின்றது.

உத்தானத்தின் மகிமையில் நாம் திளைத்திருக்கும் அதேவேளை, எமது நேசமிக்க தேசத்தையும், அதன் மக்களையும் சூழ்ந்திருக்கும் இருளைப் பார்க்கின்றோம். தீமையின் வல்லமைகளின் மத்தியில் நாம் இன்றும் இருப்பதை உணர்கின்றோம். இதனால், உண்மையினதும் நீதியினதும் ஒளி, அன்பினதும் சேவையினதும் நிஜமான ஆத்மா, அன்புநிறை இரக்கம், தயவின் உயர்ந்த மனிதப் பண்புகள் என்பவற்றின் ஒளி பெரிதும் மழுங்கடிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. எனவே உயிர்த்த இயேசுவே இந்த இருளில் இருந்து ஒளிமயமாக, நம்பிக்கையான நல்வாழ்விற்கு அழைத்துச் செல்வாராக என அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்
# மன்னார் ஆயர் இல்லத்திற்கு விஜயம்





இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபேட் ஓ பிலேக் யூனியர் அவர்களும் அவருடைய செயலாளர் மற்றும் தூதரக அதிகாரி, பாதுகாப்பு அதிகாரி உட்பட்ட குழுவினரும் கடந்த மார்ச் மாதம் 21ம் திகதி மன்னார் ஆயர் இல்லத்திற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

பகல் 12.00 மணியளவில் ஆயர் இல்லத்திற்கு வருகை தந்த இவர்கள் மன்னார் அரச அதிபர், மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர், மன்னார் வைத்திய அதிகாரிகள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். அதன் பின்னர் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களுடன் தனிப்பட்ட சந்திப்பையும் அமெரிக்கத் தூதுவர் மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து அமெரிக்கத் தூதுவருக்கும் அவரோடு கலந்துரையாடிய அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் ஆயர் இல்லத்தில் மதிய விருந்து வழங்கப்பட்டது.

பிற்பகல் 4.00 மணியளவில் இத்தூதுக் குழுவினர் புறப்பட்டுச் சென்றனர். மன்னார் ஆயர் இல்லத்தில் சிவில் அதிகாரிகளைச் சந்திப்பதற்கு முன்னர் தள்ளாடி இராணுவ முகாமில் இராணுவ அதிகாரிகளுடனும் மன்னார் சனி விலேஜ் கடற்படை முகாமில் கடற்படை அதிகாரிகளுடனும் அமெரிக்கத் தூதுவர் பேச்சுக்களை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கத்தோலிக்க ஆயர்கள்
# யாழ் விஜயம்

இலங்கை 'கறிற்றாஸ்' நிறுவனத்தின் சமாதானப் பிரிவைச் சார்ந்த ஐந்து உறுப்பினர்கள் அண்மையில் யாழ் நகருக்கான தமது பயணத்தை மேற்கொண்டிருந்தனர். சொல்ல முடியாத கஷ்ரத்தின் மத்தியில் வாழும் யாழ்ப்பாண மக்களின் பரிதாப நிலையைக் கண்ணால் கண்டு அவர்களுடனான தமது ஒன்றிப்பைப் பகிர்ந்துகொள்வதே அவர்களது இப்பயணத்தின் நோக்கமாயிருந்தது.

மேதகு ஆயர் இராயப்பு யோசவ் (மன்னார் மறைமாவட்ட ஆயர்), மேதகு ஆயர் ஹரல்ட் அன்ரனி பெரேரா (காலி மறைமாவட்ட ஆயர்), மேதகு ஆயர் நோபேட் அன்றாடி (அனுராதபுர ஆயர்) மற்றும் அருட்பணி. டேமியன் பெர்ணாண்டோ (கறிற்றாஸ் - செடேக் இயக்குனர்), அருட்பணி. சிறில் அன்ரனி (அமைதிக்கான அமையத்தின் இணைப்பாளர்) ஆகியோரே இந்த ஐந்து உறுப்பினர்களாவர்

இவர்கள் காங்கேசன் துறைமுகத்தையும், மயிலிட்டி இறங்கு துறையையும் பார்வையிட்டனர். அத்துடன் அவர்கள் மேதகு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் (யாழ் ஆயர்), அருட்பணியாளர்கள், துறவிகள், அமைதிக்கும் நல்லெண்ணத்திற்குமான பிரஜைகள் குழு, மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் ஆகியோருடன் பயனுள்ள கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இந்தக்கலந்துரையாடலின்போது பல பிரச்சினைகள் வெளிக்கொணரப்பட்டன. அதாவது கொலை, ஆட்கடத்தல், கொள்ளை, மாணவர்கள் ஒழுங்காகப் பாடசாலை செல்வதில் ஏற்படும் தடங்கல்கள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, இயக்கங்கள் மட்டிலான தடைகள், இன்னும் விசேடமாக மீன்பிடித்தொழில் மட்டில் கொண்டுவரப்பட்ட கண்டிப்பான தடைஉத்தரவு இத்தொழிலை மேற்கொண்டுள்ள ஏராளமான குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவு ஆகிய பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர்.

அவர்கள் யாழ்ப்பாணத்தை விட்டுப்புறப்படும் முன்னர் கட்டளை அதிகாரியையும், உள்நாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பான இணைப்பாளர் ஆகியோரையும் பலாலி தலைமையகத்தில் சந்தித்து தாம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த நாட்களில் கண்டவற்றை எடுத்துரைத்தனர்.

அவர்கள் கொழும்பை அடைந்ததும் தமது கருத்துக்களை வெளியிட்டபோது, "யாழ் மக்களுக்கு அனைத்திலும் மேலாகத் தேவைப்படுவது, 'சமாதானம், சமாதானம், சமாதானம்' அவர்கள் போரை வன்மையாக எதிர்ப்பதோடு, அமைதியாக வாழவும், ஒரே நாட்டு மக்களாக எண்ணப்படவுமே விரும்புகிறார்கள். அதேவேளை சமாதான முன்னெடுப்புகளில் தெற்கு அக்கறையுடன் ஈடுபடவும், செயலிழந்துள்ள யுத்தநிறுத்த ஒப்பந்தம் மீளவும் உயிரூட்டப்படவும் அவர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்" என்றும் கூறினர்.

## தேசிய ரீதியில்
# திருவழிபாட்டுக் கருத்தமர்வு

கொழும்பு மறைமாவட்ட திருவழிபாட்டு நிலையத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு பெப்ரவரி மாதம் 11 – 25ம் திகதி வரை தேவத்தை தியான இல்லத்தில் நடைபெற்ற திருவழிபாட்டுக் கருத்தமர்வை அருட்பணியாளர் சிசில் ஜோய பெரேரா நெறிப்படுத்தினார். இதில் அதிகளவான அருட்பணியாளர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர். இந்தத் திருவழிபாட்டுக் கருத்தமர்வு நற்கரு[illegible] இறையியலை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது.


வருகைப் பவனி, நற்செய்திகளின் புத்தகங்கள், திருவழிபாட்டை நடாத்தும் குரு, ஆசிநீர் தெளித்தல், பலிப்பீடம், சிலுவை அடையாளம், கருப்பொருள் அன்றேல் முன்னுரை, பாவமன்னிப்பு, அமைதி, விசுவாசிகளின் மன்றாட்டு, நிறைவான கொடை (இயேசுக் கிறிஸ்து) மற்றும் நற்கருணைக் கொண்டாட்டத்தில் உச்ச நிலையான ஆர்ப்பரிப்பு ஆகியவையே இந்தக் கருத்தமர்வில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சில முக்கிய திருவழிபாட்டு அம்சங்களாகும்.

# குருத்துவ திருநிலைப்படுத்தலின் 40ம் ஆண்டு நிறைவு

மன்னார், மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை, கண்டி மறைமாவட்ட ஆயர் வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை, அருட்பணியாளர் பி. எம். இம்மானுவல் (யாழ்ப்பாணம்) ஆகியோரும் இன்னும் சில சிங்களக் குருக்களும் ஒன்றிணைந்து மார்ச் 5ம் நாள் கொகுவலையில் உள்ள மரியன் குறோவில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்து தமது குருத்துவ திருநிலைப்படுத்தலின் 40ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடினார்கள்.

அருட்பணியாளர்களான ஸ்ரான் பிலிப் (அமதி) மரியதாஸ் செல்வரெட்ணம் (அமதி) இராஜரெட்ணம் (யாழ்ப்பாணம்) ஆகியோர் இந்த 40ம் ஆண்டு நிறைவுக் கூட்டுத் திருப்பலியில் பங்குகொள்ள முடியவில்லை.

# பொன்விழா நாயகர் தேவராஜா அடிகளாருடன்
## மன்னார் பங்கு ஆண்கள் தோழமைக்குழுவினர்



அருட்பணியாளர் ஜே.பி. தேவராஜா அடிகளின் 50 வருட குருத்துவப் பொன்விழாவையொட்டி மன்னார் பேராலயத்தில் இடம்பெற்ற நன்றித் திருப்பலியின் பின்னர் ஆண்கள் தோழமைக் குழுவினர் யூபிலி நாயகருடனும் பங்குத்தந்தை அருட்பணி தேவறாஜா கொடுதோர். மன்னா பத்திரிகை பதிப்பாசிரியர் அருட்பணி நேசன் ஆகியோருடனும் எடுத்துக்கொண்ட படம்.

*தகவல்:- ஆண்கள் தோழமைக்குழு, ப.க.கொட்டு மேற்கு வலயம்*

# உலகத் திருச்சபை செய்திகள்

## துருக்கி திருச்சபைக்கு அங்கீகாரம் வழங்குங்கள்

### திருத்தந்தை வேண்டுகோள்!



திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் துருக்கி கததோலிக்கத் திருச்சபைக்கு முழு அங்கீகாரம் வழங்க துருக்கி அரசு முன்வரவேண்டும் என்றும், அதற்குரிய பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை துருக்கி கத்தோலிக்க ஆயர் பேரவை மேற்கொள்ள வேண்டும்” என்றும் கேட்டுக்கொண்டார்.

ஜனவரி 19ஆம் திகதி வத்திக்கானுக்கான துருக்கி நாட்டுத் தூதர் மெளமர் டோகன் அக்தரை வரவேற்ற திருத்தந்தை, “துருக்கி நாட்டு கிறிஸ்தவர்கள் மதச் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்கும் பட்சத்திலும், கிறிஸ்தவ சட்டமுறைகளின்படியான அந்தஸ்தை திருச்சபைக்கு சட்டப்படி வழங்க துருக்கி அரசு முன்வர வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்.

திருச்சபை துருக்கி அரசு வழங்கும் சட்டப்படியான அந்தஸ்தை பெற்றுக்கொண்டால்தான் திருச்சபையும், பிற கிறிஸ்தவ சபையினரும் நிலங்களையோ, உடமைகளையோ சொந்தமாக வாங்கவும், பள்ளிகள், மருத்துவமனைகள் நிறுவவும் முடியும் என்று திருத்தந்தை கூறினார். திருத்தந்தையும், துருக்கி நாட்டு வத்திக்கான் தூதரும் சந்தித்தபோது அவர்கள் உரையாடலின் பெரும்பகுதி திருத்தந்தையின் துருக்கிப் பயணத்தின் வெற்றி பற்றியதாகவே அமைந்திருந்தது. துருக்கி பயணம், கிறிஸ்தவர் இஸ்லாமிய உலகினர்மீது எவ்வளவு மதிப்பு கொண்டுள்ளனர் என்பதை வெளிப்படுத்த பெரும் வாய்ப்பாக இருந்தது என்று திருத்தந்தை கூறினார்.

## மனித மாண்புக்கு முரணான தூக்குத் தண்டனைகள்

### வத்திக்கான் கண்டனம்!

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் உசேன், அவரது மருமகன் பார்சன் இப்ராகீம் போன்றோர் அவசர அவசரமாக கொலைக்குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டுள்ளனர். இப்ராகீம் தூக்கில் இடப்பட்டபோது அவரது உடல் தரையிலும், தலை துண்டிக்கப்பட்டு பல அடி தூரம் தள்ளியும் கிடந்ததை வீடியோக்களில் கண்ட மக்கள் கொடூரத்தின் உச்சியை உணர்ந்துள்ளனர். ஈராக் அரசு, “தூக்கிலிடும்போது தலை துண்டானது எதிர்பாராத விபத்து” என்று சர்வசாதாரணமாகக் கூறியுள்ளது. சதாம் ஆட்சியில் அவரது நீதிமன்ற நீதிபதி ‘அவாட் ஹாமெட் அல்பண்டரும்’ தூக்கிலிடப்பட்டுள்ளார். இவர் கொலைக் குற்றம் வழங்கப்பட ஈராக் அரசு கூறியுள்ள காரணம் “1982 இல் 148 சியா முஸ்லீம்கள் கொடுமைப்படுத்தி கொல்லப்பட்டதற்கு இவர்கள்தான் பொறுப்பு” என்பதாகும்.

இந்தக் கொலைத் தண்டனைகள் பற்றி வத்திக்கான் செய்தி ஊடகங்கள், “கொடூரமான நீதியை நிலைநாட்டும் தவறான போக்கு மீண்டும் தனது முகத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது. ஈராக் தவறான பாதையில் செல்கிறது என்பதற்கு இது ஒரு சான்று. மேலும், இந்த மூவரின் தூக்குத் தண்டனைகளும் நிறைவேற்றப்பட்ட விதம் மனித மாண்புக்கு எதிரானது. எனவே, மனித மாண்பு காக்கப்பட உலக அளவிலான பேச்சுவார்த்தைகளும், சமாதான முயற்சிகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். முறையான விசாரணையும், குற்றவாளி தனது நிலையை விளக்க உரிய சந்தர்ப்பங்களும் வழங்காத இம்மூவரின் கொலை வழக்குகள் தற்போதைய ஈராக் அரசுக்கும், சதாம் அரசுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை என்பதை நிரூபித்துள்ளது என்று ‘லொசர்வத்தாரோ ரோமானோ’ என்ற வத்திக்கான் செய்தித்தாள் கூறியுள்ளது.

## “கிறிஸ்துவின் வருகை ஒரு வரலாற்றுப் புதுமை!”

### திருத்தந்தையின் தியான இயக்குனர் கருத்து

கிறிஸ்துவின் வருகை கிறிஸ்தவ மதத்தை மனிதகுல வரலாற்றில் ஒப்பிட முடியாத புதுமையாக உருவாக்கியது என்று திருத்தந்தைக்கு தியானம் வழங்கும் இயக்குனர் குறிப்பிட்டுள்ளார். பெப்ரவரி 25ஆம் தேதியிலிருந்து வத்திக்கானின் கியூரியாவின் உறுப்பினர்களுக்கான ஒரு வார தியானத்தை கர்தினால் ஜியகோமா பிபி வழங்கினார். ‘விண்ணரசிற்கு உரியவற்றை நாடுங்கள்...’ என்பதுதான் தியானத்தின் மையக்கருத்து.

இத்தியானம் ‘மீட்பரின் தாய்’ என்ற பெயருடைய வத்திக்கான் மாளிகையிலுள்ள சிற்றாலயத்தில் நடைபெற்றது. தியானத்தில் கர்தினால், “அப்போஸ்தலர்கள் தொடர்ந்து பிரமாணிக்கமுள்ள யூதர்களாக இருந்தபோதிலும், மரியாவின் மகன் இயேசுவை ஆராதிப்பதில் முதன்மை பெற்று விளங்கினர். இயேசுவையே அனைத்தின் மையமாகவும் கொண்டிருந்தனர்” என்று கூறினார்.

78 வயதான கர்தினால் கூறுகையில், “அப்போஸ்தலர்கள் தாங்கள் வாழ்ந்துவந்த யூத மதத்திலிருந்து மாறுபட்ட ஒரு மதத்தைப் போதிக்கவில்லை என்றாலும், கிறிஸ்தவம் இஸ்ரயேல் மக்களின் விசுவாசத்திலிருந்தே ஊற்றெடுத்தது. அதனால்தான் கிறிஸ்தவம் மனிதகுல வரலாற்றில் ஒப்பிட முடியாத ஒரு புதுமையாக உள்ளது” என்று கூறினார். மேலும் அவர் தனது தியானத்தில் “உயிர்ப்பிற்குப்பின் அப்போஸ்தலர்கள் இயேசுவின் போதனைகளை விளக்கத் தொடங்கினர். அப்படிப் போதிக்கையில் இதுவரை கண்டிராத, எல்லா உயிர்களையும்விட உயர்வான ஒருவரை தங்கள் வாழ்வில் இயேசு வடிவில் கண்டதாக உணர்ந்தனர்” என்று கூறினார்.

## 2008 அகில உலக ரீதியில்

### இறைவார்த்தை ஆண்டு



2007 ஜனவரி 25ஆம் திகதி திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்களை அகில உலக ஆயர் பேரவையின் செயற்குழு உறுப்பினர்கள் சந்தித்தனர்.

2008, அக்டோபர் 5 முதல் 26 ஆம் திகதி வரை வத்திக்கானில் இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு அகில உலக ஆயர் பேரவை கூட உள்ளது. இப்பேரவை வத்திக்கானில் ‘திருச்சபையின் வாழ்விலும் மறைப்பணியிலும் இறைவார்த்தை’ என்ற மையப் பொருளில் நடைபெறவுள்ளது.

இப்பேரவை திருச்சபையின் அன்றாட வாழ்வில் இறைவார்த்தை வகிக்கும் மைய இடத்தை மீண்டும் கண்டுணர உதவும் என்று திருத்தந்தை நம்பிக்கை தெரிவித்துள்ளார். மேலும் 2008ஆம் ஆண்டை இறைவார்த்தை ஆண்டாகச் சிறப்பிக்க தயாரிப்புப் பணிகளை முடுக்கிவிடும்படி பணிக்குழுவினரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இறைவார்த்தை திருச்சபையின் வாழ்வையும், மறைப்பணியையும் தோற்றுவித்து உரமூட்டி வளர்த்து வருவதை வலியுறுத்திக் கூறியுள்ளார் திருத்தந்தை.

## திருச்சிலுவைச் சபையின் நிறுவுனருக்கு

### முத்திப்பேறு பட்டம்

பிரான்ஸ் நாட்டின் திருச்சிலுவைக் குருக்கள், சகோதரர்கள் மற்றும் கன்னியர்களின் சபையை நிறுவிய தந்தை மொரேயுவிற்கு முத்திப்பேறு பட்டம் வழங்கப்பட உள்ளது. 2006 டிசம்பர் 7ம் திகதி வத்திக்கானின் தலைமைச் செயலர் கூறுகையில் தந்தை பேரில் அண்டோனியோ மரிய மெரேயு 2007 செப்ரம்பர் 15ம் திகதி முத்திப்பேறு நிலைக்கு உயர்த்தப்படுவார் என்று குறிப்பிட்டார்.

இவர் பிரான்சில் 1799 பெப்ரவரி 11ம் திகதி லீமான்ஸ் என்னுமிடத்தில் பிறந்து, லீமான்ஸ் மறைமாவட்டத்தின் குருவாக திருநிலைப் - படுத்தப்பட்டார். குருமடத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் திருச்சிலுவைப் பெண்கள் சபை, ஆண்கள் சபை என்ற இரண்டு அமைப்புக்களை நிறுவினார். இந்தச் சபையானது இளைஞர்களுக்கு கல்விப்பணி புரிய உருவாக்கப்பட்டது. இவருக்கு புனிதர் பட்டம் வழங்க 1946இல் முடிவுசெய்யப்பட்டு 1955இல் விண்ணப்பிக்கப்பட்டது.

## நோயாளிகளின் முகங்களே இயேசுவின் முகம் பிரகாசிக்கும் இடங்களாகும்

### - திருத்தந்தை -

“ஒவ்வொரு நோயாளியின் முகம்தான் கிறிஸ்துவின் முகம் பிரகாசிக்கும் இடம்” என்று ‘உலக நோயாளிகள் தின’ செய்தியில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் கூறியுள்ளார்.

புனித இராயப்பர் தேவாலய வளாகத்தில் கர்தினால் கமில்லோ ரூய்னி தலைமையில் நடைபெற்ற உலக நோயாளிகள் தினத் திருப்பலியின் முடிவில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் தனது செய்தியை வழங்கினார்.

திருத்தந்தை தனது செய்தியில், “எல்லா மனிதர்களின் முகங்களிலும், இன்னும் சிறப்பாக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் முகங்களிலும் இயேசுவின் முகமே பிரகாசிக்கின்றது. “ஏழை எளிய என் சகோதரர்களில் ஒருவருக்கு நீங்கள் இவற்றைச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்” என்று இயேசு கூறியதை நினைவுகூர்வது நல்லது. உலக நோயாளர்கள் தினத்தில் அனைத்துலக நோயாளிகளுடன் எனது ஐக்கியத்தையும், அவர்களுக்கான பொருளாதார ஆன்மீக உதவிகளையும் உறுதி செய்கின்றேன்” என்று கூறினார்.

## காசா நாட்டில் ஒரு குருவானவர்

### 200 கத்தோலிக்கர்கள்

முற்றிலும் இஸ்லாமிய நாடான காசாவில் மொத்த மக்கள் தொகை 1.5 மில்லியன். இதில் கிறிஸ்தவர்கள் 3000 பேர். இவர்களில் கத்தோலிக்கர்கள் வெறும் 200 பேர் மட்டுமே. 200 கத்தோலிக்கர்களின் ஆன்மீகத் தேவைகளுக்கு உதவும் அருட்பணியாளர் மனுவேல் மௌசலாம் 1995ஆம் ஆண்டிலிருந்து காசாவில் பணியாற்றி வருகிறார்.

காசா நாட்டின் ‘போப்’ என்று நகைச்சுவையாக அழைக்கப்படும் தந்தை மௌசலாம் இலத்தீன் பேட்ரியார்க் மைக்கேல் சாபாவிற்குப் பின் பணியாற்றி வருகிறார். 25 மைல் பரப்பளவைக் கொண்ட காசா நாடானது மூன்று பக்கங்களும் முள் வேலி பாதுகாப்பையும், இன்னொரு புறம் மத்தியதரைக் கடலையும் கொண்டதாக உள்ளது. இந்த நாட்டின் வான மண்டலப்பகுதி இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ளது. 1968இல் குருவான மௌசலாம் காசாவிற்கு பணியாற்ற வந்ததால் இஸ்ரேலியக் குடியுரிமையை இழந்தார். இதனால் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறார். தனது தாய், தந்தையின் இறுதிச் சடங்கிற்குக்கூட இவர் அனுமதிக்கப்படவில்லை. இங்குள்ள கத்தோலிக்கர்களுக்காக பணியாற்றும் தந்தை மௌசலாம் ‘என் மக்களுடன் சிறைவாசம் செய்யப்பட்டுள்ளேன். என் மக்களுக்கு நான்தான் ஒரே நம்பிக்கை” என்று கூறுகிறார்.

## 2006ம் ஆண்டில் 24 பேர் வேதசாட்சிகளாக மரணமடைந்துள்ளனர்

கத்தோலிக்கத் திருச்சபையில் 2006ஆம் ஆண்டில் மட்டும் குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் உட்பட 24 பேர் கிறிஸ்துவை அறிவித்ததற்காகக் கொலைசெய்யப்பட்டுள்ளனர் என்று வத்திக்கானின் நற்செய்தி அறிவிப்புப் பணி பேராயம் தெரிவித்துள்ளது. இதில் 11 பேர் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள், 8 பேர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள். 4 பேர் ஆசியக் கண்டத்தினர். ஒருவர் ஓசியானாவைச் சேர்ந்தவர்.

இவர்கள் கிறிஸ்துவை அறிவிப்பதற்காக தங்கள் வாழ்வை மகிழ்ச்சியாக அர்ப்பணித்தவர்கள். இவர்கள் வீரவிசுவாசிகள் என்று திருத்தந்தை கூறியுள்ளார்.

2005ஆம் ஆண்டில் வேதசாட்சிகளாக கொல்லப்பட்டவர்கள் 25 பேர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வத்திக்கானின் அறிவியல் கழகத்தில் உறுப்பினராக

### இந்திய வானிலை விஞ்ஞானி கே. கஸ்தூரி ரங்கன் நியமனம்

இந்திய வானிலை விஞ்ஞானி கே. கஸ்தூரி ரங்கன் உலகப் புகழ்பெற்ற வத்திக்கான் அறிவியல் கழகத்தின் உறுப்பினராக திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற்றால் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை இந்தப் பெருமைமிக்க பதவிக்கு மூன்று இந்திய விஞ்ஞானிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். டாக்டர் சேர். சி. வி. ராமன், டாக்டர் எம்.கே.மேனன் மற்றும் டாக்டர் சி. என். ஆர். ராவ் ஆகியோரைத் தொடர்ந்து இப்பதவிக்கு நான்காவது விஞ்ஞானியாக வத்திக்கானின் அறிவியல் கழகத்தின் உறுப்பினராக டாக்டர் கஸ்தூரி ரங்கன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பதவி நியமனம் குறித்துக் கருத்துக் கூறிய விஞ்ஞானி கஸ்தூரி ரங்கன், “உலகின் பெருமைக்குரிய, உலகப் புகழ் பெற்ற வத்திக்கான் அறிவியல் கழகத்தின் உறுப்பினராக திருத்தந்தை 16 ஆம் பெனடிக்றின் நியமனக் கடிதத்தைக் கண்டு பெரும் மகிழ்ச்சியடைந்தேன். நோபல் பரிசு பெற்ற 35 உறுப்பினர்களைக் கொண்ட வத்திக்கான் அறிவியல் கழகத்தின் உறுப்பினராவதைப் பெரும் மதிப்பாகக் கருதுகின்றேன்” என்று கூறியுள்ளார். இந்த விஞ்ஞானி தற்போது பெங்களூரிலுள்ள இன்ஸ்டியூட் ஒ.்.ப் அட்வான்ஸ்டு ஸ்டடீஸ் என்னும் தேசிய கல்வி அமைப்பின் இயக்குனராகப் பணியாற்றி வருகின்றார்.

## அன்னை திரேசாவிற்கு கோவில் கட்ட

### கொசோவோ அரசு அனுமதி



அன்னை திரேசாவினுடைய பெற்றோர்களின் பிறந்த இடமான ‘கொசோவோ’வில் அன்னை திரேசாவிற்கு ஆலயம் கட்ட அந்த நாட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது. பெரிசெரன் ஆலயம் டோட ஜெர்ஜி சர்ச் இன் நீட் என்னும் சர்வதேச நிதியுதவி அமைப்பு இந்த ஆலயம் கட்ட நிதியுதவி வழங்கியுள்ளது.

அன்னை திரேசாவின் சொந்த நாட்டிற்கு கடந்த 12 ஆண்டுகளாக இந்த அமைப்பு உதவி வருகிறது. மேலும் ஆயர் கூறுகையில் “எனது முன்னாள் ஆயரின் கனவான அன்னை திரேசாவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட கத்தோலிக்க கத்தீட்ரல் ஆலயம் வரும் ஈஸ்டருக்குப்பின் கட்டப்படவுள்ளது. எங்களுக்கு அன்னை திரேசா சகோதரியும், குடும்ப உறுப்பினரும் ஆவார்” என்று கூறினார். அன்னை திரேசாவின் பெற்றோர்கள் கொசோவோவைச் சேர்ந்தவர்கள். ஆதலால் அந்நாட்டு மக்களும், அரசும் ஏன் இஸ்லாமிய மக்களும் அன்னை திரேசாவிற்கு ஆலயம் எழுப்புவதில் ஆர்வம் காட்டுகின்றனர். இங்கு 60 ஆயிரம் கத்தோலிக்கர்கள் மட்டுமே உள்ளபோதிலும், மற்ற மக்களுடன் சுமூகமாகவும், வேலைவாய்ப்புக்களுடனும் கத்தோலிக்கர்கள் வாழ்கின்றனர்.


# உள்ளார்ந்த அன்புடன் நமது பார்வையை சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின்மீது பதிப்போம்

## திருத்தந்தையின் தவக்காலச் செய்தி

"தபமும், செபமும் மிகுந்த இந்நாட்களில் உள்ளார்ந்த பங்கேற்புடன் நமது பார்வையை சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின்மீது பதிப்போம். அவர் கல்வாரியில் இறந்ததன் மூலம் கடவுளின் அன்பை நமக்கு நிறைவாக வெளிப்படுத்தியுள்ளார்" என தனது தவக்காலச் செய்தியில் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் தெரிவித்துள்ளார்.

"தாங்கள் ஊடுருவக் குத்தியவரை உற்றுநோக்குவார்கள்" (யோவான் 19:37) என்பதை இந்த ஆண்டு தவக்கால சிந்தனைக் கருத்தாக வைத்துக்கொள்வோம்" என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறினார். எல்லா மனிதர்களுக்காகவும், தம் வாழ்வுப் பலியைச் சிலுவையில் நிறைவாக்கியவருக்கு மிக அருகில் மரியாவோடும், யோவானோடும் தங்கியிருக்கக் கற்றுக்கொள்வதற்கு ஏற்ற காலம் தவக்காலம் (யோவான் 19:25).

குத்தித் திறக்கப்பட்ட இயேசுவின் விலாவை நம்பிக்கையோடு பார்ப்போம். அதிலிருந்து இரத்தமும், தண்ணீரும் வடிந்தன. இரத்தத்தையும், தண்ணீரையும் ஞானஸ்நானம் மற்றும் நற்கருணையின் குறியீடாக திருச்சபைத் தந்தையர் கண்டனர். ஞானஸ்நானம் வழியாக மூவொரு இறைவனின் அன்பில் மூழ்கித் திளைக்க நமக்கு வாய்ப்பு ஏற்பட்டது. தவக்காலத் திருப்பயணம் ஞானஸ்நானத் திருப்பயணம் ஆகும். நல்லாயனான இயேசுவின் அன்பின் அடையாளமான இரத்தம் நற்கருணை என்னும் அருளடையாளம் வழியாக நம்மில் பாய்கிறது.



தவக்காலத்தை நற்கருணை நேரமாக்கி நாம் வாழ்வோம். அப்போது நாம் இயேசுவின் அன்பை உள்ளத்தில் இருத்தி, அந்த அன்பை நமது ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் நம்மைச் சுற்றிப் பரப்பக் கற்றுக்கொள்வோம் என்று திருத்தந்தை மேலும் கூறினார்.

## 2008 ஜூலை 15-20 வரை சிட்னியில் உலக இளைஞர் தினம்

2008 ஜூலை 15 - 20 ஆகிய திகதிகளில் சிட்னி நகரில் 5 இலட்சம் இளைஞர்களுடன் உலக இளைஞர் தினம் கொண்டாடப் - படவுள்ளது. அவுஸ்ரேலியாவின் துணைப் பிரதமர் மார்க்விலே கூறுகையில், "வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மூன்று மாத விசா வழங்கப்படும். இந்த மூன்று மாதத்தில் இந்த விசாவுடன் அவுஸ்ரேலியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் சுற்றுலாப் பயணிகள் பயணிக்க அனுமதிக்கப்படுவர். இந்த உலக இளைஞர் தினத்தை முன்னிட்டு, "Witness the Spirit" என்ற DVD வெளியிடப்படும். உலகமெங்கிலுமிருந்து இளைஞர்களை ஒன்றுகூட்ட ஏற்ற அழைப்பிதழாக அமையும்" என்று கூறினார்.

"இந்த DVDயில் அவுஸ்ரேலியா இளைஞர்கள், நியூ சவுத் வேல்ஸின் அடையாளங்கள் மற்றும் அவுஸ்ரேலிய சுற்றுலாத்துறை பற்றி அறிவிப்புக்கள் இடம்பெற்றிருக்கும். அதேபோல் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட விதத்தில் அழைக்கும் அழைப்பிதழும் இடம் பெற்றிருக்கும்" என்று சிட்னியின் பேராயர் கர்தினால் ஜார்ஜ் பெல் கூறினார்.

## மடுவை சமாதான வலயமாக்கும்படி திருச்சபை கோரிக்கை

அண்மைக்காலமாக மடுப்பிரதேசத்தைச் சுற்றிலும் அதிகரித்துவரும் யுத்தமேகங்களின் அடையாளத்தைக் காணும் மக்கள் பயப்பிராந்தியுடன் தமது நாட்களைக் கழிக்கின்றனர். அங்கு ஏறக்குறைய 15,000 பேர் அடைக்கலம் தேடி வந்துள்ளனர். இரு பகுதியினரிடையேயும் யுத்தம் வெடிக்குமானால் மடுத்தேவாலய வளாகத்தில் அடைக்கலம் தேடிவந்துள்ள மக்கள் சொல்லொண்ணாத் துன்பத்திற்கு முகம்கொடுக்க வேண்டியேற்படும்.

மடுத்திருப்பதிப் பரிபாலகர் அருட்பணி ச. எமிலியானுஸ்பிள்ளை கூறுகையில், "அண்மைக் காலங்களில் மடுத்திருப்பதிக்கு அண்மையில் ஷெல்கள் விழுந்துள்ளன. 500 மீற்றருக்கும் குறைவான பகுதிகளுக்குள்கூட விழுந்துள்ளன" என்றார். இந்தப் பின்புலத்தில் எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் அதிகாரத்தில் உள்ள அனைவரிடமும் விடுக்கும் உருக்கமான கோரிக்கை என்னவெனில், கடந்த ஐந்து ஆண்டு காலத்திற்கும் கூடிய காலம் அமைதி வலயமாகப் பேணப்பட்ட மடுத்திருத்தலத்திற்குத் தூரமாக விலகிச் செல்லுங்கள் என்பதாகும். "மடுத்திருத்தலம் ஒரு தேசிய திருத்தலம்" என்று கூறிய அவர், "இது கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல ஏனைய மறையினரும் ஒன்றுகூடும் வழிபாட்டுத் தலம். ஆகவே இதன் புனிதத்தன்மை என்றும் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்" என்றார். அவர் தொடர்ந்து கூறுகையில் "மனிதாபிமானப் பணியாளர்களின் உயிருக்குக்கூட உத்தரவாதமின்மையால் அவர்கள் உள்ளேயும் வெளியேயும் சென்று தமது பணியை ஆற்றமுடியாத எவ்வித வாழ்வாதாரமுமின்றித் தவிக்கிறார்கள். கறிற்றாஸ் 'செடெக்' வழங்கும் உதவியைக் கொண்டு திருச்சபை மட்டுமே அவர்களுக்கு உதவியளிக்கிறது.

சமூக செயற்பாட்டிற்கான கிறிஸ்தவ அமைப்பு, ஒழுங்குசெய்த ஒன்றுகூடலின்போது 'அமைதி வலயங்கள்' பற்றிய தனது கருத்தை வெளியிட்ட மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை, "யுத்தம், பதில் தாக்குதல்கள் நடைபெறும்போது அதற்குள் அகப்பட்டுக்கொள்ளாத வகையில் விலகிச்சென்று பாதுகாப்பைத்தேடும் உரிமை மக்களுக்கு உண்டு. முன்னைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவிடமும், தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமும் மன்னார் மாவட்டத்தை வன்செயலற்ற பிரதேசமாகப் பிரகடனப்படுத்தும்படி தான் கேட்டுக்கொண்டதாகவும், அவர்கள் அதற்குச் சம்மதித்ததாகவும் கூறினார்.

யாரும் இதற்கு எதிரானவர்கள் அல்ல என்று கூறிய ஆயர், தொடர்ந்து கூறுகையில், "தமக்குரிய பாதுகாப்புடன் இருக்கவேண்டிய உரிமை அனைவருக்கும் உண்டு என்பதை யாவரும் அறிவர். ஆகவே நாம் அமைதி வலயங்கள் என்னும் எண்ணக்கருவை, அன்றேல் ஆயுதம் தாங்கியவர்கள் எவரும் பிரவேசிக்கமுடியாத இராணுவ சூனியப் பிரதேசம் என்பதை செயற்படுத்த வேண்டும்" என்றார்.

## இடைவழியில் திருப்பி அனுப்பப்பட்ட சமாதானத்திற்கான தவக்காலப் பாதயாத்திரை

மன்னார் மறைமாவட்டத்தில் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் தவக்காலப் பாதயாத்திரை இம்முறையும் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இருந்து வவுனியா கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலம் நோக்கிப் புறப்பட்டது. இதில் ஏறக்குறைய 800 பேர் பங்கெடுத்தனர். இந்த யாத்திரை மன்னாரிலிருந்து அதிகாலை 4.30 மணிக்கு புறப்பட்டு காலை 11.00 மணியளவில் முருங்கன் பொலிஸ் நிலையத்தின் அருகே சென்றுகொண்டிருந்தபோது அங்கு நின்ற பாதுகாப்புப் படையினர் யாத்திரையை தடுத்து நிறுத்தியதுடன் மேற்கொண்டு யாத்திரை செல்லமுடியாது எனவும் கூறினர்.

யாத்திரையை வழிநடத்திச் சென்ற திருச்சபை அதிகாரிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நெடுநேரம் நடைபெற்ற வாக்குவாதத்தைத் தொடர்ந்து யாத்திரையை தொடர முடியாத சூழ்நிலை இருப்பதாக மக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. ஏற்கெனவே உரிய அதிகாரிகளிடம் இந்த யாத்திரைக்கான முன் அனுமதி பெற்றிருந்தாலும் முதல் நாள் இரவு யாத்திரை செல்லும் பயணப் பாதையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தைக் காரணம் காட்டியே பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து இந்த யாத்திரை இடைநடுவில் நிறுத்தப்பட்டதாக பாதுகாப்புத் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டது.




## ரஷ்ய ஜனாதிபதி வத்திக்கான் விஜயம்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் வத்திக்கானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

முதன் முதலாக உரோமுக்கு முக்கியத்துவம் வாய்ந்த விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் புட்டின், பரிசுத்த பாப்பரசர் 16ம் பெனடிக்றைச் சந்தித்துள்ளார். இச்சந்திப்பில் உரோமன் கத்தோலிக்கத்திற்கும் ரஷ்யாவிலுள்ள கிறிஸ்தவ மதத்திற்குமிடையிலான உறவை வளர்ப்பதற்கான வழிவகைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இப்பேச்சுக்கள் மிகவும் சாதகமான சூழ்நிலையில் நடைபெற்றதாக வத்திக்கான் தெரிவிக்கின்றது. பாப்பரசரும் புட்டினும் தனிப்பட்ட ரீதியாக மனப்பூர்வமாக 25 நிமிடங்கள் உரையாடியதாக வத்திக்கான் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இருவரும் ஐரோப்பாவிற்கும் ரஷ்யாவிற்குமிடையில் தோன்றியுள்ள வேற்றுமை, ஈராக், ஈரான் விவகாரம் மற்றும் மத்திய கிழக்கு தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளனர்.

புட்டின், சக்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பாக இத்தாலிய பிரதமர் றோமனோ பிறோடியுடனும் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புட்டினுடைய விஜயம் தற்போது சக்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிறோடியுடனான சந்திப்புக்கு திசை திருப்பப்பட்டுள்ளதாக 'பி. பி. சி' செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## தலைமன்னார் பங்கில் செப ஆண்டுப் பாசறை

25.02.2007 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையும் மொத்தம் 200 மாணவர்களுக்கு செப ஆண்டை முன்னிட்டு விஷேட பாசறை இடம்பெற்றது. மத்திய குழு மாணவர்களுக்கு 45 நிமிடம் ஆலயத்திற்குள் தங்களின் இன்றைய நிலைபற்றிய தியானம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வின்போது மறைவாழ்வுப் பணியாளர்களுக்கான உருவாக்கப் பயிற்சி மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இடம் பெற்றது. அருட்சகோதரி நசரேத், அருட்சகோதரி வசந்தா உட்பட 20 பணியாளர்கள் தங்களின் சீருடையுடன் இதில் பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

அருட்சகோதரி பெனிக்னஸ், மற்றும் மூத்த மறையாசிரியர்கள் திரு. சவிரி, திரு. மரியசெல்வம், திரு. செபஸ்தியாம்பிள்ளை ஆகியோர் செபத்தில் இருக்க வேண்டிய மனநிலை, செபத்தின் பண்புகள், செபத்தின் அம்சங்கள், இயேசுவின் செபவாழ்வு ஆகிய தலைப்புக்களில் உரைகளை வழங்கினார்கள்.

ஞாயிறு திருப்பலி மாலை 6.00 மணிக்கு மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி கிறிஸ்து நேசன் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

*தகவல் - சி. கொன்சி குரூஸ், தலைமன்னார் மேற்கு.*

## மன்னாரில் இந்தியக் குழுவினரின் தவக்காலத் தியானங்கள்

கடந்த தவக்காலத்தில் மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களில் தவக்காலத் தியானங்களை நடாத்துவதற்காக இந்தியாவில் இருந்து அருட்பணியாளர் சகாய கிறிஸ்துதாஸ் குழுவினர் வருகை தந்திருந்தனர். கடந்த மார்ச் மாதம் 6ம் திகதி தொடக்கம் 13ம் திகதிவரை இத்தியானங்கள் இடம்பெற்றன.

மன்னார், முருங்கன், வவுனியா மறைக்கோட்டங்களில் பொது வழிபாடுகள் நடாத்தப்பட்டன. அதைவிட 10ம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் பல்வேறு குழுக்களுக்கான தியானம் நடைபெற்றது. அரச, அரசசார்பற்ற பணியாளர்கள், மறையாசிரியர்கள், அன்பிய ஊக்குவிப்பாளர்கள், தன்னார்வப் பணியாளர்கள், திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்கள், மறைமாவட்ட ஆணைக்குழுக்களில் பணியாற்றும் ஊழியர்கள், ஆலயப் பங்கு அருட்பணிப் பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றனர். இத்தியான நிகழ்வுகளை அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா அவர்கள் ஒழுங்கமைத்திருந்தார்.





# சிறுவர் பொழில்




## யாருக்கு உதவி?

இக்னேசியஸ் டனீஸ்,
இலுப்பைக்குளம் பங்கு

முன்னொரு காலத்தில் டாம் என்ற அடிமை தன் முதலாளி உள்ளம் மகிழுமாறு நடந்து வந்தான். சில ஆண்டுகளின் பின் அவரின் நன்மதிப்பையும் பெற்றான். அதனால் டாம் என்ன சொன்னாலும் முதலாளி கேட்டு அப்படியே நடந்து வந்தார். இருந்தாலும் டாம் தனக்கென்று முதலாளியிடம் எதையுமே கேட்டது இல்லை. ஒருநாள் புதிதாக வந்துள்ள அடிமைகளை வாங்க டாமுடன் சந்தைக்கு வந்தார் முதலாளி. அடிமைகளில் கிழவனாக இருந்த ஒருவனைக் காட்டி "ஐயா! எனக்காக இவனை விலைக்கு வாங்குங்கள்" என்று கேட்டான் டாம். அவனைக் கண்டதும் அந்தக் கிழவனின் முகம் வெட்கத்தாலும், கவலையாலும் வாடித் தலை கவிழ்ந்தது.

டாமிற்கு வேண்டியவன் என்று நினைத்து முதலாளி அந்த அடிமையை விலைக்கு வாங்கினான். வீடு திரும்பிய அவர் "டாம், நீ சொன்னபடி அந்தக் கிழவனை விலைக்கு வாங்கி விட்டேன். அவனுக்கு என்ன வேலை கொடுப்பது?" என்று கேட்டார். "அந்த அடிமை என்னுடன் இருக்கட்டும். எவ்வளவு வேலை செய்ய முடியுமோ, அவ்வளவு வேலை வாங்கிக்கொள்கிறேன்" என்றான் டாம். "சரி" என்றார் முதலாளி.

நாட்கள் சென்றன. அவன் அந்தக் கிழவனிடம் மிக அன்பாக நடந்துகொள்வதை எல்லோரும் கவனித்தனர். முதலாளியும் அதைப் பார்த்தார். டாமை அழைத்த அவர் "அந்தக் கிழவனிடம் நீ பேரன்பு காட்டுகிறாய். அவன் செய்ய வேண்டிய வேலைகளை நீயே செய்கிறாய். அவன் உனக்கு என்ன உறவு?" என்று கேட்டார் முதலாளி. "அவன் எனக்கு எந்த உறவும் இல்லை" என்றான். "அப்படியானால் அவன் உன் பழைய நண்பனா?" என்று கேட்ட முதலாளியிடம், "இல்லை, அவன் என் பழைய எதிரி. என் ஊரிலிருந்து வஞ்சகமாக என்னை அழைத்து வந்து, அடிமைச் சந்தையில் என்னை விற்றவர். அவரை அடிமையாகப் பார்த்தவுடன் நான் அடையாளம் கண்டு கொண்டேன். என் சமய ஆசிரியர் என்னிடம், 'உன் எதிரி பசித்திருந்தால் அவனுக்கு உணவு கொடு. தாகமாய் இருந்தால் தண்ணீர் கொடு. ஆடையின்றி இருந்தால் ஆடை கொடு. நீ அன்பு உள்ளவன் என்பதற்கு இதுவே அடையாளம்' என்று சொல்லித் தந்தார். அதைத்தான் நான் இங்கு பின்பற்றுகிறேன்" என்று விளக்கினான் டாம்.



"எத்தனையோ பெரியோர்களைவிட அன்பு என்றால் என்னவென்று நீ நன்றாகக் கற்றுள்ளாய். இனி நீ என் நண்பனாகவே வாழ்நாளைக் கழிக்கலாம்" என்று அவனை மகிழ்ச்சியுடன் கட்டித் தழுவிக் கொண்டார் முதலாளி. ●

## சிந்தனைத் துளிகள்

- அன்பு காட்டு ஆனால் அடிமை ஆகிவிடாதே.
- இரகசியம் கெட்டிக்காரனிடம் புதையலாய் இருக்கின்றது முட்டாளிடம் வெடிகுண்டாக வெடிக்கின்றது.
- வாழ்க்கையில் முன்னேற சொந்தக்காலால் நட. மற்றவர் முதுகில் போகவிரும்பாதே.
- வேதனை மனிதனைக் கொல்லுவதில்லை, கவலைத்தான் மனிதனைக் கொல்லும்.
- முதல்முறை ஏமாறுவது குற்றமில்லை, இரண்டாவது முறை ஏமாறுவது உன் குற்றம்.
- மௌனம் அறிவிற்கு அழகு. பொறுமை திறமைக்கு அழகு.
- கடவுள் வாரம் தோறும் சம்பளம் கொடுப்பதில்லை. வாழ்க்கை முடிவில்தான் கொடுக்கிறார்.

*- ப. நிறஞ்சலா, இல. 35 புதிய மூர்வீதி, மன்னார்.*

## பொன் மொழிகள்

- ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே. கையேந்தி நிற்போரைக் காத்திருக்க வைக்காதே.
- விரைந்து செவிசாய், பொறுத்திருந்து விடை கூறு.
- இன்சொல் நண்பர் தொகையைப் பெருக்கும்.
- இளமை முதல் நற்பயிற்சியைத் தேர்ந்துகொள், முதுமையிலும் ஞானம் பெறுவாய்.
- தீமை செய்யாதே, தீமை எப்போதும் உனக்கு நேராது.
- உன் தந்தையை உன் முழு உள்ளத்துடன் மதித்து நட, உன் தாயின் பேறுகாலத் துன்பத்தை மறவாதே.
- உன் பழைய நண்பர்களைக் கைவிடாதே, புதிய நண்பர்கள் அவர்களுக்கு இணையாக மாட்டார்கள்.
- நீ நன்மை செய்தால் யாருக்குச் செய்கிறாய் என்பதைத் தெரிந்து செய்.
- இனிய உள்ளத்தின் அடையாளம் மலர்ந்த முகம்.
- கற்றபின் பேசு, நோய் வருமுன் உடல்நலம் பேணு.
- நாவைக் காப்போர் எதிலும் சிக்கிக்கொள்ள மாட்டார்கள்.
- துணிவுள்ள மனைவியை அடைந்த கணவன் பேறுபெற்றவன்.

*சூ. ஸ்றெலா மெலானி, தோட்டவெளி.*

## நமது நினைவில் இருக்க வேண்டியவை

- ✓ ஒருமுறை பெறுவது – பெற்றோர், சகோதரர், மரணம்.
- ✓ எவரும் எதிர்பாராது வருவது – நேரம், வாய்ப்பு, மரணம்.
- ✓ எவராலும் திருட முடியாதவை – கல்வி, அறிவு, விசுவாசம்.
- ✓ தூய உள்ளத்தோர் செய்வது – தர்மம், உதவி, தியாகம்.
- ✓ ஞாபகத்தில் இருக்க வேண்டியது – நன்றி, கடமை, மரணம்.
- ✓ மிகவும் மதிக்க வேண்டியவர் – தாய் தந்தை.
- ✓ மிகப் பெரிய வெகுமதி – மன்னிப்பு.
- ✓ மிக நல்ல நாள் – இன்று
- ✓ மிகவும் வேண்டியது – பணிவு
- ✓ மிகவும் வேண்டாதது – வெறுப்பு
- ✓ செய்யக் கூடாதது – நம்பிக்கைத் துரோகம்.

*செ. டிலக்ஷன், நானாட்டான்.*

## சிலநொடி சிந்திப்போம்

✠ காலங்கள் கடவுள் பாடும் இராகங்கள். அவை வீணடிக்கப் பட்டுவிட்டால் மீண்டும் கிடைப்பதில்லை.

✠ வாழ்க்கைப்படிகளில் மேலே ஏறும்போது வழியில் சந்திப்பவர்களுடன் அன்பாக இருக்கவேண்டும். ஏனென்றால் இறங்கி வரும்போது அவர்களைச் சந்திக்க நேரிடலாம்.

✠ காதல் என்பது வாழ்க்கை என்ற புத்தகத்தின் ஒரு பக்கம். ஒரு பக்கம் கிழிந்து விட்டதே என்பதற்காக புத்தகத்தையே மூடிவிடக்கூடாது. அடுத்த பக்கத்தையும் புரட்டிப் பார்க்க முயற்சி செய்யவேண்டும்.

*திருமதி. ஐ. அன்ரன் புஷ்பராஜ், பூவரசன்குளம்*

## மெல்லச் சிரிங்க.. மெல்லச் சிரிங்க..



விமல் காலை விழித்தவுடன் தனது மாட்டைத்தேடிச் செல்கின்றான். அப்பொழுது பொலிஸ் அவனை அழைக்கிறது.

பொலிஸ் : கத்தாக் கரண்ட

விமல் : ஆம், கட்டித்தான் போட்டிருந்தன் சேர்.

பொலிஸ் : மொக்கக்த

விமல் : ஆம் மொக்கு மரத்திலதான் கட்டிப்போட்டன் சேர்.

*சோ. ஞானதீபா அஞ்சுகா, நானாட்டான்*

* * * * *

நண்பன் : உங்கட வியாபாரம் எப்படிப் போகுது?

வியாபாரி : தலைகீழாய்ப் போகுது!

நண்பன் : எப்படி?

வியாபாரி : ஆரம்பத்தில் வைர வியாபாரம் பண்ணினேன். இப்ப ரவை வியாபாரம்...

*தொ. மேரி கில்டா, பெரிய பண்டிவிரிச்சான், மடு*

* * * * *

சேவகன் 1 : நமது மகாராணி போருக்குப் போய் எப்படி ஜெயித்தாராம்? நன்றாகப் போரிட்டாராமா?

சேவகன் 2 : அவரும் மன்னர் மாதிரி புறமுதுகுதான் காட்டினாராம். ஆனால் அவருடைய பின்னழகை எதிரி மன்னன் பார்த்துக்கொண்டே இருந்ததால் தோற்றுவிட்டானாம்.

*ம. கில்டா, 109-பெரிய பண்டிவிரிச்சான்.*

* * * * *

சிறுவன் : ஐயா ஒரு முழம் இட்லி கொடுங்க

கடைக்காரர் : இங்க இட்லி எல்லாம் முழத்திற்குக் கொடுக்கிறதில்ல தம்பி.

சிறுவன் : அப்ப ஏன் ஐயா முன் பலகையில் பூமாதிரி இட்லி கிடைக்கும் என்று போட்டு இருக்கிறீங்க? நாங்க பூவை முழத்துக்கு அளந்துதான் வேண்டுறது.

ஆசிரியர் : டேய் கண்ணா. நான் தாற ரொபியில் இரண்டை சாந்திக்கும் மூன்றை மீனாவுக்கும் கொடுத்தா உனக்கு என்ன கிடைக்கும்.

மாணவன் : எனக்கு இரண்டு Girl Friend கிடைக்கும் ரீச்சர்.

* * * * *

மீனா : தாத்தாவுக்கு 80 வயது. இன்னும் ஒரு பல்லுக்கூட கீழ விழவில்லை.

நண்பி : அட ஆச்சரியமா இருக்கே எப்படி?

மீனா : பல்லு ஆடும்போது அவர் கீழே விழவிடாம கையால பிடுங்கி எடுத்திடுவார்.

*கி. செறின் சியாமா, குமானாயங்குளம்*

* * * * *

பொலிஸ் : என்ன ஏதோ மூட்டையைப் பதுக்கி வீட்டில் வைத்திருக்கிறாய் என்று ரிப்போட் வந்திருக்கே. நட வீட்டிற்கு.

திருடன் : சத்தியமா ஒரு மூட்டையும் இப்போது வீட்டில் இல்லைங்க. மருந்து அடிச்சு எல்லாவற்றையும் அழிச்சுட்டன்.

*தி. சுஜி, புதுக்கமம், உயிலங்குளம்*

* * * * *

லோகு : பெண்ணே! என் இதயத்தில் வருவாயா?

ஜெனிஸ் : செருப்பைக் கழட்டவா?

லோகு : சேச்சே! என் இதயம் என்ன கோயிலா? அப்படியே வா பறவாயில்ல!

*செ. சோபா சயந்தினி, வண்ணாகுளம், ஆட்காட்டிவெளி*

# கவிதைப் பூக்கள்

## கடன் கொடுங்கள் கணக்கில் வரவு வரும்

பொன்னும் மணியுமல்ல பொருள் பண்டமல்ல – நீங்கள்
பொறுமையைக் கடன் கொடுங்கள்.
அமுக்கிக் குலுக்கியல்ல அள்ளிச் சொரிந்துமல்ல – நீங்கள்
அன்பினைக் கடன் கொடுங்கள்.

மாடமாளிகையல்ல கூட கோபிரமல்ல – நீங்கள்
மன்னிப்பைக் கடன் கொடுங்கள்.
காணி பூமியல்ல காசும் பணமுமல்ல – நீங்கள்
கருணையைக் கடன் கொடுங்கள்.

நகை நட்டுமல்ல சொத்து சுகமுமல்ல – நீங்கள்
நற்பண்பைக் கடன் கொடுங்கள்.
வாரியிறைத்துமல்ல வழித்துத் துடைத்துமல்ல – நீங்கள்
வாய்மையைக் கடன் கொடுங்கள்.

வாழ வழியுமின்றி வருந்தும் வறியோருக்கு – நீங்கள்
தானம் கொடுங்கள் மானக்கடன் கொடுங்கள்.
பணத்தைக் கடன் கொடுத்தால் - அது
பிணம் வரைதான் திரும்பி வரும்.

குணத்தைக் கடன் கொடுங்கள் குவலயமே வாழ்வுபெறும்.
அழிவுள்ள கடனையல்ல அழிவில்லாக் கடன் கொடுங்கள்
ஆண்டவனை வாங்குங்கள் கணக்கில் வரவு வரும்
அழியாத செல்வமாய் நம்வாழ்வு சிறந்தோங்கும்.

*அ. ஜெசி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை*

## செப வாழ்வு



செபமே வாழ்வு, வாழ்வே செபம்.
செல்வம் அமைதியை இழக்கும்
செபம் அமைதியை ஏற்கும்
செய்திடுவோம் என்றும் செபம்!

செபிக்கக் கற்றுத் தந்தார் - யேசு
செப வாழ்வு வாழ்ந்திட்டார் மரியன்னை.
செபத்தினால் விசுவாசம் வளர்த்திடுவோம் - நாம்
செய்வன திருந்தச் செய்திடுவோம்.

என்னைத் தேடு சகலதும் உன்னைத் தேடும்
என்னும் யேசுவின் மொழியினை உணர்வோம்
ஜெஸ்தமனியிலும் உருக்கமாக செபித்த
யேசுபிரானின் பாதைதனைப் பின்பற்றிடுவோம்


*செ. சோபா சயந்தினி, ஆண்டாங்குளம்*

## போராட்டம்

எம் மதத்தைக் காக்க தம் உயிர் கொடுத்து
கல்லறைத் தொட்டிலில் கருகிப்போன
எம் வேத சாட்சிகளின் வீரங்கள் மறையவில்லை.
அவர்கள் வளர்த்த எம் வேதத்தை மறைய விடலாமா?
எத்தனை சபைகள் வந்தால் என்ன?
எத்தனை மதங்கள் வந்தால் என்ன?
அத்தனையும் வந்தாலும்
எம்மதத்தை அழிக்க விடமாட்டோம்.

*ம. கொண்சலிற்றா, ஆட்காட்டிவெளி.*

## நம்பிக்கை



நம்பிக்கை உள்ளவர்களுக்கு
றோஜா மலர் தெரிகிறது.
நம்பிக்கை அற்றவர்களுக்கு
அதில் உள்ள முள் மட்டுமே தெரியும்.

ஒருநாள் எல்லோரும் நல்லவர்கள்
ஆவர் என்பது நம்பிக்கை.
இன்று எல்லோரும் நன்றாக
இருப்பதாக நினைப்பது கற்பனை.

வாய்ப்புக்கள் வரும்போது விருப்புடன்
அதைப் பயன்படுத்திக் கொண்டால்
நம்பிக்கை தானாக வரும்
தூங்கிக்கொண்டிருப்பவர்களை
நம்பிக்கை தட்டி எழுப்பாது.

*ம.றோகன், சுண்டிக்குளி, முருங்கன்.*

## துளிப்பா

**சமாதானம்**
அனைத்து உள்ளங்களும்
ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்
ஓர் விடியல்.

**மனம்**
நினைவுகள் சிதறிடாது
சேமிக்கும் வங்கி.

**வாழ்க்கை**
விடைகாண முடியாது
விதி வரைந்துவிட்ட வினா.

**தோல்வி**
உன்னை நீயே
அறிவதற்காய் கிடைத்திடும்
ஓர் வாய்ப்பு.

**கல்லறை**
தேடல் இன்றி
கிடைத்திடும் இறுதியான
உறுதியான சொத்து.

*- றூபி விமலதாஸ், நவாலி, யாழ்ப்பாணம்.*





## உயிர்ப்பு விழா சிறப்பிதழ்...

# உயிர்ப்பில் வாழ எழும் தடைகள்



### வாழும் வரலாற்று நாயகர் இயேசு!

தடைகளைத் தகர்த்து தனித்துவம் படைத்து இத்தரணியை மீட்க வந்த கிறிஸ்து, தாம் பெற்ற புதுவாழ்வை உலகினர் அனைவருக்கும் பகிர்ந்தளிக்க விரும்பினார். எனவேதான் 'இறையாட்சி' என்ற ஈடுஇணையற்ற அமைப்பை உருவாக்கினார். அந்த அமைப்பில் அங்கம்பெற தங்கம் நிகர் திருச்சபையை மாபெரும் கொடையாகவும், வலிமைமிகு ஊடகமாகவும் தேர்ந்தளித்தார். அந்தத் திருச்சபையின் வழியாகத் தமது உடனிருப்பை உணர்த்தி, தம்மில் நம்பிக்கை கொண்டோர் உள்ளங்களில் 'உயிர்த்த ஆண்டவராக' உலா வருகிறார்.

'உயிர்ப்பு' என்பது சொல்லளவில் சுகம் தரும் சூத்திரம் அல்ல. மாறாக அது ஓர் அனுபவ ஊற்று. அந்த உயிர்ப்பு அனுபவத்தைப் பெறுபவர்களாக நாம் வாழவேண்டியது அவசியம். ஆனால் அதனைப் பெறுவது அத்துணை எளிதன்று. பன்முனைத் தாக்குதலாய் உருவெடுக்கும் பற்பல தடைகளிலிருந்து நாம் விடுபடவேண்டும்.

### படையெடுக்கும் தடைகள்

வெற்றி என்பது இறுதி நிலை. இயேசு பெற்ற வெற்றியை எண்பிக்கும் வெளிப்பாடு அவரது உயிர்ப்பு. அவரது உயிர்ப்பில் நாம் பங்குபற்றி வாழ்வாங்கு வாழ விரும்புவது நமது உரிமை. இந்த உரிமையை உடைப்பவை நாம் செய்யத் தவறிய கடமைகள். அந்தக் கடமைகளைக் கண்விழித்துப் பார்ப்போம். அதுவே உயிர்ப்பு அனுபவத்திற்குக் குறுக்கிடும் தடைகளைத் தகர்க்கும் ஒப்பற்ற வழிமுறையாகும். இதோ படையெடுக்கும் தடைகள்.

#### அ. இறைவார்த்தையில் முழு நம்பிக்கையற்ற நிலை

திருவிவிலியம் முழுவதும் இறைவனது வார்த்தைகள் செயல்வன்மை மிக்கவை என்றும் அவற்றை வாழ்வாக்குவோர் நிலை வாழ்வை, விடுதலை வாழ்வைப் பெறுவர் என்றும் படித்து அறிந்திருக்கும் நம்மால் அவற்றை முழுமையாக நம்ப முடியவில்லை. இயேசுவை நேருக்கு நேராகச் சந்தித்தும் அனுபவித்தும் அவரது வார்த்தைகளில் ஐயுறும் நிலை கொண்ட அவரது சீடர்களைப்போல் (யோவா 6:60) நாம் வாழ்வது ஆபத்தானது.

#### ஆ. விடுபட விரும்பாமை

தீமை என்று தெரிந்தும், அதன் பயனை அனுபவித்தும் அதனின்று விடுபட விழையாமல் தொடர்ந்து அதில் ஊறித்திளைக்க விரும்பும் உணர்வற்ற போக்கு. இதற்கு திருத்தூதர் பணி 5:1-10 தக்க சான்று. உடைமைகளைப் பதுக்குதல் தவறு என்று பலமுறை வலியுறுத்தப்பட்டும் தங்கள் வாழ்விலே மண்ணை அள்ளிப்போட்டுக் கொண்ட அனனியாவும் சப்பிராவும் நமக்கு எச்சரிக்கை. இந்த நிலையில் தொடர்வோர் உயிர்ப்பு அனுபவத்தைக் கனவிலும் அனுபவிக்க முடியாது.

#### இ. வரும் துணை நாடாமை

இன்னலில் உழன்று, அறியாமையில் மிதக்கும் தங்களுக்கு உதவிட வரும் அன்புக் கரங்களை அலட்சியத்தாலும், அகந்தையாலும் போலிக் கௌரவத்தாலும் உதறித் தள்ளுவோர் உயிர்ப்பு அனுபவத்தைப் பெறமுடியாது. பிலாத்துவின் மனைவி இயேசுவை நேர்மையாளர் என்று கூறியும், அவளது ஆலோசனையை பிலாத்து ஏற்கவில்லை. (மத்தேயு 27:19)

#### ஈ. உறவுடன் உயராமை

உறவுகளை 'உறிஞ்சும் அட்டை'களாக மட்டுமே கருதி அவர்களது நியாயமான தேவைகளில்கூட, தங்களால் அவர்களுக்கு மேலான உதவிபுரிய வாய்ப்பும் வசதியும் இருந்தும்கூட அதைச் செய்யாதவர்கள், சுயநலத்தால் தமது உல்லாச வாழ்வை இழந்துவிட விரும்பாதவர்கள் உயிர்ப்பு அனுபவ உரிமை கோர முடியாதவர்கள் உள்ளனர். எல்லாருடனும் நல்லுறவுகொண்டு வாழும் இறையாட்சியின் உயிர் மூச்சாம் அன்புறவு வாழ்வு நமக்கு ஒரு சவால். யோவான் 15:1-10 ஐ மனதில் கொள்வோம். உண்மையான உறவாக இயேசுவைக் கொள்வோர் நிலைவாழ்வு பெறுவர்.

#### உ. நிலையை உணராமை

I know my hight – எனது நிலையை நான் அறிவேன் என்பர் பெரியர். தங்களது பலம், பலவீனம் அறிந்து அதற்கேற்ப தம் சொல், செயல், சிந்தனைகளை வெளிப்படுத்துவதே விவேகம். ஆனால் தாங்கள் இருக்கும் பாவ, அடிமை, சுயநல, இருள், சாவு நிலையை அறியாதவர், அறிய வாய்ப்பைத் தேடாதவர் உயிர்ப்பு அனுபவத்தைப் பெறல் அரிதினும் அரிது. காண்க : 1யோவான் 1:6

#### ஊ. இறப்பினை வெறுக்காமை

தமது சொல், செயல் அனைத்தும் தம்மை மனமடிவுக்கு இட்டுச் செல்கின்றன என்பதை அறிந்தும், அவற்றிலிருந்து விடுபட்டு வாழாதவர்கள் உயிர்ப்பு அனுபவத்திற்கு அப்பாற்பட்டவர்கள். தமது வாழ்வு சிதையும் நிலையை தாம் விரும்பினால் தடுத்து நிறுத்த முடியும் என்பதை ஏற்றுக்கொள்ளாதவர்களைத் தூண்டுகின்றார் காணாமற்போன மகன் உவமையின் கதாநாயகனான இளையமகன் (லூக 15:18-19). இறந்தவன் வந்தான் தனது இணையற்ற நம்பிக்கையால் (காண்க: லூக் 15:32).

#### எ. உயிர்த்ததைக் காட்டாமை

பேய்கள் கூட இயேசுதான் கிறிஸ்து என்றும் அவர்தான் மெசியா என்றும் நம்புகின்றன. ஆனால் என்ன நன்மை? அவை மாற்றமின்றி உலாவுகின்றன.

'மனம் மாறியவர்கள் அதைச் செயலில் காட்டவேண்டும்' என்று திருமுழுக்கு யோவான் (காண்க: லூக் 3:8) கூறுகிறார். எனவே கட்டுக்களிலிருந்து விடுபட்டு, காயங்களால் நேயமடைந்து தங்களை கடவுள் துணையால் உயிர்ப்புக்கு உட்படுத்திக் கொண்டவர்கள்' அதைத் தம் செயல்களால், பகிர்தலால் அடுத்திருப்போருக்குத் தம் சான்று வாழ்வின் வழியாகத் தாம் பெற்ற உயிர்ப்பினைக் காட்ட வேண்டும். இல்லையேல் உயிர்த்தும் ஒரு பயனும் இல்லா நிலையே உருவாகும்.

இவை போன்ற எத்தனையோ தடைகள் உயிர்ப்பை அனுபவிக்க முடியாமல் தடுக்கின்றன.

### ஒளியாக உலா வருவோம்!

காலங்காலமாய் காத்துக் கிடந்த மக்கள் கடவுளின் மகனது கருணை மழையில் தங்களை நனைத்துக்கொண்டார்கள். எப்படியெனில் தமக்கு அடுத்திருப்போருடன் நல்லுறவில் வாழ்ந்து, அவர்களது இன்ப துன்பங்களில் தம்மை இணைத்துக்கொண்டார்கள். இறைவேண்டலில் நிலைத்திருந்து, மற்றவர்கள் உயர்வில் அக்கறைகொண்டு வாழ்கின்றார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்டவர் இயேசு தமது பிறப்பு மற்றும் உயிர்ப்புச் செய்தியாகப் பகிர்ந்து அளித்த அமைதியின் கருவிகளாகத் திகழ்வதன் வழியாக, நாமும் நமது அன்றாட நிகழ்வுகளில் இறைவனது திட்டத்தை உணர்ந்து அவரது வார்த்தையின் ஒளியில் வாழ்வோம். அதே ஒளியைப் பிறரும் அறியும்விதத்தில் நமது செயல்கள் அமையட்டும். ●

(நன்றி - தோழன்)



# கிறிஸ்துவின் உயிர்ப்பும், மண்ணில் மனித வாழ்வும்

"அப்பாடா, ஒரு வழியா இந்தத் தவக்காலம் முடியப் போவுதடா. இந்த வருஷம், எங்க அம்மா என்னை மாலை போட்டுகிட்டு வேளாங்கண்ணி போயிட்டு வரச்சொல்லிட்டாங்க. ரொம்ப கஷ்ட காலம்டா. ஆமா! ஒரு சிகரெட் புடிக்கனும்னாகூட முடியல்ல. தண்ணி அடிக்க முடியல்ல. போதும்டா சாமி. ஈஸ்டர்க்கு மாலையை கழட்டி வச்சிட்டு வந்துடுறேன். நல்லா என்ஜோய் பண்ணனும்" பீட்டர் அருணிடம் புலம்பிக் கொண்டிருந்தான்.

இதை ஏதோ ஒரே ஒரு கிறிஸ்தவனின் புலம்பலாக என்னால் கருத முடியவில்லை. ஏனெனில் கிறிஸ்தவர்கள் பலரின் புலம்பல்தான் இது. கிறிஸ்துவைப் பின்பற்றாமல் வாழும் கிறிஸ்தவர்கள் அதிகரித்து வருவது கண்கூடானது. இதற்கு முக்கிய காரணம், அவர்கள் இந்தத் தவக்காலத்தை வயதானவர்களுக்கும் பக்திமான்களுக்கும் அல்லது சாமியாருக்கும், கன்னியர்களுக்கும் மட்டுமே என்று கருதுவதுதான்.

சிலருக்கு விரதம் இருப்பது, திருமணங்களுக்குத் தடை விதிப்பது போன்ற காரணங்களுக்காகத் தவக்காலத்தின்மீது வெறுப்பு. வேறு சிலர், "இந்தப் பாதருக்கு வேலை இல்லையா? பிறக்கிறதும், சாகிறதும்..." - இப்படியும் பல புலம்பல்கள். இதற்குக் காரணம், இதன் பொருளை நாம் புரிந்துகொள்ளாததுதான்.

இயேசு இவ்வுலகிற்குக் கொணர்ந்த மாபெரும் மீட்பின் நாளான, மகிழ்ச்சி நிறை உயிர்ப்புப் பெருவிழாவுக்கான மாபெரும் தயாரிப்புத் தான் இந்தத் தவக்காலம். இரத்தினச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தவக்காலமின்றி உயிர்ப்புப் பெருவிழா இல்லை. 'உயிர்ப்பு' என்னும் வார்த்தைக்கு அர்த்தம் தருவது தவக்காலம்தான். பலருடைய வாழ்க்கை எப்போதும் தவக்காலமாய் அமைந்துவிட்டது என்பது நிசர்சனம். தவக்காலத்தை இங்கே சோதனையும், சோகமும் வேதனையும் நிறைந்த ஒன்றாகக் கருதுவோம் (விவாதத்திற்காக). இத்தகைய வாழ்க்கையிலிருந்து நமக்கும் உயிர்ப்புத் தேவை.

தவக்காலத்தைப் பாவத்தில் உழன்று, மகிழ்ச்சி இழந்து வாழும் காலமாகக் கருதினால், அத்தகைய நிலையிலிருந்தும் நாம் உயிர்க்க வேண்டும்.

நம் வாழ்வில் உயிர்ப்பா? என்ன அது? இயேசுவின் உயிர்ப்புக்கும் என்னுடைய உயிர்ப்புக்கும் என்ன சம்மந்தம்? இவற்றையெல்லாம் சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

உயிர்ப்பு: கல்லறை பிளந்த விழா, பூமி அதிர்ந்த விழா, பாவம் தோற்ற விழா, சாவின் கொடுக்கு ஒடிக்கப்பட்ட விழா, மீட்பு மலர்ந்த விழா. இதுதான் இறைமகன் இயேசு மூன்றாம் நாள் உயிர்த்த விழா. இது இயேசுவின் மானிடப் பிறப்பிற்குக் கிடைத்த வெற்றி, உண்மைக்குக் கிடைத்த வெற்றி, நீதிக்குக் கிடைத்த வெற்றி. இயேசுவின் உயிர்ப்பின்றிக் கிறிஸ்துவ மறையே இல்லை. ஏனெனில், இயேசு உயிர்க்கவில்லையெனில், உயிரைப் பொருட்படுத்தாது கிறிஸ்துவத்தைப் பரப்பியிருக்க மாட்டார்கள். கடல்கடந்து மறைபரப்ப ஆர்வம் வந்திருக்காது. மண்ணில் அன்பு மலர ஒரு வழி பிறந்திருக்காது. நீங்களும், நானும் கிறிஸ்தவன் என்பதே கிறிஸ்து உயிர்த்ததின் ஒரு பெரும் அடையாளம். சுருக்கமாகச் சொல்லவேண்டுமெனில், புனித பவுலின் வார்த்தைகளில், "கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால் எங்கள் தூதுரை பொருளற்றதே. உங்கள் நம்பிக்கையும் பொருளற்றதே" (1கொரி 15:4)

இந்த 'உயிர்ப்பு', விசுவசிப்பவர்களுக்கு மட்டுமே தன் தாக்கத்தை ஏற்படுத்தமுடியும். இயேசுவை, அவருடைய உயிர்ப்பை நம்பாத ஒரு கூட்டம் இம்மண்ணில், ஏதோ வாழ்ந்தது, மறைந்தது, இடம் தெரியாமல் மறைந்துபோனது. ஆனால் விசுவசித்த மக்கள் வாழ்வில்தான் எத்துணை மாற்றங்கள்! இந்த மாற்றம்தான் ஒரு புதிய வரலாற்றை மண்ணில் உருவாக்கியிருக்கிறது. தூங்கிக் கொண்டிருந்த இவர்கள் துயிலெழுந்தனர். கடவுளைக் கண்ணால் காணும் பேறுபெற்றனர். இயேசுவைப் "பெயரளவில் பின்பற்றிய" இவர்கள், பிறகு கிறிஸ்தவர்கள் எனப்பெயர்பெற்று "வாழ" ஆரம்பித்தார்கள். விவிலியத்தில் 'பெயர் மாற்றம்' என்பது ஒரு 'பெரிய மாற்றம்', 'வாழ்வு மாற்றம்'. உதாரணமாக: ஆபிராம் - ஆபிரகாம் ஆனார். யாக்கோபு - இஸ்ரயேல் ஆனார்.

அதேபோல் இவர்களின் பெயர்மாற்றமும் ஒரு பெரிய வித்தியாசத்தை வாழ்வில் ஏற்படுத்தியது. எல்லாம் கிறிஸ்துவின் உயிர்ப்பு கொடுத்த துணிவுதான். இறந்தவர்களாய் நடமாடிய அவர்கள் உயிர்த்தெழுந்தார்கள்.

இயேசுவுடன் மானுடமும் மகிமைக்கு உயர்த்தப்பட்டது. நம்பிய அனைவரும் உயர்த்தப்பட்டனர். இயேசுவின் உயிர்ப்பு மறுமலர்ச்சி அடைந்த சமுதாயத்தை உருவாக்கியது. அதில் உண்மைக்கு முதலிடம், நேர்மைக்கு மணிமகுடம், நீதிக்கு நிரந்தர இடம். மூடியிருந்த வீட்டுக்கதவுகள் மீண்டும் சூரிய வெளிச்சத்திற்காகத் திறக்கப்பட்டன. சுவாசிக்கவே பயந்தவர்கள் தென்றலுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். வெளியுலகைப் பார்க்கவே பயந்தவர்கள் பூமித்திரையைக் கிழித்துக்கொண்டு கல்லறை நோக்கி ஓடுகின்றார்கள்... ஆம், மாற்றம், மலர்ச்சி, உயர்ச்சி. இதுதான் இயேசுவுக்குப் புகழ்ச்சி.

இந்த உயிர்ப்பு கொணர்ந்த வாழ்வு அதிசயமானது. முதல் சீடர்கள் நற்செய்தியை அறிவித்தனர். அதன்படி வாழ்ந்தனர். இந்தச் சமூகத்தில் பகை இல்லை, பகட்டு இல்லை, தீமை இல்லை, தீவிரம் இல்லை, மாறாக அன்பு வாழ்ந்தது, பண்பு நிலைத்தது, பாசம் தழைத்தது. இதனால்தான் செபிப்பதிலும் பகிர்தலிலும் நிலைத்திருந்தனர் (திருத்தூதர் பணிகள் 2:42).

இன்று 'கிறிஸ்தவர்கள்' என அழைக்கப்படும் நாமும் நம் விசுவாச வாழ்வை ஆராய்ந்து பார்ப்போம். முதலில் நாம் அவ்வாறு அழைக்கப்படத் தகுதியுள்ளவர்களா? உயிர்த்த இயேசுவுக்குச் சாட்சி பகர்ந்துகொண்டிருக்கிறோமா? சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். 'பாஸ்கா' என்பதற்கு 'கடத்தல்' என்பது பொருள். 'உயிர்ப்பு' தரும் விளக்கமும் அதுதான் எனில், நாமும் நம்முடைய தற்போதைய பாவநிலையைக் கடந்துவிட வேண்டும்.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் தலைமுறை, தலைமுறையாக மறக்காத ஒன்று இருக்குமென்றால் அது எகிப்திலிருந்து புறப்பட்ட பாஸ்கா அல்லது 'கடத்தல்' விழாவாகும். பிறந்த குழந்தைகள் முதல் படித்த 'ரபிகள்' வரை தெரிந்திருக்க வேண்டியிருந்த நிகழ்வும் அதுதான். இதற்குக் காரணம் காண்பது மிக எளிது. அதுதான் அவர்கள் வாழ்வுக்கு ஒரு அர்த்தத்தைக் கொடுத்தது, புதுப்பொலிவைக் கொடுத்தது.

இந்தக் கடத்தல் (பாஸ்கா), இயேசு, இறப்பிலிருந்து உயிர்ப்பிற்குக் கடந்து சென்றதற்கு ஒப்பிடப்படுகிறது. அவருக்கும், இதுதான் (மானிடப் பிறப்பிற்கு) ஒரு அர்த்தத்தைத் தந்தது. எனவே, நாமும் ஓர் அர்த்தமுள்ள வாழ்வை வாழ வேண்டுமெனில் நாமும் 'கடந்து செல்ல வேண்டும்'. இந்தச் செய்தியைப் புனித பவுல் வேறொரு கோணத்தில் படம்பிடித்துக் காட்டுகிறார்.

"நம்முடைய பழைய இயல்பு அவரோடு சிலுவையில் அறையுண்டது. கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நம் விசுவாசம்" (உரோ 6:5-8). எனவே நம் பழைய இயல்புகளுக்கு நாம் கடக்க அல்லது மரிக்க அழைக்கப்படுகிறோம். அப்போதுதான் மகிமை பெற்ற வாழ்வுக்கு உயிர்ப்போம். இது ஓர் உயிர்போகும் நிகழ்வு.

தொடர்ச்சி 19ம் பக்கம்...

# கலை இலக்கியச் சாளரம்

## வாழ்வும் கலையும்

ஜெயா பாலாஜி, முருங்கன்.



கலை மனித வாழ்விலிருந்து ஊற்றெடுப்பதும் அதனைப் பிரதிபலிப்பதும் ஆகும். வாழ்வின் பிரச்சினைகளையும், பிரச்சினைகளின் காரணங்களையும் கலையின் வாயிலாக உணர்த்த முடியும். உலகைச் சரியாக புரிந்து கொள்ளவும், ஆரோக்கியமாக உணர்வுகளையும், பெறுமதி வாய்ந்த அனுபவங்களையும் கலைமூலம் பெருக்கிக் கொள்ளலாம். வாழ்வில் நம்பிக்கையையும், உற்சாகத்தையும் பெற்றுக்கொள்ள கலை உதவுகின்றது.

மனித உறவுகளும், நடத்தைகளும் மனதினால் தீர்மானிக்கப்படுகின்றன. அந்த மனதினை நெகிழ்த்த, பதப்படுத்த, மாற்ற கலையினால் இயலும். பல முரண்பாடுகளுக்கு மத்தியிலும் சில விழுமியங்களைப் பேணுவதில் ஆர்வம் கொண்டது மனித சமூகம். சமூகநலன் பேணும் ஆர்வத்தை, அழகியல் விருப்பத்தை கலை மெல்ல மெல்ல மனிதனிடம் வளர்க்கின்றது.

இயந்திர மயமாகிக்கொண்டிருக்கிற இன்றைய அவசர உலகில், மனிதனும் இயந்திரத்தோடு இயந்திரமாகிக் கொண்டிருக்கிறான். பகுத்தறிவு சிந்தனைகளும், பரிசோதனைகளும் அறிவுக்கு எவ்வளவுதான் உதவினாலும் உண்மையும் அழுத்தமும் உயிர்த்துடிப்பும் மிக்க கலைகள் இதய உணர்வினைத் தூண்டி வாழ்வை வாழ்வாக வாழவைக்கின்றன.

வாழ்வு செம்மையாக அமைவதற்கு சிறந்த இலட்சியங்கள் வேண்டும். இந்த இலட்சியங்களை அடைவதற்கு ஊடகமாக கலை விளங்குகின்றது. அறம், நீதி, அன்பு, அழகு, ஒழுக்கம் என்பனவற்றை கலை வாழ்வுக்கு வலியுறுத்துகின்றது.

கலை முன்னைய காலத்து மக்கள் வாழ்க்கையை எடுத்துக்காட்டுகின்றது. மக்கள் மதித்த மனித விழுமியங்களை கலை உள்ளடக்கி உள்ளது. அக்காலகட்டத்தில் நிலவிய அரசியல், சமூக பொருளாதார, பண்பாட்டு, ஆன்மீக நிலைமைகளை உணர்த்துவனவாக கலைகள் விளங்குகின்றன.

மனிதர்களுக்கு உணவு, உறையுள் வாழ்க்கை வசதிகளுக்கு அப்பாலும் சில முக்கியமான தேவைகள் உள்ளன. அவை நிறைவுசெய்யப் படாவிடின் மனித உள்ளத்தில் உடைவு, சிதைவுகள் ஏற்படும்.

மனிதனின் உள்ளரங்கத் தேவைகளை கலை பூர்த்தி செய்கின்றது. இசை, நடனம், கவிதை, நாடகம், சிற்பம், இலக்கியம் முதலிய அழகியற் கலைகள் மனித மனங்களை மகிழ்ச்சிப்படுத்தி அமைதி அளிக்கின்றன. கலை மனித ஆற்றலை விருத்தி செய்கின்றது. தம் மொழியை, இனத்தை நேசிக்க வழிகாட்டுகின்றது. ஒரு இனத்தின் பெருமை, உயர்வு, தனித்துவம் என்பனவற்றை பிரதிபலிக்கிறது.

வாழ்விலிருந்து மலர்வதுதான் கலை. அவ்வாறு மலர்ந்த கலை வாழ்வு மேலும் வளமும் செம்மையும் பெற உதவுகின்றது. வாழ்வின் பிரச்சினைகளைத் தீர்க்க கலையினால் முடியுமா? என்பது கேள்விக்குரியதே. முற்றாகத் தீர்க்க முடியாது போனாலும், பிரச்சினைகளை உருவாக்குகின்றவனும், எதிர்நோக்குகின்றவனும், தீர்க்க வேண்டியவனுமாகிய மனிதனது உள்ளங்களை சிந்திக்க வைக்க நிச்சயம் கலையினால் முடியும்.

அறிவியலுக்கும், கலைகளுக்கும் சம முக்கியத்துவம் இருத்தல் அவசியம். இவ்விரண்டின் சமநிலை வளர்ச்சியே உலகின் மனித குல மேம்பாட்டிற்கு வழியாகும். ●

## சிறுகதை

## கீறல்கள் .................!

அ. அருள்சுரேசா,
காத்தாங்குளம், வட்டக்கண்டல்.

அதிகாலை சாரளத்தினூடாக வந்த சூரியன் கண்ணைப் பறித்துக்கொண்டு செக்கச் செந்நிறமாக வானமதில் இளம் படியனாய் சிறகொளியை வீசிக்கொண்டு வந்தான். சின்னச் சூரியனைக் கண்டு கண்விழித்தாள் சுகிர்தா. ஏற்கனவே ஐந்து மணிக்கெல்லாம் கண்விழிக்கும் சுகிர்தாவுக்கு இப்பொழுது நான்கு, ஐந்து மாதங்களாக விடிவதோ இருள்வதோ தெரிவதில்லை. அவள் ஒரு நடைபிணமாகவே காணப்பட்டாள்.

எப்படி எல்லாமோ சுதந்திரப் பறவையாய் வீட்டின் குலவிளக்காக சந்தோஷ வானில் சிறகடித்துக்கொண்டிருந்த சுகிர்தா சாதாரண ஒரு இளைஞனால் இப்படி மாறிப்போனாள்.

ரமேஸ்! அவன்தான் சுகிர்தாவின் பக்கத்து வீட்டுக்காரன். சிறுவயது முதல் சுகிர்தாவும் ரமேசும் நண்பர்களாகவே இருந்தனர். சுகிர்தா வீட்டில் என்ன விசேஷம் நடந்தாலும் அதில் ரமேசும் கலந்துகொள்வான். விசேஷத்தில் கலந்துகொள்வது அவனுக்கு ஒரு கலை என்றே சொல்ல முடியும். அதேபோல ரமேஸ் வீட்டில் என்ன நடந்தாலும் சுகிர்தாவும் முழுமூச்சாகக் கலந்துகொள்வாள். எது எப்படி நடந்தாலும் ரமேஸ், சுகிர்தா நட்புத் தொடர்ந்தது.

சுகிர்தா ரமேசை தன் சகோதரன் என்ற வகையிலும், உற்ற நண்பன் என்ற நோக்கிலும் அவனை மிகவும் அன்பு செய்தாள். ஆனால் அதை ஒரு பொருட்டாகக் கொண்ட ரமேஸ் தனது காதலை வெளிப்படுத்துவதற்கு காத்திருந்தான், சந்தர்ப்பம் அவன் எதிர்பார்த்தபடியே கிடைத்தது. தன் காதலை வெளிப்படுத்திவிட்டான். ஆனால் சுகிர்தா இதற்குச் சம்மதிக்கவில்லை. ரமேசின் நிலை விபரீதமாகிவிட்டது.

சில நாட்களிலே ரமேஸ் ரமேசாக இல்லாது கோழையாகவே காணப்பட்டான். காதல் கொண்ட மனம் அவனை உண்ணவிடாது, உறங்கவிடாது, வேலை செய்யவிடாது, சிரிக்கவிடாது கட்டிப்போட்டிருந்தது. சுகிர்தா எங்கு போனாலும் அவள் பின்னால் செல்வான். வீட்டில் பெற்றோர், சகோதரரை மறந்து, தன் நிலை மறந்து சோக கீதங்களை ஒலிக்க விடுவான். சுகிர்தா சுகிர்தா என்று நாள்தோறும் அவள் பின்னாலேயே அலைவான்.

சுகிர்தா எவ்வளவோ புத்திமதிகளைச் சொல்லியும் தன் குடும்ப நிலைபற்றி விளக்கியும் அவனில் எந்தவித மாற்றமும் தெரியவில்லை. சுகிர்தா கடைசியிலே அவனோடு கதைப்பதையும் நிறுத்திக்கொண்டாள். சுகிர்தா இல்லையெனில் வாழ்க்கையே இல்லையென்று இருந்தான் ரமேஸ். அவன் இறப்பதற்கும் துணிந்தான். இதனால் சுகிர்தா பெரிதும் நிலைகுலைந்து போனாள். ரமேசின் உயிரைக் காப்பாற்றவும் அவன்மேல்கொண்ட அன்பாலும் அவனது காதலுக்கு இணங்கினாள்.

காதல் உள்ளங்களைச் சொல்லவா வேண்டும்? ரமேஸ், சுகிர்தா இருவரும் சந்தோஷ கடலில் மிதந்துகொண்டிருந்தார்கள். நாட்கள் வாரங்களாகின, வாரங்கள் மாதங்களாகின, மாதங்கள் வருடங்களாகின வருடங்களிலும் ஐந்து வருடங்கள் இனிமையாகக் கழிந்தன.

அவர்கள் காதல், நிலத்தில் ஊடுருவிய வேர் போன்று ஆழமாக இருந்தது. இனி யார் வந்தாலும், என்ன சொன்னாலும் எதுவும் செய்ய முடியாது என்று இறுமாப்புக்கொண்டிருந்தான் ரமேஸ்.



இந்த நேரத்தில் இதையறியாத ரமேசின் பெற்றோர் அவனுக்கு பெண் பார்க்க ஏற்பாடு செய்திருந்தனர். ரமேஸ் வேண்டாம் என்று பல தடவை சொல்லியும் பெற்றோர் கேட்கவில்லை. இறுதியில் அவர்கள் சொல்லுக்கு அவன் இணங்கினான். 5 இலட்சம் பணம். 50 பவுண் நகை என்றவுடன் அவன் தன்னை மறந்தான்.

சுகிர்தாவையும் ஐந்து இலட்சத்தையும் ஒரே தராசில் இட்டுப் பார்த்தான். சுகிர்தாவை ஒரு நொடியில் மறந்தான். தாய் தந்தையர் பார்த்த பெண்ணை மணம் முடிக்க ஒப்புதல் தந்தான். அதன்படி ரமேசின் திருமணம் நடந்தேறியது.

இத்திருமணத்தை சுகிர்தாவால் தடுத்து நிறுத்தவும் முடியவில்லை, தாங்கவும் முடியவில்லை, நம்பவும் முடியவில்லை. ரமேஸ் இப்படித் திடீரென்று மாறுவான் என்றோ, தன்னை இவ்வளவு சுலபமாக மறப்பான் என்றோ அவள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

அவளது எண்ண அலைகளில் இப்பவும் ஒன்று உறுத்தியபடியே இருக்கிறது. ஆண்களில் சிலர் இப்படித்தான் என்று அவளுக்கு ஏற்கனவே தெரியாமல் போய்விட்டது.

"எவ்வளவு கேவலம்! பணத்தையும் பாசத்தையும் ஒரே சமனாக இட்டுப்பார்க்கும் அளவிற்கு புத்தியில்லாதவர்கள். பணம் என்றால் பாதாளக் கிணற்றிலும் குதிக்கக் கூடியவர்கள். இவர்களையா இந்தப் பெண்ணினம் போற்றி வணங்குகிறது?" என்று எண்ணுவாள்.

எது எப்படித்தான் நடந்தும் ரமேசை அவளால் தன் உள்ளத்திலிருந்து பிரிக்க முடியவில்லை. அவளது நண்பர்களும், பெற்றோரும் அவனை மறக்கும்படி கூறுகின்றனர். அவளும் இனி மறக்கத்தான் வேண்டும் என்கிறாள். ஆனால் ரமேசை மறப்பதும் மறக்காமல் இருப்பதும் அவளுக்கும் அவள் மனதுக்கும் மட்டும்தான் தெரியும்.

"ஆணினமே ... இப்படி எத்தனை
ரமேஸ்களை உருவாக்கப் போகிறீர்கள்
எத்தனை சுகிர்தாவை ஏமாற்றப்
போகிறீர்கள். நிறுத்துங்கள் !
பெண்ணினத்தை மதியுங்கள்.
உன்னை பெற்றது பெண்
உன்னோடு வாழ்பவளும்,
வாழப்போகிறவளும் பெண்.
நாளை உனக்கு பிறக்கப்போவதும்
பெண்ணாக இருக்கலாம்." ●



### தொடர் கட்டுரை – அங்கம் 47

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

### வட இலங்கையில் பாடுகளின் காட்சிகள்



### 19. "பாசோ" உடக்கு பாஸ் பாடுகளின் காட்சிகள்

இவ்வாறு தங்கும் மக்களுக்கு கிடுகினால் விடுதிகள் அமைத்து, சமையலுக்கு வேண்டிய பாத்திரங்கள் வழங்கி, தகுந்த வசதிகளை ஒரற்ரோறியன் சபைக் குருமார் ஏற்படுத்திக் கொடுத்தனர். இவ்வாறு வரும் மக்களுக்கு வழங்குவதற்கென பெரும் எண்ணிக்கையில் சமையல் பாத்திரங்கள் ஆலயத்தில் இருந்ததாக இவ்வறிக்கை கூறுகின்றது.

1743ம் ஆண்டு போளவத்தையில் பரிசுத்த வாரத்தின்போது எல்லா பாசோ சடங்குகளும் (பதினொன்று) இடம்பெற்றதாகவும் இவற்றில் ஆறு பாசோ சடங்குகள் தமிழ்மொழியிலும், மூன்று சிங்கள மொழியிலும், இரண்டு போர்த்துக்கேய மொழியிலும் இடம்பெற்றதாகவும் பாசோச் சடங்கின் நிறைவாக இடம்பெற்ற பவனியில் ஒரு நிரையில் சிங்கள மக்களும், மறுநிரையில் தமிழ்மக்களும் கலந்து கொண்டதாகவும், இவர்கள் இப்பவனியின்போது தங்கள் தாய் மொழியிலே பாடல்களிலும், செபங்களிலும் பங்குகொண்டதாகவும் அதே ஆண்டறிக்கையில் குறிப்பு இடம்பெறுகின்றது. 1758ஆம் ஆண்டு அறிக்கையில் இடம்பெறும் பாசோ என்னும் சொல் வியாகுல பிரசங்கத்தைச் சுட்டிநிற்கின்றது.

1771ஆம் ஆண்டு அறிக்கையில் இடம்பெறும் பாசோ என்னும் பதமும், அதனையொட்டிய விளக்கமும் இது உடக்கினால் நிகழ்த்தப்படும் இயங்குநிலைத் திருப்பாடல்களின் காட்சியாகவே கொள்ள வேண்டும். 1787ஆம் ஆண்டு அறிக்கையின்படி பாசோச் சடங்கு இலங்கையில் பல ஆலயங்களில் இடம்பெற்றமையை அறிய முடிகின்றது. கொழும்பு அப்போஸ்தலிக்க ஆளுநர் ஆயர் யோசப் பிராவி பாசோ நிகழ்வுகள் தொடர்பாக சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்.

பாசோ எனப்படும் சடங்கு முறை வழிபாடு போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே இலங்கையில் இடம்பெற்றிருப்பினும் இது ஒரு உறை நிலைக் காட்சியாகவே இடம்பெற்றுள்ளது என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. இயங்கு நிலையில் திருப்பாடுகளின் காட்சிகள் இலங்கையில் எக்காலத்தில் ஆரம்பித்தன என்பதற்கு உறுதியான சான்றுகள் எமக்குக் கிடைத்தில. இவ்வாறான காட்சிகள் இரண்டு வகைப்பட்டிருந்தன.

1. உடக்குகள் (மரத்தினால் செதுக்கப்பட்ட உடக்குகளை இயக்கி காட்சிகளை அமைப்பது)
2. மனிதர்களால் நடிக்கப்படுவது.

இலங்கைக்குப் போர்த்துக்கேயக் குருமார் மறைப்பணியாற்ற வந்த சமகாலத்தில் ஐரோப்பாவில் மனிதர்களால் நடிக்கப்பெற்ற பாடுகளின் நாடகங்கள் நன்கு வளர்ச்சி பெற்ற நிலையில் பல இடங்களிலும் ஆற்றுகை செய்யப்பட்டு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. எனினும் பாடுகளின் காட்சிகள் இலங்கையைப் போர்த்துக்கேயர் ஆண்ட காலத்தில் இலங்கையில் மனிதர்களால் நடிக்கப்பெற்று மேடையேற்றப் பட்டமைக்கான சான்றுகள் எதுவும் கிடைத்தில. மிக அண்மைக் காலத்திலேயே மனிதர்கள் மட்டும் நடிக்கும் பாடுகளின் காட்சிகள் இலங்கையில் மேடையேற்றப்பட்டன என்பதை உறுதியாகக் கூறக்கூடியதாயுள்ளது. (தொடரும்...)

## துளிப்பா

**கல்வி**
தொடரும் பாதையில் விளையும் பயணங்கள்.
நிலையாக இருந்து விதையாக மிளிர
எமக்குத் துணையாக இருப்பது.

**மனம்**
சுகங்களையும் சுமைகளையும்
அடுத்தவர் அறிந்திடாமல்
புதைந்திடும் புதைகுழி.

**அன்பு**
அழகு என்பது இளமைவரை
அன்பு என்பது இறுதிவரை
அழகை நேசிப்போம், அன்பை சுவாசிப்போம்.

**சீதனம்**
பெண்ணைப் பெற்றவருக்கு
ஆதங்கக் கண்ணீரையும்
ஆணைப் பெற்றவருக்கு ஆனந்தக்
கண்ணீரையும் தந்திடும் அதிசய வெங்காயம்.

ப. நிறஞ்சலா,
35 புதிய மூர்வீதி, மன்னார்.

**ஆலயம்**
அன்பு தெய்வத்தை
ஆராதிக்கும் இடம்.

**ஆடை**
மங்காமல் மானத்தை
மாண்போடு காப்பது.

**வாழ்க்கை**
இன்பதுன்பம் கொண்ட
சுழலும் சக்கரம்.

**வரலாறு**
ஒருவரது வாழ்வின்
சுவாரசியமான கதை.

**ஆன்மா**
இறைவன் வழங்கிய
இணையில்லாப் பரிசு.



அ. மேரி கொண்சீற்றா
மடுக்கோவில், மடு

# மறைசாட்சிகளின் மண்ணில் மறைத்தியானம்

## மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான வருடாந்த தவக்காலத் தியானம்

திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்
ஆசிரிய ஆலோசகர் (தமிழ்),
வலயக்கல்விப் பணிமனை, மன்னார்.

மறைசாட்சிகள் விதைத்த விசுவாச வித்து, எங்கள் புனிதமான சொத்து! மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான வருடாந்த தவக்காலத் தியானம் (மன்னார், முருங்கன் மறைக்கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான தியானம்) கடந்த மார்ச் 16,17,18 ஆகிய திகதிகளில் மறைசாட்சிகளின் இரத்தம் சிந்திய புனித பூமியாகிய தோட்டவெளியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

200க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் ஆசிரியர்களின் 40 பிள்ளைகளும் இதில் பங்குபற்றி உளமாற்றத்துடன் ஆண்டவரின் ஆசீரையும், அருளையும் பெற்றுச்சென்றுள்ளனர். இத்தியானத்தில் சில ஆசிரியர்கள் குடும்பமாக - கணவன் அல்லது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் - பங்குபற்றினார்கள். இத்தியானத்தின் ஆரம்ப அமர்வுக்கு மூத்த மறையாசிரியர் திரு. செபஸ்ரியாம்பிள்ளை தலைமை தாங்கினார்.

இத்தியானத்தின் ஆரம்ப நிகழ்வில் மன்னார் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி. நேசன், மன்னார் மறைக்கோட்ட முதல்வரும் மன்னார் பேராலயப் பங்குத்தந்தையுமான அருட்பணி. எஸ். கே. தேவராஜா கொடுதோர், மறைமாவட்ட நிதியாளர் அருட்பணி. பி. கிறிஸ்துநாயகம், தோட்டவெளிப் பங்குத்தந்தை அருட்பணி. ஏ. இராயப்பு அடிகள் ஆகியோர் பங்கேற்றனர். அருட்சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோ, அருட்சகோதரர்



விஜயதாசன், உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. லியோன் றெவ்வல் ஆகியோர் கலந்துகொண்டு மங்கள விளக்கை ஏற்றி வைத்தனர்.

இந்த ஆரம்ப நிகழ்வில் தொடக்கவுரை ஆற்றிய தியான நெறியாளர் - மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகளுக்கான மறைமாவட்ட இயக்குனர் அருட்பணி. நேசன் அடிகளார் "தண்ணீரில் மீன் அழுதால் அதன் கண்ணீரை யார் அறிவார்" என்ற கேள்வியுடன் ஆசிரியர்களின் சமகால அழுத்தங்களை அழகுற விபரித்தார். நாம் வாழும் இக்காலகட்டம் பதட்டம் நிறைந்த சூழ்நிலையாகும். மனமடிவுகள், எதிர்காலம் பற்றிய அங்கலாய்ப்புகள், அலுவலகப் பளுக்கள், குடும்பச் சுமைகள் மத்தியில் இவ்வளவு ஆசிரியர்கள் இத்தியானத்திற்கு வருகை தந்தமை பாராட்டுதற்குரியது என்றார்.

அருட்பணி. இராயப்பு அடிகளார் தனது உரையில், இது அருளின் காலம், ஆசீர்வாதத்தின் காலம், அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் காலம், "தந்தை ஈர்த்தால் ஒழிய யாரும் என்னிடம் வரமுடியாது" என்ற இறைவார்த்தையையும் "ஆண்டவரே, நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய இவ்விடத்தை விட்டு அகலமாட்டேன்" என்று யாக்கோப்பு கூறியதையும் நினைவுகூர்ந்து, நீங்களும் இறை ஆசீருக்காக அவ்வாறே விடாப்பிடியாகக் கேளுங்கள் என்று கூறினார்.

தொடர்ந்து அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகள் ஆசியுரை வழங்கினார். அதில், இந்தத் தியானம் தனிப்பட்ட மனமாற்றத்திற்கான அழைபபாக இருந்தாலும் சமூக மனமாற்றத்திற்காகவும் இத்தியானத்தில் சிறப்பாக செபிக்கும்படி அழைப்பு விடுத்தார். மனிதனை மனிதன் கொன்று குவிக்கின்ற கொலைக் கலாசாரத்திலிருந்து எமது மண் விடுதலைபெறச் செபிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

மன்னார் பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி. எஸ். கே. தேவராஜா கொடுதோர் "நான் அவளை நயமாகப் பாலைவனத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கே அவளோடு நெஞ்சாரப் பேசுவேன்." என்ற ஒசேயா ஆகமத்தின் வார்த்தைகளைச் சுட்டிக்காட்டி ஆண்டவர் நம்மோடு நெஞ்சுருகப் பேசுகின்ற காலம் இத்தியான நாட்கள் என்றார். எமது மக்கள் மத்தியில் பக்தி முயற்சிகளில் ஈடுபடும் *'பக்தர்கள்'* பலர் உண்டு. ஆனால் கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற *'சாட்சிகள்'* மிகக்குறைவு என்றார்.

### அருட்பணியாளர் நேசன்

தொடர்ந்து முதலாவது தியான உரையை வழங்கிய நேசன் அடிகளார், "ஆதாம் நீ, எங்கே இருக்கிறாய்?" என்ற தொடக்கநூல் 3:9 இறைவார்த்தையைக் கூறி, ஆதாம் என்று வரும் இடத்தில் உங்கள் ஒவ்வொருவரின் பெயரையும் வைத்து, இந்த வார்த்தையை உங்கள் உள்ளத்தில் எதிரொலிக்க விடுங்கள் என்று அழைத்தார்.

நற்கருணைப் பிரசன்னத்தில் ஆசிரியர்களாகிய எமது வாழ்வின் நிலையை நாம் உற்றுப் பார்க்க அவர் அழைப்பு விடுத்தார். மனிதன் ஆராய்ச்சியிலும் கண்டுபிடிப்பிலும் சாதனை படைக்கின்றான். ஆனால் மனிதன் இன்னும் தன்னைக் கண்டுபிடிக்கவில்லை எனக்கூறி "நான் யார்?" "நான் எங்கே இருக்கிறேன்?" என்ற கேள்விகளை ஒவ்வொருவரும் கேட்டு



தியான மனநிலைக்குள் ஆழமாகச் செல்ல வழிகாட்டினார். "ஆழத்திற்கு உங்கள் வலைகளைப் போடுங்கள்" என்ற இறைவார்த்தையைச் சுட்டிக்காட்டி ஆழமான விசுவாச வாழ்வு வாழ அழைப்பு விடுத்தார், சிந்திக்க வைத்தார்.

மறுநாள் 17.03.2007 – சனிக்கிழமை காலைச்செபத்தை மூத்த மறையாசிரியர் திரு. மரியசெல்வன் வழிநடத்தினார்.

### மூத்த மறையாசிரியர் திரு. சவிரி

மூத்த மறையாசிரியர் திரு. சவிரி அவர்கள் பாவமும் அதன் விளைவுகளும் பற்றி நகைச்சுவையோடு அரிய கருத்துக்களைக் கொண்ட தியான உரையை வழங்கினார். செபிக்காததுதான் பெரிய பாவம் என்றார். பாவம் என்பது தன்னுடன், அயலவனுடன், இறைவனுடன், இயற்கையுடன் கொண்டுள்ள உறவை முறித்தல் என்று கூறினார். சென்மபாவம், கன்மபாவம், அற்பபாவம், சாவானபாவம் பற்றிய விளக்கங்களை வழங்கினார். "உள்ளத்தின் ஆழத்தில் உங்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்" அகப்பயணத்தில் "கிறிஸ்துவின் மனநிலையைக் கொண்டிருங்கள்", என்றும் தாவீது அரசரின் வாழ்வில் பாவம் பற்றியும் விளக்கினார்.

### அருட்பணியாளர் யூட் குரூஸ்

தொடர்ந்து ஒப்புரவு பற்றிய உரையையும் மனமாற்ற வழிபாட்டையும் அன்பிய இயக்குனர் அருட்பணியாளர் யூட் குரூஸ் அவர்கள் நடத்தினார். உளமாற்றம், புதுப்பித்தல், ஒப்புரவு நமக்கு அவசியம் என்றும் பாவம் இலாபமானது. (2கொரி 4:3-13) எனக்கூறும் இறைவார்த்தையையும் எடுத்துக்காட்டினார். "நாங்கள் அறிவிக்கும் நற்செய்தி அழிவுறுவோருக்கே அன்றி வேறு எவருக்கும் மறைக்கப்பட்டிருக்கவில்லை" என்றார்.

வேதசாட்சிகளின் குருதிக்கறை படிந்த பூமியின்மேல், நெற்றியை வைத்து, மன்னிப்பு வேண்டிய நிகழ்வு மறக்கமுடியாதது. 10 கட்டளைகளை ஒவ்வொன்றாக எடுத்து விளக்கினார். அடுத்து "ஓய்வுநாள் மகிழ்ச்சியின் நாள் என்றும் ஆண்டவரின் மேன்மைமிகு புனிதநாள் எனவும் சொல்லி அதற்கு மதிப்புத்தந்து உன் சொந்த வழிகளில் செல்லவோ, உன் சொந்த ஆதாயத்தை நாடவோ வெற்றுப் பேச்சுக்களைப் பேசவோ செய்யாதிருந்தால் அப்பொழுது, ஆண்டவருக்கு ஊழியம் புரியும் மகிழ்ச்சியைப் பெறுவாய் நானோ மண்ணுலகின் உயர்விடங்களில் உன்னை வலம்வரச்செய்வேன்". எரேமியா 29:11 இல் "ஏனெனில் உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ. அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்காக நல்வாழ்வின் திட்டங்களே." என்ற ஆண்டவரின் வார்த்தைகளைக் கூறினார். ஈற்றில் விடுதலைப்பயணம் அதிகாரம் 20இல் கடவுள் தந்த கட்டளைகள் பற்றி நெஞ்சுருகும் விதத்தில் எடுத்துக்கூறி கல்லான இதயங்களும், கரைந்து கதறி அழச்செய்தார். பாவத்திற்காக மனம் வருந்தி, மன்னிப்புக் கேள் என்றவுடன், கண்களில் கண்ணீர் மல்க, ஆசிரியர்கள் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி முத்தமிட்ட காட்சி, ஆசிரியர்களில் ஏற்பட்ட உளமாற்றத்தின் அடையாளமாக இருந்தது.

பின்னர் அனைத்து ஆசிரியர்களும் தோட்டவெளி ஆலயத்தின் பரந்த மைதானத்தில் உள்ள மரநிழல்களின்கீழ் குருக்களிடம் வரிசையாகச் சென்று ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றனர்.

### மூத்த மறையாசிரியர் திரு. செபஸ்ரியாம்பிள்ளை

தொடர்ந்து மதிய உணவின் பின்னர் திரு. செபஸ்ரியாம்பிள்ளை "எம் வாழ்வில் செபம்" பற்றி எடுத்துக் கூறினார். திருப்பாடல் 47:1 "மக்களினங்களே களிப்புடன் கைகொட்டுங்கள்." (எசா 43:4-5) "என்பார்வையில் நீ விலையேறப்பெற்றவன் மதிப்புமிக்கவன். நான் உன்மேல் அன்பு கூர்கின்றேன்." (திருப்பாடல் 28:2) "ஆண்டவரே நான் உம்மிடம் உதவி வேண்டுகையில், உமது திருத்தூயகத்தை நோக்கி, நான் கையுயர்த்தி வேண்டுகையில் பதில் அளித்தருளும்."திருப்பாடல் 34:8 "ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப்பாருங்கள்." போன்ற இறைவசனங்களை எடுத்துக்காட்டி செபத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். இந்த ஆண்டு செப ஆண்டு. தனிநபர் வாழ்விலும், குடும்பவாழ்விலும், குழு வாழ்விலும் செபிக்க வேண்டும், இருத்தல் அனுபவத்தைப் பெறவேண்டும் என்று கூறினார்.

### அருட்சகோதரி றெஜினா மேரி

"கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சி பொதுநிலைத் தலைவர்களிலே தங்கியுள்ளது" என்றார். "ஆழத்திற்கு தள்ளிக்கொண்டு போய் மீன்பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள். - உங்களை மனிதரைப் பிடிப்பவராக்குவேன்". உயிருள்ள மக்களைப் பிடிக்க - மாமக்களை உருவாக்க ஆண்டவர் உங்களை - ஆசிரியர்களை அழைத்துள்ளார்" என்றார். "நாம் விதை விதைக்க வந்துள்ளோம் என்று கூறி, மூளையை வளர்க்கவும், மக்களை வளர்க்கவும் ஆசிரியப்பணி உதவுகிறது" என்றார். லூக் 19:1ஐ எடுத்துக்காட்டி, "சக்கேயுவே, விரைவாய் இறங்கிவா" என்பதை விளக்கி, 'உங்கள் துக்கம் சந்தோசமாய் மாறும்' என்றார்.

### அருட்சகோதரி கிறிஸ்ரபெல்

யோவான் 10:10 "நான் என் ஆடுகள் வாழ்வினைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவான வாழ்வைப் பெறும்பொருட்டே வந்தேன்", என்ற வார்த்தையை விளக்கினார்.

"உளவியல் ரீதியாக சிறுவயதில் அடக்கப்பட்ட ஆசைகள், கசப்பான உணர்வுகள், பகை உணர்வுகள், உறவு நெரிசல்கள் இவற்றினால் பாதிக்கப்பட்டவர்கள், சோர்வு, விரக்தி, நெறிபிறழ்வு ஆகிய நிலைக்கு இக்காலத்தில் ஆளாகியுள்ளனர். இவர்களின் அடிவேரைக் கண்டுபிடிக்க வேண்டும். கடந்த காலத்தில் அடக்கப்பட்டவற்றிலிருந்து விடுபட நிகழ்காலத்தில் ஏற்படும் சோர்வினைக் குறைக்க உளவள ஆற்றுப்படுத்துனர்கள் தேவை", என்று கூறினார்.

### பொதுநிலைப் பணியாளர் திரு. ஜெயதாஸ்

மன்னார் பேராலயப் பங்கின் பொதுநிலைப் பணியாளரும் வாழ்வுதயம் சமாதானப் பிரிவு பணியாளருமாகிய திரு. ஜெயதாஸ் அவர்கள் விவிலியத்தில் சமாதானம் பற்றிய எண்ணக் கருவினை விளக்கிக் கூறினார்.

திருப்பாடல் 131 "ஆண்டவரே என் உள்ளத்தில் இறுமாப்பில்லை" எரே 29:7, சக்கரியா 6:13, மீக்கா 5:5, சக்கரியா 9:10, எசா 11:6-9 ஆகிய வார்த்தைகளை எடுத்தாண்டார்.

"அந்நாளில் ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும். அக்குட்டியோடு சிறுத்தைப்புலி படுத்துக்கொள்ளும். கன்றும் சிங்கக் குட்டியுடன் கொழுத்த காளையும் கூடிவாழும்... பச்சிளம் குழந்தை அவற்றை நடத்திச் செல்லும். பசுவும் கரடியும்



ஒன்றாய் மேயும்... சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால்குடி மறந்தபிள்ளை கட்டுவிரியன் வளையினுள் தன் கையைவிடும்" என்ற வார்த்தைகளைக் கூறி சமாதானம் என்பது இப்படியான ஒரு நிலை என்பதைக் காட்டினார்.

இறுதி நாளான ஞாயிறு தினம் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி விக்ரர் சோசையும், மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி நேசனும் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார்கள். அனைத்து ஆசிரியர்களும், காணிக்கைப் பவனியில் கலந்து சிறப்பித்தனர்.

### நிறைவு நிகழ்வு

திருப்பலி முடிவடைந்த பின்பு, இறுதி அமர்வு இடம்பெற்றது. இந்த இறுதி அமர்வுக்கு உயிலங்குளம் பாடசாலை அதிபர் திருமதி அமலதாசன் அவர்கள் தலைமை தாங்கினார். இதில் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. ஆபேல் றெவல் அவர்கள் கலந்து சிறப்பித்தார். மறைக்கல்வி இயக்குனர் நேசன் அடிகளார் உரையாற்றினார். உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆரோக்கியம் குரூஸ் அவர்கள் இத்தியானத்தின் மூலம் தான் பெற்றுக்கொண்ட அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். இறுதியில் வலயக்கல்விப் பணிப்பாளர், குருமுதல்வர் ஆகியோர் உரைநிகழ்த்தினர். இறுதியாக மன்னார் வலயக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களின் நன்றியுரை இடம்பெற்றது.

மன்னார் மண்ணில் அதுவும் மறைசாட்சிகள் குருதி சிந்திய மண்ணில், மிகவும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இத் தியானநிகழ்வு உண்மையிலேயே பாராட்டுதற்குரியது.

பல்வேறு இடர்கள், சுமைகள், மனமடிவுகள், இடப்பெயர்வுகள் சூழ்நிலையிலும் இறைவனின் அளவிடமுடியாத கருணையை நினைத்துப் பார்க்கின்றோம். பங்கெடுத்த அனைவரும், இறைவனில் நிம்மதியடைந்து ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்று, மன அமைதியும் ஆறுதலும் பெற்றுச் சென்றனர்.

இந்நிகழ்வை பல கஸ்ரங்கள் மத்தியிலும் பயன் உள்ள வகையில் ஒழுங்கமைத்த மன்னார் மறைக்கல்வி நிலையப் பணியாளர்கள், தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்கள் சிறப்பாக இவர்கள் அனைவரையும் வழிநடத்திய மறைக்கல்வி இயக்குனரும் மன்னா பத்திரிகை ஆசிரியருமாகிய அருட்பணி. நேசன் அவர்கள் எம் அனைவரின் பாராட்டுக்குரியவர்.

இயேசுவின் இனிய நாமம் வாழ்க!



உயிர்ப்பு விழா சிறப்பிதழ்... உயிர்ப்பு விழா சிறப்பிதழ்...

# பழைய ஏற்பாட்டில் உயிர்ப்பு



உயிர்ப்பு, கிறிஸ்தவ நம்பிக்கையின் ஆணிவேர். "கடவுள் இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்" (திப. 2:32) என்று திருத்தூதர்கள் சான்றுரைத்துள்ளனர். இதன் அடிப்படையில், "... அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம்" (உரோ 6:5) என்று நம்புகிறோம்.

கிறிஸ்து முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார் (1கொரி. 15:20). அதற்குமுன் (பழைய ஏற்பாட்டில்) யாரும் உயிர்த்தெழுந்ததில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. அப்படியானால், இயேசு வாழ்வதற்கு முன் வாழ்ந்த பழைய ஏற்பாட்டு மக்கள் உயிர்ப்பைப் பற்றி அறிந்திருந்தார்களா? உயிர்ப்பின் நம்பிக்கை எப்பொழுது? எப்படி? ஏன்? எதன் அடிப்படையில் ஆரம்பித்தது? போன்ற கேள்விக்கணைகள் நியாயமானவை. நியாயமான வினாக்களுக்கெல்லாம் விடை காண விளைவதுதானே விவேகம்? உயிர்ப்புப் பற்றிய ஒருவரது எண்ணத்தை அறிந்துகொள்ள, வாழ்வு மற்றும் மரணம் குறித்த அவரது அணுகுமுறை என்னவென்று தெரிந்துகொள்ளுதல் அவசியம். எனவே முதலில், பழைய ஏற்பாட்டு மக்கள், மனித வாழ்வையும் மரணத்தையும் எப்படிப் புரிந்துகொண்டார்கள் எனப் பார்ப்போம்.

## பழைய ஏற்பாட்டில் வாழ்வும் - சாவும்

இவர்கள் 'வாழ்வே மாயம்' என்றன்று; மாறாக இவ்வுலக வாழ்வு மட்டுமே உண்மையென நம்பினர். மனித வாழ்வு என்பது கடவுள் கொடுத்த கொடைகளுள் தலை சிறந்தது, தன்னிகரற்றது (யோபு 2:4; சஉ 9:4). அத்தகைய வாழ்வை, சிறப்புடன் வாழ, கடவுளின் கைவண்ணத்தால் உருவான இவ்வுலகைத் தவிர வேறு ஓர் இடம் இருக்க முடியாது (சஉ 9:1-10). எனவே ஒருவர் செல்வச் செழிப்போடு, மனைவி மக்களைப் பெற்று, நலமுடன் நீண்ட நாள் வாழ்ந்தால், அவர் ஆண்டவரின் ஆசியை நிரம்பப் பெற்றிருக்கிறார். அவர் ஒரு நீதிமான் என்று கருதினர் (யோபு 8:6, திபா 128).

'பாவம் செய்யும் உயிரே சாகும்' (எசே 18:4) என்ற கோட்பாட்டைக் கொண்டிருந்தனர். அதே சமயம் படைக்கப்பட்ட யாவரும் ஒருநாள் மரணத்தைச் சந்தித்தே ஆகவேண்டும். இது இயற்கை நியதி, மனித வாழ்வின் அதிபதி கடவுளே (1சாமு 2:6) என்றும் நம்பினர். ஆனாலும் நல்ல மரணம் என்பது கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாயிருந்தது.

வாழ்ந்து சலித்த பிறகு, முதிர்ந்த வயதில்தான் இறக்க வேண்டும் (தொ.நூ 15:15; யோபு 2:17)

இளம் வயதில் இறப்பதென்பது கடவுளின் தண்டனையைக் குறிக்கும் (தி.பா 103:24; 38:10).

தனக்குப் பின் நீண்ட சந்ததியை அல்லது குறைந்தது ஒரு ஆண் மகனையாவது விட்டுச் செல்ல வேண்டும் (தொ.நூ 15:17,18). ஏனெனில் இறந்தவர்கள் தங்கள் வாரிசுகளின் வழியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களின் நம்பிக்கை. இறந்த பிறகு அடக்கச் சடங்குகள் அனைத்தும் முழுமையாய் நிறைவேற்றப்பட வேண்டும் (2சாமு 1:11-27, எரே 16:1-9, எசே 24:15-17). அனாதைப் பிணமாகக் கிடப்பது கடவுளின் தண்டனையை உணர்த்தும் (2அர 9:16, எரே 8:1-3, எசா 14:19). நல்லடக்கம் செய்யப்பட்டோர் தங்களின் மூதாதையர் கூட்டத்தில் சேர்க்கப்படுவர் (தொ.நூ 49:33).

## பாதாளம் (Sheol)

இந்த உலகத்தில் வாழுகின்ற வரைதான், நல்லவர்கள் நீடிய ஆயுளையும், நிறை மகிழ்ச்சியையும் பெறுகிறார்கள். தீயவர்கள் தீராத நோயையும் மற்றும் பல தீவினைகளையும் சந்திக்கிறார்கள். ஆனால் இறந்த பிறகு நல்லவர், பொல்லாதவர் என்ற பாகுபாடின்றி எல்லோரும் செல்லுமிடம் பாதாளம்தான். இது ஒரு படுகுழி (யோபு 26:6), இருள், மறதி உலகு, அழிவின் தலம் (தி.பா 88:12), மண் புழுதி (தானி 12:2), வாழும் மனிதரோடோ, கடவுளோடோ தொடர்புகொள்ள முடியாத நிலை (தி பா 6:6, 30:1, 88:6-12), துயில் கொள்ளும் நிலை (1சாமு 28:7).

இப்படிப்பட்ட சிறிதும் நம்பிக்கையற்ற இடத்திற்குத்தான், மரணம் ஒருவரை அழைத்துச் செல்கிறது என்பது பொதுவான நம்பிக்கை. இவர்களையெல்லாம் மீட்பதற்காகத்தான் இயேசு பாதாளத்திற்கு இறங்கினார் என்று நமது விசுவாசப் பிரமாணத்தில் அறிக்கையிடுகின்றோம்.

## விதிவிலக்கு

ஆனால் ஒரு சிலர், சாவைச் சந்திக்காமலேயே, கடவுளோடு சங்கமித்திருக்கிறார்கள். பாதாளம் செல்லாமலே பரமன் பாதம் சென்றடைந்திருக்கிறார்கள்.

'ஏனோக்', கடவுளோடு நடந்துகொண்டிருந்தான். பின்பு அவனைக் காணவில்லை. ஏனெனில் கடவுள் அவனை எடுத்துக் கொண்டார்" (தொ.நூ 5:24) 'எலியா', சுழற்காற்றில் விண்ணகத்திற்குச் சென்றார் (2அர 2:11).

கடவுளுக்குகந்தவர்களாய் வாழ்ந்தவர்களில் அவர் விரும்புகிற ஒரு சிலரை, வழக்கத்திற்கு மாறாகத் தம்மிடம் நேரடியாக எடுத்துக்கொள்கிறார் என்ற நம்பிக்கையும் இருந்து வந்திருக்கிறது. இப்படி வாழ்வு, மரணம் பற்றிக் குழப்பமான சிந்தனையைக் கொண்டிருந்த போதும், பழைய ஏற்பாட்டில் பலமுறை உயிர்ப்பை உணர்த்துகின்ற சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு விதத்தில் இந்த சொற்களுக்கு பொருள் கொடுக்கின்றனர். ஒரு சில விவிலியப் பகுதிகளை வகைப்படுத்தி ஆராய்ந்தால் உண்மை விளங்கும்.

## 1. உயிர்ப்பு நோயிலிருந்து விடுதலை

"என் உயிரைச் சாவினின்று விடுவித்தார்... உயிர் வாழ்வோர் நாட்டில் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்" (தி.பா 16:8-9).

"நான் இறந்தொழியேன்! உயிர் வாழ்வேன்... ஆண்டவர் என்னைக் கண்டித்தார். ஆனால் சாவுக்கு என்னைக் கையளிக்கவில்லை (தி.பா 118:17-18).

"பாதாளத்தின் பிடியினின்று விடுவித்து என்னைத் தூக்கி நிறுத்துவார்" (தி.பா 49:15).

இந்தத் திருப்பாடல்களின் வசனங்களெல்லாம் உயிர்ப்பைச் சுட்டிக் காட்டுவதுபோலத் தோற்றமளிக்கின்றன. ஆனால் இறந்த பிறகு உயிர்ப்பதையன்று; மாறாக உயிரைக் குடிக்கும் கொடிய நோயிலிருந்து பெறும் விடுதலையைத்தான் இவை குறிக்கின்றன. நோயும் ஒருவகை மரணம்தான். 'செத்துப் பிழைத்தேன்' என்கிறோமே, அத்தகைய பிழைப்பைத்தான் இவ்வசனங்கள் உணர்த்துகின்றன.

✠ எலியா, சிறுவனை மீண்டும் உயிர்பெறச் செய்தது (1அர 17:17-24).

✠ எலியா, சூனேம் பெண்ணின் மகனை மீண்டும் உயிர்பெறச் செய்தது (2அர 4:31-37).

✠ எலியாவின் எலும்புகளின்மேல் பட்டவுடன் இறந்த ஒருவன் உயிர் பெற்றது (2அர 13:20-21).

இந்த நிகழ்வுகளில், இறந்தவர்கள் மீண்டும் உயிர் பெறுகிறார்கள். எனவே உயிர்த்தெழுந்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வந்து விடக்கூடாது. இவர்கள் தாங்கள் இழந்த உயிர் மூச்சைத்தான் திரும்பப் பெறுகிறார்கள். அறுபட்ட வாழ்வைத் தான் திரும்ப அடைகிறார்கள். இவர்கள் மறுவுலக வாழ்வை அடையவில்லை; மாறாக இம்மண்ணுலக வாழ்விற்கே மீண்டும் வந்திருக்கிறார்கள். எனவேதான் இவர்களும் நாம் புதிய ஏற்பாட்டில் காணும் இலாசரும் (யோவா 11:38-44) மீண்டும் இறந்தார்கள். ஆனால் உயிர்த்தெழுதல் என்பது, காலத்திற்கும் இடத்திற்கும் அப்பாற்பட்ட 'மகிமை நிலையை அடைதல், இது ஒரு உன்னத நிலை.

உயிர்த்த இயேசுக் கிறிஸ்து இத்தகைய நிலையை அடைந்ததால்தான், சீடர்கள் கதவுகளை மூடியிருந்தபோதும் அவர்கள் நடுவில் வந்து நிற்க முடிந்தது (யோவா 20:19).

## 2. உயிர்ப்பு அடிமைத் தனத்திலிருந்து விடுதலை

"இரண்டு நாளுக்குப்பின் நமக்குப் புத்துயிர் அளிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை எழுப்பி விடுவார்" (ஓசே 6:1-3).


இந்த வசனங்கள், உயிர்ப்பு உண்டென உணர்ந்து கூறியவையல்ல. மாறாக கி.மு 735 ஆம் ஆண்டளவில், இஸ்ரயேல் தங்களின் மதியின்மையால், அவர்களின் சகோதர நாடான யூதேயாவை அழிக்கத் துடித்தவர்களின் கூட்டணியில் இணைந்தனர். எனவே ஓசேயா இறைவாக்கினர் அவர்களைக் கண்டிக்கிறார். கடவுளின் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று எச்சரிக்கிறார். தங்கள் தவற்றினை உணர்ந்து, மனம் வருந்துகின்றனர். தீயோரின் கூட்டணியை விட்டுவிட்டுச் சரியான பாதைக்குத் திரும்பக் கடவுள் துணைபுரிவார், அரசியல் மறுமலர்ச்சி ஏற்படும் எனும் தங்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர். இவர்கள் எந்தவொரு நல்ல காரியமும் மூன்றாம் நாளில் நடந்தேறும், இல்லையென்றால் அது நடைபெறாது என்ற எண்ணம் கொண்டிருந்தனர். எனவே தான் 'மூன்றாம் நாளில்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'அவர்களுக்குள் உயிர்மூச்சுப் புகுந்தது, அவர்கள் உயிர்பெற்று, காலூன்றி, மாபெரும் படைத்திரள்போல நின்றனர்' (எசே 37:1-14).

உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்றதாகச் சொல்லப்படும் இந்தப் பகுதி எசேக்கியேல் கண்ட காட்சிதான், நிகழ்ச்சியன்று. இது இறந்த பிறகு உயிர்ப்பு உண்டு எனும் அவர்களது நம்பிக்கையை எடுத்துரைக்கவில்லை. மாறாக கி.மு 587 இல், யூதேயாவின் அழிவின்போது, நம்பிக்கை இழந்து இருந்த மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வண்ணம் எழுதப்பட்டது. இங்குப் புதைக்கப்பட்டவர்களின் எலும்புகளல்ல, மாறாக போர்க்களத்தில் உலர்ந்து கிடக்கும் எலும்புகள்தான் உயிர்பெறுகின்றன. யூதேயா பகைவர்மீது வெற்றிகொள்ளும், உலர்ந்த எலும்புகளைப் போன்ற அவர்களது அவல நிலை மாறிப் புதிய ஆட்சி அமையும் என்பதுதான் அவர்களது நம்பிக்கை.

## 3. உயிர்ப்பு இறப்பிலிருந்து விடுதலை

உயிர்ப்பு என்பதின் உண்மையான பொருள், கி.மு.5 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, அதிலும் குறிப்பாகக் கி.மு. 2ஆம் நூற்றாண்டில்தான் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "இறந்த உம் மக்கள் உயிர் பெறுவர்..." (எசா 26:19).



கி.மு5ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட இந்த வார்த்தைகளில்தான், கடவுளுடைய பெயருக்காகவும், அவர்தம் மக்களின் மாட்சிக்காகவும் வேதனையுற்று இறப்போர் உயிர்ப்பர் என்ற நம்பிக்கை ஓரளவுக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

"... சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர்; வேறு சிலரோ வெட்கத்திற்கும் முடிவில்லா இழிவுக்கும் உள்ளாவர்" (தானி 12:1-3).

கி.மு 167இல், எப்பிபானூஸ் ஆண்டியோகஸ் அரசனின் கொடுங்கோல் ஆட்சியினால் அவதியுற்று இறந்தோர் நித்திய வாழ்வுக்கும், அவனுக்குத் துணை புரிந்தோர் நித்திய தண்டனைக்கும் உரித்தாவார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்பதற்கு இவ்விவிலியப் பகுதி சான்றாய் அமைகிறது.

கி.மு 124இல், எழுதப்பெற்ற மக்கபேயர் இரண்டாம் புத்தகத்தில் குறிப்பாக, தன் ஏழு குழந்தைகளின் உயிரையும் தியாகம் செய்யும் தாய் மற்றும் அவள் குழந்தைகளின் வார்த்தைகளிலே உயிர்ப்பின் நம்பிக்கை அழுத்தம் திருத்தமாய் வெளிப்படுகிறது. இரண்டாம் மகன் இறப்பதற்குமுன் சொல்லுகிறான், "நாங்கள் இறந்தபின் என்றென்றும் வாழுமாறு அனைத்துலக அரசர் எங்களை உயிர்த்தெழச் செய்வார்" (2மக்கபே 7:9).

**மூன்றாவது மகன் :** "அவரிடமிருந்து மீண்டும் இவற்றைப் பெற்றுக்கொள்வேன்" (7:11).

**நான்காவது மகன் :** "கடவுள் என்னை மீண்டும் உயிர்த்தெழச் செய்வார். ஆனால் நீ வாழ்வு பெற உயிர்த்தெழ மாட்டாய்" என்று அரசனைப் பார்த்து கூறுகிறான் (7:14).

உயிர்த்தெழுதல், கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடித்து நல்லவர்களாய் வாழ்ந்தவர்களுக்கு மட்டுமே உரியது என்ற இவர்களது நம்பிக்கை இங்கே தெள்ளத் தெளிவாகிறது.

தாய் தனது இறுதி மகனிடம்; "உன் சகோதரர்களோடு உன்னையும் நான் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி இப்போது சாவை ஏற்றுக்கொள்" என்று சொல்லி ஊக்கமூட்டினாள் (7:29). உயிர்ப்பு உண்டு என்ற நம்பிக்கையினால்தான் இவர்கள் சாவை ஏற்கத் துணிந்திருக்கிறார்கள்.

## நிறைவாக

தொடக்கக் காலத்தில் நீடிய ஆயுளை மட்டுமே விரும்பியவர்கள் பிறகு படிப்படியாக இறந்த பிறகு கிடைக்கும் நித்திய வாழ்வை நம்பியிருக்கிறார்கள். காரணம்;

1. நல்லவர் மற்றும் நீதிமான்கள் இறப்புக்குப்பின் பெறும் சிறப்பு.
2. அவர்கள் பட்ட வேதனைக்கு விடிவு உண்டு என்ற நம்பிக்கை.
3. கடவுளின் கட்டளையைக் கடைப்பிடிப்போரை அவர் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கை.
4. கடவுளின் வெளிப்பாடு ஒவ்வொரு காலகட்டத்திற்கும் தகுந்தவாறு படிப்படியாய் நிகழ்ந்திருக்கிறது.

"காணமாலே நம்புவோர் பேறுபெற்றோர்" (யோவா 20:29) என்ற இயேசுவின் வார்த்தை பழைய ஏற்பாட்டு மக்களுக்கு முழுமையாய்ப் பொருந்துகிறது. அவர்களது நம்பிக்கை நமக்குச் சவால். அவர்களது முன்மாதிரியைப் பின்பற்றி உயிர்ப்பிலே முழுமையாய் நம்பிக்கை கொள்வோம். நித்திய வாழ்வை நிறைவாய்ப் பெற்றுக்கொள்வோம். ●

**ஆ. பால்ராஜ்,**
**புனித பேதுரு குருமடம், பெங்களூர்.**



செப ஆண்டுச் சிறப்புப் பகுதி

# செபமே வாழ்வு

அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி

தொடர் - 02



செபம் என்பது இறைவனோடு நாம் கொள்ளும் உரையாடல் ஆகும். இதன் மூலம் நம்மை இறைவனுக்குக் கையளித்து சரணடைகின்றோம். இறைவனின் அருளைச் செபத்தின் மூலம் நாம் பெறுவதால் நமது சிந்தனைகள் செயல்கள் எல்லாம் இறைவனுடைய சிந்தனைகளாக, செயல்களாக மாறுகின்றன. நாம் அடுத்தவர் மட்டில் எப்போதும் நன்மையை நாடும் மக்களாக மாறுகின்றோம்.

செபத்தின் அமைப்பைப் பொறுத்து *உதடுவழிச் செபம், உள்ளத்துச் செபம்* என இருவகையாக பிரித்து நோக்கலாம். நாம் எமது உதட்டால் இறைவனை நோக்கி எழுப்பும் வேண்டுதலை *தனிச்செபம், பொதுச்செபம்* என்றும் வகைப்படுத்தலாம்.

## உதடுவழிச் செபம்

நம் இதயத்து உணர்வுகளை, ஏக்கங்களை உள்ளத்து குமுறல்களை உதடுகள் வழியாக இறைவன்பால் எழுப்புவதே உதடுவழிச் செபம் ஆகும்.

உதட்டால் இறைவனைப் புகழ்ந்து அவரது மகிமையைப் பறைசாற்றுகின்றோம் (எபி 13:15). இறைவன் நம் உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களை அறிபவராகையால் நாம் உதடுகள் வழியாக இறைவனை நோக்கி வேண்டுவது தேவைதானா என்ற வினா எழலாம். ஆனால் மனிதன் உடலும் உள்ளமும் ஒருங்கே அமையப் பெற்றவன். உள்ளத்து உணர்வுகளை மனிதன் செயல்கள் மூலம் வெளிப்படுத்துவது இயல்பானது. ஆகவே உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை உதட்டாலும் செயலாலும் வெளிப்படுத்துதல் அவசியமாகின்றது.

உளவியலாளர் கருத்துப்படி உடலானது இதய ஏக்கங்களை, உணர்வுகளை விரைவுபடுத்தி இறைவன்பால் உள்ள பக்தியை, பற்றை வெளிப்படுத்த உதவுகின்றது. நாம் தலைவணங்கி, கரம் குவித்து உதட்டால் இறைவன் புகழ்பாடும்போது இதயத்திலுள்ள உணர்வுகள் பொங்கியெழுகின்றன.

ஆனால் உதட்டால் நாம் செய்யும் செபங்கள் வெறும் உதட்டளவோடு மட்டும் அமைந்து விடக்கூடாது. உதடுகள் மட்டும் இறைவனின் திருப்பெயரை புகழ்ந்து செய்யும் செபவேளையில் இதயமும் அதனோடு இணைந்து கொள்ளவேண்டும். இல்லையெனில் அது உண்மையான செபமாக அமையமுடியாது. இதனையே இயேசு, "இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். அவர்கள் உள்ளமோ என்னைவிட்டு தொலைவில் இருக்கின்றது" என்றார் (மத் 15:8)

## தனிச்செபமும் பொதுச்செபமும்

தனிச்செபமானது தனிப்பட்ட முறையில் இறைவனுடன் நாம் உரையாடுவதைக் குறிக்கின்றது. குழுமமாக அல்லது சமூகமாக நாம் சேர்ந்து செபிக்கும்போது அது பொதுச்செபமாக மாறுகின்றது. நாம் சொல்லும் காலை, மாலைச் செபங்கள், நற்கருணைச் சந்திப்பு, செபமாலை, சிலுவைப்பாதை முயற்சிகள் போன்றவை தனிச்செபங்களாகும்.

மனிதன் இயல்பிலேயே ஒரு சமூகத்தில் அங்கம் வகிக்கின்றான். தனி மனிதன் இறைவனைப் புகழ்வது எவ்வளவு இன்றியமையாத செயலோ, அவ்வாறே ஒரு சமூகமும் இறைவனைப் புகழ்வது தவிர்க்க முடியாதது. ஏனெனில் இறைவன் ஒரு சமூகமாகவே தம் மக்களை மீட்டுள்ளார் என்பது தெளிவான விடயமாகும். இறைவனே சமூகத்தின் தலைவராகவும், நன்மைத்தனம் உள்ளவராகவும் உள்ளார். எனவே அவரை ஏற்று ஆராதனை செலுத்த வேண்டுமென பவுல் அடிகளார் கூறுகின்றார் (உரோ 15:6).

ஒரு சமூகத்தில் பலர் இணைந்து செபிக்கும்போது அவர்கள் நடுவில் இறைவன் பிரசன்னமாயுள்ளார், அவர்கள் மன்றாட்டை கேட்டருள்வார் என்று இயேசு கூறியுள்ளார் (மத் 18:19-20). இறைவனில் நம்பிக்கைகொண்டு வாழ்பவர்கள் ஒரு சமூகமாக அல்லது குழுமமாக சேர்ந்து செபிப்பது அவசியமாகும்.

இதனால்தான் தாய்த் திருச்சபையானது 'ஆண்டவரின் நாள்' என ஞாயிறு தினத்தையும், கடன் திருநாட்களில் பொது வழிபாடுகளில் பங்கெடுக்கவும், பலி செலுத்தவும், சேர்ந்து செபிக்கவும் இறைமக்களைத் தூண்டுகின்றது. இறைவனுக்கு இடைவிடாது புகழ்செலுத்துவதும், ஆராதனை செய்வதும் முக்கியமானதாகும்.

ஆனால் மக்கள் அனைவரும் பலமுறை சேர்ந்து செபிப்பது நடைமுறைச் சாத்தியமற்றதாகையால், நாள்தோறும் பன்முறை இறைவனைப்புகழ குருக்களுக்கும் துறவியருக்கும் திருச்சபை சிறப்பான பணியை அளித்துள்ளது எனலாம். அவர்கள் சேர்ந்து செபிக்கும் **திருப்புகழ் மாலையை (Divine Office)**, தனிப்பட்ட ஆள் என்ற நிலையில் அல்லாது திருச்சபை என்கிற இறைமக்கள் திருக்கூட்டத்தின் சார்பில் செபிக்கின்றார்கள். இதன்மூலம் அவர்கள் கிறிஸ்துவோடும், கிறிஸ்துவின் வழியாக இறைவனுக்கும் புகழ் செலுத்துகின்றார்கள்.

## உள்ளத்துச் செபம்

உள்ளத்துச் செபமானது தனித்து அமைதியில் இறைவனோடு உரையாடுதலைக் குறிக்கின்றது. இதனைப் பவுல் அடிகளார் உள்ளமும் அறிவும் இணைந்து இறைவனைப் புகழவேண்டும் என்று வலியுறுத்துகின்றார் (1கொரி 14:15).

உள்ளத்துச் செபம் மூலம் இதயத்தின் ஒவ்வொரு செயலையும் இறைவனோடு ஒன்றித்து செய்ய முற்படுகின்றோம். குறிப்பாக இறைவார்த்தையை உள்ளத்தில் இருத்திச் சிந்திக்கின்றபோது, இறைவனோடு ஒன்றிக்க வழியேற்படுகின்றது. இதன்மூலம் நம் வாழ்வில் மனமாற்றம் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகின்றது.

உள்ளத்திலே இறைவனோடு ஒன்றிக்கின்றபோதுதான் நமது இதயத்தில் எழுகின்ற உணர்வுகளான, மகிழ்ச்சி, துயரம், கவலை, அச்சம் போன்ற இதயத்து உணர்வுகளை இறைவன்பால் எழுப்பி வேண்டுகிறோம். இதனடிப்படையில் உள்ளத்துச் செபமானது நாம் உதடுவழி செய்யும் செபத்திற்கு உறுதுணையாக அமைகின்றது.

செபத்தில் நமது இதயத்தில் இறைவனின் வார்த்தையை ஊன்றவிடுகின்றபோது, இறைவனின் அருளால் உண்மையான மனமாற்றத்தை அக விடுதலையை அடைய, அடுத்தவரை மன்னிக்கும் பலத்தை, ஆற்றலைப் பெறுகின்றோம்.

உள்ளத்துச் செபத்தின் மூலம் ஒவ்வொரு நம்பிக்கை கொண்டோரும் தமது அழைப்பின் கடமைகளை ஆழமாக உணர்ந்து செயல்பட தூண்டுதல் பெறுகின்றனர். அத்துடன் நமது பலவீனங்களை - நம்மை நாமாகவே கண்டுகொள்ள இதய சுத்தியுடன் நமது குறைகளை ஏற்றுக்கொள்வதற்கான வலிமையை உள்ளத்துச் செபத்தின் மூலமே பெறுகின்றோம். புனித அகுஸ்தினார் கூறுவதுபோல் "நன்றாக செபிக்கத் தெரிந்தவன் நன்றாக வாழத் தெரிந்தவன் ஆவான்."

உதடுவழிச் செபம் உள்ளத்தோடு ஒன்றிக்கும்போது அது இறைவனுக்கு ஏற்புடையதாகின்றது என்பதை நமது உள்ளத்தில் இருத்துவது அவசியம்.

## செயலோடு இணைந்த செபம்

செபமானது இறைவனை மகிமைப்படுத்துவதோடு எம்மையும் புனிதப்படுத்தி இறைவனிடம் இட்டுச்செல்கின்றது. எனவே நாம் செபிக்கும்போது உள்ளம் சோர்வுறாது எப்போதும் செபிக்க வேண்டும் என்று இயேசு கூறியுள்ளார். (லூக் 18:1). பவுல் அடிகளாரும் நாம் இடைவிடாது செபிக்க வேண்டும் எனக் கூறுகின்றார் (1தெச 5:17). எமது அன்றாடக் கடமைகளை, செயற்பாடுகளை நிறுத்திவிட்டு எப்படி நாம் இடைவிடாது செபிக்க முடியும் என்ற வினா எழுகின்றது. இதற்கு பவுல் அடிகளார் விளக்கம் கூறுகின்றார். "நீங்கள் உண்டாலும், குடித்தாலும் வேறெதைச் செய்தாலும் எல்லாவற்றையும் இறைவனின் மகிமைக்காகவே செய்யுங்கள்" (1கொரி 10:31, கொலோ 3:17) என்று கூறுகின்றார். புனித அகுஸ்தினார் கூறுவதுபோல் "உன் வாழ்வு முழுவதும் ஒரு புகழுரையாக, புகழ்பாடலாக இறைவன்பால் எழட்டும். அத்துடன் உன் உதட்டால் மட்டுமல்ல, உன் நல்ல செயல்களாலும் இறைவனைப் புகழ்வாயாக" எனவே எமது அன்றாடக் கடமைகளை, செயல்களை இறைவனின் மகிமைக்காக, இதய சுத்தியோடு அர்ப்பணத்துடன் ஆற்றும்போது அதுவே செபமாகவும் வல்லமையுள்ள இறைபுகழ்ச்சிக் கீதமாகவும் அமைந்துவிடுகின்றது.

இறைவனின் புகழுக்காக, மாட்சிக்காக செய்யப்படுகின்ற எந்தவொரு செயலும் பயன் கொடுக்கின்றது. இதன் அடிப்படையில் எமது வாழ்வு முழுவதும் இறைவனுக்கு நாம் சாற்றும் தொடர் புகழுரையாக, உன்னத திருப்பாடலாக அமைகின்றபோது வல்லமையுள்ளதாக மாறுகின்றது.

## எப்படிச் செபிப்பது?

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்பர் எமது ஆன்றோர். மீண்டும் மீண்டும் ஒரு ஓவியம் வரையும் போது அவன் சித்திரத்தில் தேர்ச்சி பெறுகின்றான். ஒருவர் அடிக்கடி ஒரு காரியத்தைச் செய்யும்போது அதில் வல்லுனராக மாறி விடுகின்றார்.

அதுபோன்று நாம் தொடர்ந்து அடிக்கடி செபிப்பதால் செபத்தில் தேர்ச்சி பெறுகின்றோம். அத்துடன் செபிக்கவும் கற்றுக் கொள்கின்றோம். செபத்தின் சுவையை அறிந்து அனுபவிக்கும் வாய்ப்பும் ஏற்படுகின்றது. மாறாக நாம் செபவாழ்வில் நிலைத்திருக்காது, தொடர்ச்சியாக செபிக்காது விடுகின்றபோது எமக்கு அது சலிப்பாக மாறுகின்றது. நாம் எவ்வளவு மணித்துளிகள் செபத்தில் செலவழிக்கின்றோம் என்பதை இறைவன் நோக்குவதில்லை. ஆனால் எவ்வளவு ஆர்வமாக, விழிப்புடன் செபத்தின் மட்டில் இருக்கின்றோம் என்பதையே இறைவன் நோக்குகின்றார். நாம் செபிக்கும்போது எத்தகைய மனநிலையுடன் செபிக்க வேண்டுமென்பதை நோக்குவோம்.

## விழிப்போடு இணைந்த பக்தி

நாம் எமது சமூக வாழ்க்கையில் ஒருவருடன் உரையாடும் போது முழுக்கவனத்தையும் அவர்பால் செலுத்தும்போதுதான் அவர் சொல்வதை நம்மால் விளங்கிக்கொள்ள முடியும். நாம் உரையாடும் நபர் முக்கியமானவராக, பெரியவராக இருந்தால் எமது கவனமும், ஈர்ப்பும் அவர்பால் அதீதமாக வெளிப்படும்.

செபிக்கம்போது நாம் இறைவனோடு உரையாடுவதால் அவரிடம் மட்டுமே நமது கவனம் இருக்க வேண்டும். அதாவது நமது உள்ளத்து உணர்வுகள், நாம் உதிர்க்கும் வார்த்தைகள், எண்ணங்கள், உடல் அமைப்பு அனைத்தும் இறைவனை நாடி நிற்கவேண்டும்.

செபவேளையில் நமது உடலும் உள்ளமும் ஒன்றித்து இருக்கும்போது நாம் வெளிப்படுத்துவதை இறைவன் கேட்க முடியும். உதாரணமாக தரம் குறைந்த, வீரியமற்ற விதையை விதைத்துவிட்டு முதல் தரமான அதிக விளைச்சலை எதிர்பார்ப்பது தவறாகும். அவ்வாறே பக்தியில்லாது, கவனமின்றி செபிப்பவரும் செபத்தின் பலனை எதிர்பார்ப்பது மடமைத்தனமாகும்.

பக்தியுடன் செபிக்க வேண்டும் என்றவுடன் உள்ளத்தில் உருக்கத்துடன், கண்ணீருடன், பரவசமாக செபிப்பது என்று சிலர் அர்த்தம் கொள்வர். சிலருக்கு இறைவன் இவற்றை கொடையாக அளிக்கக்கூடும். ஆனால் இவையின்றி செபிப்பதனால் செபத்திற்கு வலிமையில்லாமல் போய்விடுவதில்லை. இத்தகைய பண்புகளின்றி செபிக்கும் செபம் வீணானது என்று மனம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை.

"ஒருவர் உள்ளத்தில் செபத்தின் மூலம் ஆறுதலை உணராவிடினும் முயற்சியோடு, கவனத்தோடு, அன்போடு செபித்தால் செபத்திற்கு மதிப்பு உண்டு." என்று புனித திரேசாள் கூறுகின்றார். ●

# செபவாழ்வில் நிலைத்திருப்போம்

ச. அன்ரனி டிலைக்சன்,
மடுமாதா சிறிய குருமடம், மன்னார்.

இன்றைய சமுதாயம் செபத்தில் அக்கறை அற்ற, ஆர்வம் அற்ற சமூகமாகவே உள்ளது பொதுவான உண்மையாகும்.

செபவாழ்வு மறைந்து உலகியல் வாழ்வில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகம் செபத்தை நோக்கித் திரும்பிப் பார்க்க வேண்டும். இந்த உலகத்தில் எல்லாச் செல்வமும் கிடைக்கும். ஆனால் விண்ணுலக செல்வத்தை - இறைசெல்வத்தை பெறவேண்டுமென்றால் நாம் செபிக்கவேண்டும்.

நாம் எவ்வாறு செபிக்கவேண்டும்? முதலில் ஆவியானவரின் துணைகொண்டு செபிக்க வேண்டும். விசுவாசத்துடன் செபிக்க வேண்டும், தூய மனத்துடன் செபிக்க வேண்டும், மன்னித்துவிட்டுச் செபிக்க வேண்டும், மனந்தளராது செபிக்க வேண்டும், தாழ்ச்சியோடு செபிக்க வேண்டும். சிந்தித்துப்பார்ப்போம். நாம் ஒவ்வொருவரும் இவ்வாறு செபிக்கின்றோமா?

பலர் ஏன் செபிக்க வேண்டும் என்றுகூடத் தெரியாது வாழ்கின்றார்கள். நாம் எதற்காக செபிக்க வேண்டும்? நாம் ஒவ்வொருவரும் இறைவனுடைய திருவுளம் மண்ணில் நிறைவேறச் செபிக்கவேண்டும், இதைத்தானே ஒவ்வொரு நாளும் நாம் சொல்லும் பரலோக மந்திரத்திலும் செபிக்கின்றோம். "உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூலோகத்திலும் செய்யப்படுவதாக".


பாவங்களை மன்னிக்கவும் மன்னிப்புப் பெறவும் செபிக்க வேண்டும், மீட்புப் பெறச் செபிக்க வேண்டும்.

இன்றைய மனித வாழ்வு பல்வேறு பிரச்சினைகளால் சூழப்பட்டுள்ளது. இன்றைய காலப்பகுதியிலே எமக்குப் பல்வேறு சோதனைகள் வந்து எம்மைத் தாக்கும்போது இறைவனிடம் செபிக்க வேண்டும். இறைவனே அனைத்துப் பிரச்சினைகளிலிருந்தும் நமக்கு விடுதலையைத் தரக்கூடியவர்.

எம்முடைய வாழ்வில் இறைவனைப் பிரதிப்லிப்பவர்களாக மாறச் செபிப்போம். எம்முடைய பிரச்சினைகள் நீங்கச் செபிப்போம்.

இன்றைய காலப்பகுதியில் வாழும் மனிதர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. செபமும், தாழ்ச்சியும், ஏழ்மையும், சமத்துவமும்தான் இந்நிலையை மாற்றி அமைக்கும். இவை எம்மக்கள் மத்தியில் குறைந்து வருகின்றது.

இன்று "ஆண்டவர் எனது ஆயர், எனக்கேதும் குறையில்லை" என்ற நிலைமாறி, "தொலைக்காட்சி எனது ஆயன், எனக்கு ஏதும் குறையில்லை, பஞ்சு மெத்தையில் படுக்கச் செய்கிறார்,



கற்பனையில் களித்திருக்கச் செய்கின்றார், தனிமையைக் கண்டு நான் பயப்படமாட்டேன். ஏனெனில் தொலைக்காட்சி என்றும் என்னோடு இருக்கின்றது." என்ற நிலையே காணப்படுகின்றது.

தொலைக்காட்சிக்கு அடிமையாவதால் சோம்பல் அதிகரிக்கின்றது. தேவையற்ற சிந்தனைகளும் எண்ணங்களும் சிந்தைக்கு விருந்தாகி மனம் அலைக்கழிக்கப்படுகின்றது.

எனவே எமது வாழ்வில் செபத்திற்கு முதலிடம் கொடுப்போம். எமது செபவாழ்வை குழப்பும் அனைத்துத் தீமைகளையும் எம்மிடமிருந்து அகற்றுவோம். ●

# கறித்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS-VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்பணி. எஸ். ஜே. பெப்பி சோசை

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2232140, Fax : 023-2232893, E-mail : valvum@sitnet.lk


## செப வாழ்வை ஆழப்படுத்த பணியாளர்களுக்கான மாதாந்த தியானம்

இவ்வாண்டு செப ஆண்டாக மன்னார் மறைமாவட்டம் பிரகடனப்படுத்தியதற்கு அமைவாக வாழ்வுதயப் பணியாளர்களுக்கான மாதாந்தத் தியானம் நடைபெற்று வருகின்றது. இவ்வுலக வாழ்வில் மனிதன் தன் ஆன்மாவைப் பாதுகாக்க பாரிய பொறுப்புள்ளவனாக இருக்கின்றான். இந்த வார்த்தைக்கொப்ப இந்த மாதாந்தத் தியான வழிபாடு ஒவ்வொரு மாதமும் மாதத்தின் முதல் வியாழக்கிழமையில் நடைபெற்று வருகின்றது.

இறைவனே எம் பணிகள் ஒவ்வொன்றிற்கும் முதற்பொருளாய் இருக்கின்றார். அவர் அன்றி அணுவும் அசையாது என்பதை இந்த வழிபாடு உணர்த்தி நிற்கின்றது. எம் நாட்டிலே ஏற்பட்டுள்ள போரின் கொடூரங்கள் முற்றாக ஒழிந்து எல்லோரும் சமாதானத்துடன் நிம்மதியாக வாழவேண்டும் என்ற கருத்தையும் முன்வைத்து இவ்வழிபாடு நடைபெற்று வருகின்றது. இவ்வழிபாட்டினை ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு அருட்தந்தையர்கள் வழிநடத்தி வருகின்றனர்.

இவ்வழிபாட்டினைத் தொடர்ந்து ஆதிக் கிறிஸ்தவர்களின் பகிர்தல் பண்பை நினைவுகூரும் வகையில் அனைத்துப் பணியாளர்களும் ஒன்றாக உணவைப் பகிர்ந்து உண்டு மகிழ்கின்றனர்.

## யுனிசெப் நிறுவனமும், செடேக் நிறுவனமும் வாழ்வுதய உதவிக்கரப் பிரிவினருடன் கலந்துரையாடல்



வாழ்வுதயத்தின் செயற்பாட்டுப் பிரிவுகளில் ஒன்று உதவிக்கரம் அமைப்பு. இந்த உதவிக்கரப் பிரிவினூடாக பல்வேறுபட்ட மனித நேயச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் செயற்பாடுகளுக்கு நிதி உதவிகளை வழங்கும் யுனிசெப் நிறுவனமும், செடேக் (SEDEC) நிறுவனமும் அண்மையில் வாழ்வுதய உதவிக்கரப்பிரிவினரை சந்தித்து பல்வேறுபட்ட மனித நேய செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இக்கலந்துரையாடல்கள் வாழ்வுதய நிறுவன இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இதில் நிதி வழங்குனர்கள் அடுத்த கட்ட செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கும் அத்தோடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பாகக் கலந்துரையாடி உள்ளனர். இந்த உதவிக்கரப் பிரிவின் ஊடாக சக்கர நாற்காலி, மற்றும் ஊன்றுகோல்கள், ARM ஊன்றுகோல், ELBOW ஊன்றுகோல் மற்றும் தரமான செயற்கைக் கால்கள், கழுத்துப்பட்டிகள், போலியோ சப்பாத்துகள் போன்றவைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக சமகால யுத்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இவ்வுதவி வழங்கப்படுகிறது.

## கிராமிய விழிப்பூட்டல் பிரிவினால் நடாத்தப்பட்ட சமாதானக் கருத்தமர்வு



வாழ்வுதய நிறுவனமானது, மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஒப்பற்ற பணியையும் ஆற்றி வருகின்றது.

மதங்களுக்கிடையில் சமாதானத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் பணியை வாழ்வுதயத்தின் கிராமிய விழிப்பூட்டல் பிரிவு கிராமங்கள் தோறும் செய்துவருகின்றது. இதன் ஒரு கட்டமாக மடுறோட், தம்பனைக்குளம் கிராமத்தில் கடந்த 09.03.2007 அன்று இந்து, கிறிஸ்தவ சமய மக்களிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் கருத்தமர்வு இடம்பெற்றது. இதில் மளுவராயர் கட்டையடம்பன், இசைமாலைத்தாழ்வு, தம்பனைக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கிராமிய விழிப்பூட்டல் குழுக்களின் அங்கத்தினர்கள் 40 பேர் கலந்துகொண்டனர். இவர்களுக்கு சமயங்கள் தொடர்பான விளக்கங்களை அளிப்பதற்கு இந்து சமயம் தொடர்பாக முருங்கன் மகாவித்தியாலய உப அதிபர் திருமதி அம்பலவாணர் அவர்களும், கிறிஸ்தவ மதம் தொடர்பாக திரு. சீ. எம். ஏ. ஜெயதாஸ் அவர்களும், சர்வமத ஒன்றிப்பு தொடர்பாக மன்னார் சகவாழ்வு மன்றத்தின் இணைப்பாளர் திரு. ரியூட்டர் அவர்களும் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வு காலை 10.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கிராம சேவையாளர் திரு. இரவீந்திரன் அவர்களும், வாழ்வுதய நிர்வாக அலுவலர் திரு. சீ. எம். ஏ. ஜெயதாஸ் அவர்களும், தம்பனைக்குளம் முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை உறுப்பினர் திரு. ரி. சுப்பிரமணியம் அவர்களும் கலந்துகொண்டனர். இச்சமாதானக் கருத்தமர்வில் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் பிரிவு இணைப்பாளர் திரு. எஸ். அன்ரன் ராஜகாரியர் (ராஜன்) அவர்களும், ஊக்குவிப்பாளர் செல்வி. வி. அஜந்தா பெர்னாடோ மற்றும் செல்வன். வி. ஜே. பிரதீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை முருங்கன் பிரதேச கள ஊக்குவிப்பாளர் திரு. றஞ்சித் ராஜேஸ்வரன் ஒழுங்குசெய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பெரிய பண்டிவிரிச்சானில் வாழ்வுதயம் வழங்கிய மூக்குக் கண்ணாடியை அருட்தந்தை எமில் வழங்குகிறார்.



கட்டையடம்பனில் வாழ்வுதய உள ஆற்றுப் படுத்தல் பிரிவால் நடாத்தப்பட்ட கருத்தமர்வு.

## மடுத் திருத்தலத்தில் தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு வாழ்வுதயத்தின் நிவாரணப் பணி

அண்மைக் காலமாக மீண்டும் எம் மண்ணில் இடம்பெயர்வு வாழ்க்கை சாதாரண வாழ்வாகி விட்டது. கொடிய போர் மெல்ல மெல்ல உருவெடுக்கத் தொடங்கிவிட்டது. மீண்டும் மடுத்திருத்தலத்திற்கு மக்கள் அடைக்கலம் தேடி ஓடிச் செல்கின்றனர்.

இந்நிலையில் மக்களின் உடனடித்தாகத்தைத் தணிப்பதற்கு வாழ்வுதயம் கடந்த யுத்தகாலத்தில் செயற்பட்டதைப் போன்று சமகால யுத்த சூழலிலும் நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றது. தற்பொழுது வாழ்வுதயத்தால் அரிசி, சீனி, மா, பருப்பு, மீன்ரின், பால்மா போன்ற முப்பத்தைந்து இலட்சம் பெறுமதியான நிவாரணப் பொருட்கள் மடுப் பரிபாலகர் அருட்தந்தை எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் மூலமாக மக்களுக்கு வழங்கிவருகின்றது. அத்தோடு பாடசாலை மாணவருக்கான சத்துணவு போன்றவைகளும், ஆசிரியர்களுக்கான மாதாந்த ஊதியங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இவை மட்டும் அல்லாது இன்னும் பல்வேறு உடனடி உதவிகளையும் வாழ்வுதயம் செய்ய இருக்கின்றது.

அத்தோடு மன்னார் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் நிவாரண் கொடுப்பனவுகளை துரிதப்படுத்தி வருகின்றது. அண்மையில் சிறுக்கண்டல் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த 95 குடும்பங்களுக்கு முருங்கன் பங்குத்தந்தை அருட்தந்தை எஸ். ஸ்ரீபன் ராஜா அடிகளார் மூலமாக நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்தோடு வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்துவரும் மக்களுக்கு வாழ்வுதய அலுவலகத்தில் மேற்படி நிவாரணங்கள் பங்குத்தந்தை, கிராம சேவையாளர் ஆகியோரின் உறுதிப்படுத்தலுடன் வழங்கப்பட்டு வருகின்றன. இவை மட்டும் அல்லாது அவசர சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளர்களுக்கான உதவிப்பணக் கொடுப்பனவு, மற்றும் மூக்குக்கண்ணாடி போன்றவைகளும் வாழ்வுதயத்தினால் வழங்கப்படுகின்றன.

அத்தோடு இடம்பெயர்ந்த குடும்பங்களில் இறப்பு ஏற்படின் அவர்களுக்கான பூதவுடல் பேழைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான உடனடி உதவிகள் மக்களுக்கு பெரும் ஆறுதலாக அமைகின்றன.



மடுத்திருப்பதியில் தஞ்சம் புகுந்துள்ள இடம்பெயர்ந்த மக்களின் வாழ்விடங்கள்.



வாழ்வுதயத்தினால் வழங்கப்படும் நிவாரணப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் மக்கள்.

## இதய சுத்தியுடன் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு ஒற்றுமையுடன் செயற்படுவோம்

### - இந்து சமய முதன்மைக்குரு மனோகர சர்மா குருக்கள் -

அண்மையில் இரண்டாம் கட்டமாக வாழ்வுதயத்தின் சமாதானப் பிரிவினரால் சர்வமத ஒன்றிப்புக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டபோதே மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் முதன்மைக் குரு மனோகர சர்மா குருக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் பேசுகையில், மன்னார் மறைமாவட்டத்தில் வாழ்வுதயம் இப்படியானதொரு முயற்சியை முன்னெடுப்பது சாலப்பொருத்தமானதாக உள்ளது. அத்தோடு இம்முயற்சிகளை எடுக்கும் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளாருக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன் என்று கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், மன்னார் மறைமாவட்டத்தில் சர்வமதங்களும் ஒன்றிணைந்து ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழவேண்டிய சூழ்நிலையில் அனைவரும் கூடுகின்றோம். நாங்கள் எல்லோரும் ஒரே மொழியை பேசுபவர்கள். மதங்களால் வேறுபட்டவர்களாக இருந்தாலும் மதக் கொள்கைகளை ஒருங்கே பெற்றவர்கள். மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எமது மதங்களிற்கிடையேயும், ஏனைய மதங்களிற்கிடையேயும் சிறு சிறு பிணக்குகள் ஏற்பட சந்தர்ப்பங்கள் உண்டு. இவ்வாறானதொரு சந்தர்ப்பங்களில் நாம் அனைவரும் ஒற்றுமையுணர்வுடன் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலம் எம்மாவட்டத்தை அன்பிலும், ஒற்றுமையிலும் சிறந்து விளங்கும் ஒரு எடுத்துக்காட்டான மாவட்டமாக உருவாக்க முடியும் என்றும் கூறி இவ்வாறான முயற்சிகள் மென்மேலும் தொடர வாழ்த்தி விடைபெற்றார்.

பின்னர் இஸ்லாம் மத தலைவர் மௌலவி எஸ். ஏ. அசீம் அவர்களும், வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளாரும் மறைமாவட்ட சர்வமத நல்லிணக்க இயக்குனர் அருட்தந்தை பெனோ அலக்ஸாண்டர் சில்வா அவர்களும், பற்பல நற்கருத்துக்களை முன்வைத்தார்கள். பின்னர் அடுத்த கட்ட ஒன்றுகூடல் நிகழ்வு இஸ்லாம் மத பள்ளிவாசலில் நடாத்தப்படும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

## இருள் அகற்றி ஒளி கொடுக்கும் சூரியன் நீ...

நெஞ்சில் நிறைந்த எம் வாழ்வுதயமே!
உன்னை வாழ்த்தி வரவேற்கின்றோம்.
இவ்வுலக துன்பங்களைப் போக்கி
ஒளி தருகின்ற சூரியன் நீ.
உன் சேவை வளர வாழ்த்துகின்றோம்.
ஏழைகள் வாழ்வை வளமாக்க
உதித்த வாழ்வுதயமே - வாழ்க நீ!
இனமத பேதமின்றி அனைவருக்கும்
உதவிக்கரம் நீட்டும் வாழ்வுதயமே!
உன்னை வாழ்த்துகின்றோம்.
இயக்குனர்கள் மாறினாலும், உன் பணி மாறாது.
உன்னை வாழ்த்துகின்றோம்.
சிறுவனாக இருந்த நீ இப்போது 25 வயது
இளையவனாக வீரநடை போடுகின்றாய்.
மழலைகளுக்கு உணவு ஊட்டி வரும் வாழ்வுதயமே!
உனது சேவை வெள்ளி விழா, பொன்விழா,
வைரவிழா, நூற்றாண்டு விழா தாண்டியும் தொடர
வாழ்த்துகின்றோம், நாம் என்றும் போற்றுகின்றோம்

*அ. நிலாஜினி, வளர்பிறை குழு,*
*அரசடிக்குளம், செட்டிகுளம்.*

செய்தித் தொகுப்பு : அன்ரன் ராஜகாரியர் (ராஜன்)
இணைப்பாளர், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர் அன்புராசா அ.ம.தி





ஒருவர் தன்னுடைய இரு காதுகளிலும் 50 சத நாணயங்களை வைத்து அடைத்திருந்தார். காதுகளில் காசை வைத்து அடைத்திருந்ததைக் கண்ட இன்னொருவர் "ஐயா உங்கட காதில காசு இருக்குது!" என்றார். இரு காதுகளிலும் காசு வைத்திருந்ததால் அவர் கூறியது இவருக்கு எப்படிக் கேட்கும்? அவர் கூறியது கேட்காதபடியால் காசைக் காதில் வைத்திருந்தவர், "என்ன...?" என்று இழுத்தார். "இல்ல... உங்கட காதில காசு இருக்குது..." என்று மிக உச்சத் தொனியில் சத்தம் போட்டு கத்திச் சொன்னார்.

இவ்வளவு சத்தம் போட்டுச் சொல்லியும் அவருக்குப் புரியவில்லை. அதனால், "ஐயா நீ சொல்லிறதில ஒரு கோதாரியும் எனக்கு விளங்கயில்ல. என் காதில காசு இருக்குது. இன்னும் கொஞ்சம் சத்தமாய்ப் பேசுங்க!" என்றார் காதுகளில் காசு வைத்திருந்த அந்தக் 'கிறுக்குப்' பயல்!

மனிதர்களுடைய நடவடிக்கைகளை அவதானிக்கின்றபோது சில சந்தர்ப்பங்களில் ஆச்சரியமும், இன்னும் சில நேரங்களில் அதிசயமும், வேறு சில வேளைகளில் அதிர்ச்சியும் ஏற்படுகின்றன. ஏன் இவர்கள் இவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்று புரிந்து கொள்வதே மிகக் கஸ்ரமான காரியமாகிறது. எந்த நேரத்தில் எப்படி இருப்பார்கள் என்று கண்டுகொள்வதே பெரிய சிக்கலாகி விடுகிறது.

வைத்தியசாலையில் நடந்த சம்பவம் ஒன்று. வைத்தியசாலைகளில் தங்கி நின்று சிகிச்சை பெறுபவர்களை வைத்தியர்கள் பொதுவாக காலை, மாலை என்று ஆகக் குறைந்தது இரு வேளைகளில் பார்வையிடுவார்கள். ஒருநாள் வைத்தியர் ஒருவர் தனக்குப் பொறுப்பான விடுதிக்குச் (WARD) சென்றபோது ஒரு குறிப்பிட்ட நோயாளி மல்லாக்கக் கிடந்து ஒன்றன் பின் ஒன்றாகப் பாடல்களைப் பாடிக்கொண்டேயிருந்தார். "நன்றாகத்தானே இருக்கிறான் பின் ஏன் அவனைத் தொந்தரவு செய்வான்?" என நினைத்துவிட்டு போய்விட்டார். மாலையில் தன் கடமைக்காக விடுதிக்கு வந்தபோது விடுதிக்குள்ளே ஒரே பாட்டுச் சத்தம்! காலையில் மல்லாக்காகக் கிடந்து பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தவர் இப்போது குப்புறப் படுத்துக் கிடந்து பாடல் பாடல்களாகப் பாடிக்கொண்டிருந்தார். வைத்தியர், விடுதிக்குப் பொறுப்பானவரை விசாரித்தபோது, கடையில் நிறுத்தப்படாத (NON – STOP SERVICES) பஸ், தொடர்வண்டி, வானொலி சேவைகளைப் போல இவரும் பாடல்களை NON – STOP பாக பாடிக்கொண்டே இருப்பது தெரியவந்தது.

வைத்தியரும் அந்நோயாளியிடத்திலே சென்று மிகவும் எளிமையாகவும் இனிமையாகவும் உரையாடலை ஆரம்பித்தார். "என்ன... காலையில மல்லாக்கக் கிடந்து ஒரே பாட்டாயிருந்தது. மாலையில குப்புறக் கிடந்து ஒரே பாட்டாயிருக்கு...!" எனக் கூறி முடிப்பதற்குள், பாடலை நிறுத்தியவர், "இல்ல சேர், காலையில A – பக்கம் பாடிச்சிது, இப்ப B – பக்கம் பாடிக்கிட்டிருக்குது..." என்று கூறிவிட்டு, விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தான்!... இவரை உடனடியாக எந்த மருத்துவ சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றவேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

சாதாரணமாக இருக்க வேண்டியவர்கள் ஏன் அசாதாரணமாக நடந்துகொள்கிறார்கள்? என்பது பலருடைய நடத்தையைப் பொறுத்த வரையில் புதிராகவே இருக்கிறது.

நமக்கு நன்கு தெரிந்தவர்களை நாம் சந்தித்துவிட்டோம் என்றால், அவர்களின் நலன் விசாரிப்பது வழக்கம். அதுவும் நீண்ட நாட்களுக்குப் பின்னர் சந்தித்தால் சுக, துக்கம் விசாரிப்பதன் ஆவல் அதிகமாகிவிடும். இதுபோலதான் நானும் என்னுடைய உறவினர் ஒருவரை நீண்ட நாட்களுக்குப்பின் சந்தித்தினால் அவரின் சுகநலத்தை அறியும் ஆவலினால், "எப்படி சுகமாக இருக்கிறீங்களா?" என அக்கறையுடன் கேட்டேன். அவர் முகத்தை ஒரு பக்கம் வைத்துக்கொண்டு, "நீங்க கொடுத்த மருந்தால நாங்க நல்ல சுகமா இருக்கிறோம்!" என்றார். எனக்கு அப்படியே தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. தலைச்சுற்று என்றால் என்ன என்று அன்றிலிருந்து அறிந்துகொண்டேன்.

ரஜனிஷ் என்பவர் ஒரு மனோதத்துவ நிபுணர். ரஜனிஷ் தன்னுடைய நூல்களிலும் கட்டுரைகளிலும் அசாதாரண மனிதர்களின் மனநிலைகளையே பொதுவாக ஆராய்ந்து வந்தார். இதனால், அவருடைய நண்பர் ஒருவர் ஒருமுறை, "ரஜனிஷ், உங்களுடைய ஆய்வுகளில் அநேகமானவை அசாதாரணமானவர்களைப் பற்றியதாகவே இருக்கிறது. ஏன் சாதாரண மனிதர்களின் நடத்தைக் கோலங்களை ஆராயாமல் எப்போதுமே அசாதாரண மனிதர்களின் நடத்தைகளை அலசி ஆராய்கிறீர்கள்?" எனக் கேட்டுவிட்டார்.

ரஜனிஷ் புன்னகை புரிந்துவிட்டு, "நண்பரே, இந்த உலகத்திலே எல்லோருமே அசாதாரணமானவர்கள்தான். சாதாரண மனிதரே கிடையாது. அப்படி சாதாரண மனிதர்கள் யாராவது இருந்தால் அவரை முதலில் குணப்படுத்தவேண்டும்" என்று பதிலளித்தார்.

எல்லா மனிதரும் ஒருவரிலிருந்து மற்றவர் வித்தியாசப்பட்டவராகவே இருக்கிறார்கள். ஒருவரைப் போலவே மற்றவரும் இணைந்து பிறக்கின்ற இரட்டைக் குழந்தைகளில்கூட பல்வேறுபட்ட வித்தியாசங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆயினும் மனிதர்கள் என்ற மட்டில் அடிப்படையில் ஒரு ஒருமைப்பாடு இருந்தாகவேண்டும். அதுதான் மனிதநேயம்! இது எல்லா மனிதர்களுக்கும் பொதுவானதும், கட்டாயம் இருக்கவேண்டிய அத்தியாவசியமான பண்புமாகும்.

மனிதநேயம் என்பது தன்னைப்போல பிறரையும் கருதி மதிப்பது; நேசிப்பது எனச் சுருக்கக் கூறலாம். ஒவ்வொரு மனிதனுக்கும் சுய மதிப்பு, சுய கௌரவம், சுய மரியாதை, சுயநலம் என்று இருக்கின்றன. அவ்வாறு இவற்றை நான் எனக்கு வழங்குகின்றேனோ, அதேபோல மற்றவர்களுக்கும் நானும் கொடுக்கவேண்டும். அதுதான் மனிதநேயம். சுயநலம் என்ற சொல் எதிர்மறையில் பயன்படுத்தப்பட்டாலும் அச்சொல் கொடுக்கின்ற அர்த்தத்தில் ஆழமான பொருள் உண்டு. ஒருவருடைய சுயநலம் பிறர்நலத்தைக் கெடுக்காதவரை, பொதுநலத்தைப் பாதிக்காத வரை என் நலத்தில் நான் வளர முடியும் என்ற உண்மையையும் உணர்ந்துகொள்ள வேண்டி இருக்கிறது.

இவ்வுண்மையை அறிஞர் அலெக்ஸிஸ் கரோல் கூறுகையில், "மனிதன் எதை எதையோ கண்டுபிடித்துவிட்டான். இன்னும் அவன் கண்டுபிடிக்காதது அவனைத்தான்" என்றார். மாட்டீன் லூதர் கிங் இதே விடயத்தைப்பற்றி பேசுகின்றபோது "மனிதன் பறவையைப்போல பறக்கக் கற்றுக்கொண்டான், மீனைப்போல நீந்தக் கற்றுக்கொண்டான், அவன் இன்னும் மனிதனைப் போல வாழக் கற்றுக் கொள்ளவில்லை" என்கிறார். ஓர் உருதுக் கவிஞன் மனிதனைப்பற்றி எழுதுகின்றபோது, "மனிதனுக்கு மிகவும் கடினமாவது மனிதனாவதுதான்" என்கிறார்.

மதங்கள் மனிதர்களை மாண்புள்ளவர்களாக, மனிதநேயம் கொண்டவர்களாக வளர்க்க வேண்டும். மதங்கள் இதனைச் செய்கின்றது என்ற நம்பிக்கை இருப்பினும் நடைமுறையில் மதங்கள் மனிதம் வளர்க்க, மனித நேயம் காக்க முற்படுகின்றனவா? என்பதை எல்லோருமே சிந்திக்க வேண்டி இருக்கிறது.

இதுபற்றிச் சிந்தித்தபோது, "கிறிஸ்தவம் மன்னிக்கும் கிறிஸ்தவர்களை உருவாக்கியிருக்க வேண்டும். ஆனால், அது அழகான ஆலயங்களைக் கட்டி எழுப்பியிருக்கிறது. 'சைவம்' பக்தியுள்ள இந்துக்களை உருவாக்கியிருக்க வேண்டும். ஆனால், அது அழகான கோவில்களை அமைத்திருக்கிறது. 'இஸ்லாம்' பிறர்சிநேகம் கொண்ட இஸ்லாமியர்களை உருவாக்கியிருக்க வேண்டும். ஆனால், அது அழகான பள்ளிவாசல்களை எழுப்பியிருக்கிறது. 'பௌத்தம்' காருண்ணியம் நிறைந்த பௌத்தர்களைக் கட்டி எழுப்பியிருக்க வேண்டும். ஆனால் அது அழகான விகாரைகளைக் கட்டி எழுப்பியிருக்கிறது. இவையெல்லாம் சேர்ந்து எப்போது மனிதரைக் கட்டி எழுப்பப் போகின்றன?" என ஒரு முறை கவிதை எழுதியிருந்தேன்.

இச்சிந்தனைக்குப் புள்ளிகள் சேர்ப்பதுபோல அறிஞர் இராமசாமி அவர்களின் கூற்று அமைகிறது. "கடவுளை நம்புகிறேன் என்று மனிதரை மறந்துவிடாதே. வேண்டுமாயின் கடவுளைக்கூட மறந்து மனிதனை நினை! மற்றவர்களை நினை!" நினைப்போமா? ●

## மன்னா விளம்பரப் பலகை

"முயற்சி இருந்தால்
முறிந்த கிளையிலும் மலர்கள் அரும்பும்"
*எஸ். எம். பெனிற்றா, மன்னார்*

"மனைவி இறந்தால் மறுமணம் செய்யலாம்,
பிள்ளை இறந்தால் பெற்றெடுக்கலாம்.
ஆனால், பெற்றதாய் இறந்தால் என்ன செய்வது"
*அ. அருள்சுரேசா, கருங்கண்டல்.*

"அனுபவித்தவன் மட்டுமே அறிவான்
அதன் சுகத்தை மட்டுமல்ல சுமையையும்தான்"
*எஸ். பெனான்டோ, ஆண்டாங்குளம்*

"வாழ்க்கையை அர்ப்பணிக்க ஒருபோதும் தயங்கக்கூடாது. வாழ்வு என்னும் பெரும் கடலில் குதிக்கவும் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான் எமது இலக்கை அடைய முடியும்."
*எஸ். அமுதினி, சிறுக்கண்டல்.*

"சுமைகளைக் கொடுத்த கடவுள், அதைத் தாங்க
தோள்களையும் நமக்குக் கொடுத்திருக்கிறார்."
*சி. தசாங்கி, பெரியபண்டிவிரிச்சான், மடு*

"வாழ்வு விளையாட்டுக் களமல்ல, உனக்கு உள்ளவற்றைக் கொண்டு நிறைவுடன் பயணிக்க ஒரு வாய்ப்பு."
*ச. பிரியதர்சினி, கற்கிடந்த குளம்*

"பூக்கள் விழுந்தால் கொடிகள் புலம்புவதில்லை,
மறுபடியும் பூத்துக் குலுங்கும்"
*இ. சுகந்தா, நேரியகுளம்.*

"வேண்டாம் என்று நீ எதையும் கருதாதே
அதற்குள் உனக்கு வேண்டும் என்ற ஒன்று உள்ளது"
*பீ. ஒகஸ்ரினா, இறம்பைக்குளம்*

"போராட்டம் என்பது
மனித வாழ்விலிருந்து பிரிக்க முடியாதது"
*தே. காஞ்சனன், சாளம்பன்.*

"நீண்ட நாள் வாழ்வதைவிட
குறுகிய நாள் தகுதியாக வாழ்வதே மேலானது"
*தே. ஜெர்மா, சாளம்பன், அடம்பன்.*

"உறவுதான் வாழ்க்கை,
பிரிவுகள் அதில் நிதர்சனம்"
*ஜே. மெற்றில், நொச்சிக்குளம்.*

"கடவுள் இரண்டு இடங்களில் இருக்கிறார். ஒன்று வானுலகம், இன்னொன்று நன்றியுள்ள மனிதனின் இதயம்"
*ஜே. மெற்றில், நொச்சிக்குளம்.*

"உன் கனவில் ஒரு பகுதியையாவது செயலாக்காமல்,
இந்த நாளைக் கடந்துபோக அனுமதிக்காதே"
*இ. சுகந்தா, நேரியகுளம்*

"நான் போராடி இருக்கிறேன் என்பதை
என் வெற்றிகளைப் போலவே என் தோல்விகளும் சொல்லும்"
*டி. தினேஷ், லண்டன்*

"வாழ்க்கையை ஏமாற்றியதுபோல்
நீ மரணத்தை ஏமாற்ற முடியாது
*டி. யாழினி, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்*

"நம் காலத்தின் பெரிய நோய் தொழுநோயும் கசநோயும் அல்ல. பயனற்றவர் என்று சமூகத்தால் ஒதுக்கப்படுவதே மாபெரும் நோய்" *(அன்னை திரேசா)*
*இ. சுகந்தா, நேரியகுளம்*

"நல்ல நண்பனைப் பெறுவதற்கு ஒருவழி
நீ முதலில் நல்ல நண்பனாக இருப்பதே"
*பி. நிலோஜினி (குயின்சி), சாளம்பன்*

"முடிந்துவிட்டது என்பதற்காக வாழ்வுக்கு முற்றுப்புள்ளி இட்டு விடாதீர்கள். முற்றுப்புள்ளியிலிருந்தே அழகிய கோலம் ஆரம்பிக்கின்றது"
*டீ. ஜெனட் நீரஜா, கண்டி*

"அறியாமை தவறு அல்ல.
அறிய முயலாமைதான் தவறு"
*கி. கிஷோன், ஆண்டாங்குளம்*

"வலிமையுடையவனாய் இருப்பதைவிட,
பொறுமையுடையவனாய் வாழ்வதே மேல்"
*ய. அனுசா பெணாண்டோ, பெரியபண்டிவிரிச்சான்*

இந்த விளம்பரப் பலகை உங்களுக்கானது. இதில் நீங்களும் எழுதலாம். இதுபோல 'சுருக் 'நறுக் சுவையாய் ...... எழுதி அனுப்புங்கள்.

முகவரி:

மன்னா விளம்பரப் பலகை
மன்னா பணியகம்,
மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார்.

# இளைஞர் மொழிவு

## என் கேள்விக்கு என்ன பதில்?

**இளைஞர்களின் இதயத் தேடல்களுக்கு வின்னி யோசப் அடிகளாரின் விறுவிறுப்பான பதில்!**

*கேள்வி : மாணவர்கள் பிற மாணவிகளுடன் பேசினால் உடனே தப்பான செய்தியை ஏன் பரப்புகின்றார்கள்? மாணவர்கள் மாணவிகளுடன் பேசினால் தவறா? இதற்குப் பதில் தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

பதில் : மாணவர்கள், மாணவிகளுடன் பேசுவது தவறல்ல. பேசாததுதான் தவறு. ஆரோக்கியமான ஆண் - பெண் நட்புறவை நமது பெற்றோரும், சமுதாயப் பெரியோரும் ஊக்கப்படுத்தி வளர்க்காததனால்தான் இந்தப் பிரச்சினை இன்று அதிகமாக எழுகிறது.

ஆண் - பெண் இணைந்து நட்புடன் செயலாற்றுகின்ற வாய்ப்புகள் அதிகம் இல்லாத காரணத்தினால்தான் ஒரு ஆரோக்கியமான ஆண்/பெண் நட்புறவு வளராமல் உறவு கொச்சைப்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில் பெண்கள் வயதுக்கு வந்ததும் ஆண்களோடு பேசுவது பெற்றோரால் தடைசெய்யப்படுகிறது. அவளோ மனதார ஆண்களோடு பேசிப்பழக ஆசைப்படுகின்றாள். பெற்றோரும் மற்றவர்களும் எப்போதும் சந்தேகத்தோடு நோக்குகிறார்கள். பற்பலவிதமான கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். இப்படிப்பட்ட அளவுக்குமீறின கட்டுப்பாடுகள் ஆண் பெண் இடைவெளியை அதிகமாக்குகிறது.



இதையும் மீறி அவர்கள் பேசிப்பழகுகின்ற போது உறவில் திருட்டுத் தனத்தையும் ஒருவகையான கொச்சைத் தன்மையையும் கொண்டுவந்து விடுகின்றது. இதனால் ஆண் பெண் உறவுகள் மரியாதை இழந்து, பெண்களைக் கேலி செய்தல், வக்கிர எண்ணங்களோடு பார்த்தல், பேசுதல் போன்ற நிகழ்வுகள் நடக்க ஏதுவாகின்றது. இதற்கு மாறாக ஆண்-பெண் நட்புறவு ஆரோக்கியமாக மலருகின்றபோது அங்கே கேலி செய்தல், வக்கிர எண்ணம், காதல் போன்ற பிரச்சினைகளுக்கே இடமின்றிப் போய்விடும். ●

*கேள்வி : தந்தையே, ஒரு சின்னக் கேள்வி, இந்த இளமைப் பருவத்தில் உலகத்தில் நாங்கள் எப்படி இருப்பது? தலைசீவி, பௌடர் போட்டு, பொட்டு வைத்து, பூ வைத்தால் ஸ்டைல்காரி என்கிறார்கள். அதையெல்லாம் செய்யாமல் இருந்தால் பாண்டை என்கிறார்கள். எப்படித்தான் இருப்பது? சந்தேகத்தை ஒழிக்க வழியில்லையா? எங்களைப் பெற்றவர்களே எங்கள்மீது சந்தேகப்படுகிறார்கள். என்ன செய்வது?*

பதில் : வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இதுதானடா! என்றார் கவிஞர் கண்ணதாசன். இயேசு ஏழைகளோடும், பாவிகளோடும் அன்பாகப் பழகி உணவருந்தி அவர்களோடு உறவுகொண்டதைப் பார்த்த அன்றைய குருக்கள், "இவனுக்குப் பேய் பிடித்திருக்கின்றது, இவர் குடிகாரன், போசனப் பிரியன்" என்று குறை கூறினார்கள். நீங்கள் எப்படி வாழ்ந்தாலும் குறை சொல்பவர்கள் சொல்லிக்கொண்டேதான் இருப்பார்கள். ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். பிறர் உங்களைக் குறை கூறுகிறார்கள் என்று உங்களையே நீங்கள் மாற்றிக்கொண்டிருந்தால் நீங்கள் என்றுமே மகிழ்ச்சியாக வாழமுடியாது. உங்களுக்கு நல்லது என்று எது படுகிறதோ அதை மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் செய்யுங்கள். நீங்கள் எப்படி வாழவேண்டுமென்று ஆசைப்படுகிறீர்களோ அதை இலட்சியமாகக் கொண்டு வாழுங்கள். உலகம் ஆயிரம் சொல்லட்டும் உனக்கு நீதான் நீதிபதி. ●

*கேள்வி : ஒருவரிடம் அதிகப் பாசம் வைக்கும்போது ஏன் அதன் பின்விளைவுகளை எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை? தயவுசெய்து விடை கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

பதில் : மனிதன் வாழ்வதும், இயங்குவதும், பிறப்பதும் ஏன் இறப்பதும் இந்த உறவில்தான்.

உறவுதான் வாழ்க்கையின் எல்லாம் என்றே கூறலாம். ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் நல்ல உறவு பெற்றோரோடு, சகோதர சகோதரிகளோடு, நண்பர்களோடு, மனைவியோடு, பிள்ளைகளோடு அமைந்துவிட்டால் அவன் வாழ்வின் பிறந்த பயனை அடைந்துவிட்டான் என்றே கூறலாம். பிறரோடு நாம் கொண்டுள்ள இந்த ஆழமான அற்புத உறவுதான் நம்முள் இருந்துகொண்டு நோய் எதிர்ப்புச் சக்தியாக செயற்படுகின்றது என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

நாம் அதிக நாட்கள் நல்ல உடல் நலத்துடன் வாழ, நாம் பிறரோடு ஆழமான உறவு கொண்டிருக்க வேண்டும். ஆகவே ஆழமான உறவும், பாசமும், பந்தமும் எல்லா உயிர்வாழ் இனங்களும் மகிழ்ச்சியாக வாழ அடிப்படைத் தேவை என்றே கூறலாம். ஆனால் இந்த உறவு தடம்புரண்டு செல்கின்றபோது நிபந்தனையில்லாத அன்பிலும், பாசத்திலும் உறவு மலராமல், காமத்திலும், கவர்ச்சியிலும் உறவு ஏற்படுகின்றபோது, அதன் விளைவுகள் கண்டிப்பாகத் தீமைகளுக்குத்தான் இட்டுச்செல்லும் ஏன் என்றால் இது உண்மையான உறவு அல்ல. காமமும் கவர்ச்சியும் தீர்ந்தவுடன் உறவு புளித்துப் போய்விடும். குற்ற உணர்வுக்கு இட்டுச்செல்லும், நம்மைப் பித்தனாக்கி அலையவைக்கும். இந்த நிலையில் நாம் வாழ்க்கையில் எடுக்கின்ற முடிவுகள் அத்தனையுமே தீமையான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும். ●



*கேள்வி : தந்தையே, என்னிடம் தகுதிகள் இருந்தும் அதனைத் தகுந்த இடத்தில் வெளிக்காட்ட முடியவில்லையே. இதற்குக் காரணம் என்ன?*

பதில் : யாருக்கில்லைத் திறமைகள்? நம் எல்லோருக்குமே திறமைகள் நிறையவே இருக்கின்றன. அவற்றில் நாம் 10%கூட உபயோகப்படுத்துவதில்லை. நம்மைப் பற்றி நமக்கு ஒரு நல்ல சுயமதிப்பு இல்லாததே இதற்குக் காரணம். நம்முடைய வீட்டுச்சூழல், பிறப்பிலிருந்தே நாம் நம்மைப்பற்றி கேட்கின்ற எதிர்மறையான சொற்கள் (உ.ம்.) "இவளைப் பெத்ததுக்கு ஒரு அம்மிகல்லை, ஆட்டுக்கல்லையாவது பெத்திருக்கலாம்" வகுப்பு ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகளும், பிறர் முன்னால் நம்மைக் கேலி செய்த நிகழ்வுகள் (உ.ம்) "உனக்கு அறிவு இல்லை? நீ சாப்பிடத்தான் லாயக்கு", வகுப்பில் உள்ள மற்ற மாணவர்களோடு ஒப்பிட்டு நாமே நம்மைத் தாழ்த்திக்கொள்வதும், வாழ்க்கையில் வெற்றி தோல்விகள் ஏற்படுத்திய பாதிப்புக்கள் நமக்கு ஒரு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி நமது ஆளுமையை முழுமையாக வளரவிடாமல் செய்துவிடுகின்றது.



பிறருடைய அன்பும் பாராட்டும் தொடர்ந்து உங்களுக்குக் கிடைத்தால் நீங்கள் சுய மதிப்பில் வளருவீர்கள். சுய மதிப்பு வளர்ந்தால் நீங்கள் வெட்கப்படாமல், தோல்வியைப்பற்றிப் பயப்படாமல் பிறர் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்ற எண்ணம் இல்லாமல் தைரியமாக உங்கள் திறமைகளை வெளிக்கொண்டு வருவீர்கள். ●

# எமது தோல்விகளே வெற்றியின் படிக்கட்டுக்கள்

அ. ஜஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.

*"சோதனை நிறைந்த உலகில்*
*சாதனை படைப்பதை விட்டு – உன்னை*
*சோதனை செய்யும் தோல்விகளைக் கண்டு*
*துவண்டு போவதேனென்று – சற்று*
*சோர்வில்லாமல் சொல்வாயா!"*

தோல்வியைக் கண்டு எதற்காகத் துவண்டு போகின்றீர்கள்? துன்பப்படுகிறீர்கள்?

ஒவ்வொரு சரிவுகளும் எம்வாழ்வை சீராக ஓட்டிச் செல்ல உதவும் அச்சாணிகள். தோல்வியைக் கண்டு பயப்படாதீர்கள். உங்களை உயரத்தில் ஏற்றிச்செல்வதற்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுப்பீர்களா என்று அவை எம்மை சோதித்துப் பார்க்கின்றன. அதுதான் தோல்வி! அவற்றைச் சவாலாக எடுத்து எமது பணியை தொடர்ந்து செய்தோமேயானால் வெற்றி நமதே!

எமது மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையவில்லை என்றால் தாம் தோற்றுவிட்டதாக எண்ணி வீட்டிற்குள்ளே முடங்கி விடுகிறார்கள்! விளையாட்டு வீரர்கள் போட்டியில் தோல்வி அடைந்துவிட்டால் எல்லாம் முடிந்து விட்டதாக நினைத்து மனதை தளர்வடையச் செய்து விடுகிறார்கள்!

எந்த ஒரு விடையத்திற்குச் சென்றாலும் நிட்சயம் வெற்றி கிட்டவேண்டும் என்றே பலர் நினைப்பார்கள். ஆனால் அது தோல்வியில் முடிந்து விட்டால் வாழ்க்கையில் தோற்றுப்போனதாக கற்பனை செய்துகொண்டு முடங்கி விடுவார்கள். சிலர் பந்தயம் பிடிப்பார்கள். அதில் தோல்வி அடைந்ததும் தான் அவமானப்பட்டு விட்டதாக எண்ணி தற்கொலை செய்யத் துணிந்து விடுவார்கள்.

தோற்றுவிட்டால் வாழ்வே முடிந்து விட்டதென எண்ணி விபரீதமான முடிவு எடுக்கின்றார்கள். அவற்றின் ஊடாகத் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்வது கவலைக்குரிய விடயமாக அமைகிறது.

ஏன் இந்த நிலைப்பாடு! சற்று ஆழமாகச் சிந்தியுங்கள்! ஒரு தடவை தோற்றுப்போனால் மீண்டும் மீண்டும் முயற்சி செய்யுங்கள். முயற்சியும் கடும் பயிற்சியுமே எம்மை வெற்றிக்கு இட்டுச்செல்லும். நாம் எதிலும் வெற்றி அடைய வேண்டும் என்றால் முதலில் எம் உள்ளத்தில் தன்னம்பிக்கை வேரூன்ற வேண்டும். நம்பிக்கைதான் வாழ்க்கை.

ஒருமுறை தோற்றுவிட்டால் நம்பிக்கையோடு முயற்சி செய்யுங்கள். நிட்சயம் வெற்றி கிடைக்கும். அதை விட்டுவிட்டு உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளாதீர்கள். நாம் வெற்றிபெற வேண்டுமெனில் எம்மில் எமக்கென்று ஒரு இலட்சியம் இருக்க வேண்டும். அவ்வாறு இலட்சியம் எம்முள் இருந்தால் அதை எப்படியாவது அடைந்தே தீரவேண்டும் என்ற தாகத்தோடு அதை எட்டிப்பிடித்து விடுவோம். எனவே எமக்கென்று ஒரு இலட்சியத்தை வகுத்து அதனூடாக வரும் தோல்விகளை வென்று வெற்றி வீரர்களாக சாதனை படைத்து விடுவோம். அப்போது வாழ்வின் அர்த்தத்தை புரிந்து கொள்வோம்.

வாழ்க்கை என்றால் என்ன? என்று அப்போது எமக்குப் புரியும்! துன்பங்களையும், தோல்விகளையும் தாண்டித்தான் ஒரு இலட்சியத்தை அடைய வேண்டியுள்ளது என சாதனை படைத்தவர்கள் கூறுகின்றார்கள். இதை அடைந்தே தீருவேன் என்ற வேகமும், வெறியும் அவர்களுக்குள் புகுந்துவிட்டால் தலை போகுமளவிற்கு தோல்விகள் வந்தாலும்கூட அவற்றை ஒரு தூசுபோல தட்டித் துடைத்துவிட்டு சாதனை படைக்கும் பாதையில் முன்னேறிச் சென்றுகொண்டிருப்பார்கள்.

அவ்வாறுதான் எமது வாழ்க்கையும் ஏற்ற, இறக்கத்தின் மத்தியில் சென்றுதான் நிரந்தரமான உயர்வான ஓர் இடத்தில் போய் நிற்கும்.

எனவே சிறு சிறு தோல்விகளால் வாழ்க்கை உடைந்து விடாமல் துணிவுடனும், தன்நம்பிக்கையுடனும் மீண்டும் எழுந்து வெற்றியின் இலக்கை நோக்கிப் புறப்பட வேண்டும். அவ்வாறு வாழும்போது தோல்வி என்ற பேச்சிற்கே இடமிருக்காது.

மற்றவரின் கேலிப்பேச்சிற்கு எமது செவிகளை மூடிவிட்டு, அடுத்தவரின் உற்சாக வார்த்தைகளுக்கு எம் மனதையும், செவியையும் அகலத் திறந்து விடுவோம். தோற்று விட்டோமே என்று கவலைப்படுவதை விட்டுவிட்டு உற்ற நண்பர், பெற்றோரிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுவோம். அதன்படி மீண்டும் முயற்சிசெய்து வெற்றிப் படிகளில் ஏறிச்செல்லுவோம். அப்போது நாம் வெற்றி வீரர்களாக நிச்சயம் திகழலாம்.



சிலர் விழுந்து விழுந்து காதலிப்பார்கள். அதில் தோல்வி அடைந்துவிட்டால் அதற்கு உடனடி நிவாரணி "தற்கொலை"தான் எனச் சிந்திக்கிறார்கள். ஏன் இந்த நிலை?

நீந்திக் குளிக்கப் போகின்றேன் என எண்ணி பாறாங்கல்மேல் கண்மூடித்தனமாக வீழ்ந்தால், யாருக்கு நஷ்டம்? குளிப்பதற்கு முன் குளத்தில் நீர் இருக்கிறதா, நல்ல நீரா? கெட்ட நீரா? என்று ஆராய்ந்து பார்த்தபின்னரே அதில் இறங்கி குதித்துக் குளிக்க வேண்டும். இல்லையெனின் ஆபத்து நேரிடும்.

அதேபோன்றுதான் நான் காதலிப்பவர் நல்லவரா, கெட்டவரா. திருமணம் மட்டும் என்னுடன் வருவாரா, இருவீட்டாரும் சம்மதம் தெரிவிப்பார்களா, ஏமாற்றும் பேர்வழியா, இறுதிவரை காப்பாற்றக்கூடியவரா என்று ஆய்ந்தறிந்த பின்னரே காதலிக்க ஆரம்பிக்க வேண்டும். அதை விடுத்து எழுந்தமான முறையில் காதலித்துவிட்டு இறுதியில் தோல்வியடைந்த நிலையில் வாழ்க்கையே தொலைந்து விட்டதாக எண்ணி பித்துப்பிடித்து அலைவதையோ, அல்லது எனக்கு இனி திருமணமே வேண்டாம் என்று அடம்பிடிப்பதையோ, வாழ்வில் விரக்தி அடைந்து தற்கொலை செய்து வாழ்வை அழித்து விடுவதையோ, தயவுசெய்து விட்டுவிடுவோம்.

காதலில் தோல்வி அடைந்தால் அதை தாங்க முடியாதுதான். அந்தத் தோல்விக்கு பொறுப்பாளிகள் நாமும்தான் என்பது உண்மை. அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்

ஒருவர் சுமாரான, அழகானவராக இருந்து விட்டால் போதும். உடனே அவரிடம் எம் மனதை தொலைத்துவிடுவோம். இறுதியில் அவர்கள், "நான் உம்மை எனது அண்ணன்போல அல்லது எனது தங்கையைப்போல நினைத்துத்தான் பழகினேன்" என்று கூறியவுடன் நாம் தோல்வி அடைந்துவிட்ட அவமானத்தில் விபரீதமான முடிவெடுக்கின்றோம்.

அழகைப் பார்த்து வருவதல்ல காதல். இருமனங்கள் ஒருவரை ஒருவர் ஏற்று இணைவதன் மூலமே காதல் புனிதமாகின்றது. இல்லையெனில் அதன் புனிதத்தன்மை கெட்டுவிடுகின்றது.

வேண்டாம் - காதலை கொச்சப்படுத்தாதீர்கள். சிறு தோல்விக்கெல்லாம் காதலைக் குற்றம் சாட்டாமல் உங்களை நீங்களே தட்டிப்பார்த்து அதற்கான பதிலை தேடிக் கண்டு பிடியுங்கள். அப்போது உங்களுக்குள் இருந்து தெளிவான விடையும், அதற்கான தீர்வும் கிடைக்கும்

ஆகவே தோல்வியைக் கண்டு முடங்கிவிடாமல் அதை ஓர் சவாலாக ஏற்று சாதித்துவிடுங்கள். எந்த விடையத்தையும் ஆய்ந்தறிந்து, எம்மால் வெற்றியடைய முடியுமா என்று பலமுறை சிந்தித்தே செயல்படுங்கள். அப்போது தோல்விகள் அழிந்து நீங்கள் வெற்றிபெற்றிடுவீர்கள் என்பதில் ஐயமில்லை.

"உலகம்" ஒரு போர்க்களம். அதில் "வாழ்க்கை" என்பது ஒரு போராட்டம், போராட்டத்தில் வெற்றிபெறுவோம் என்ற எண்ணமும், தன்னம்பிக்கையுமே நமக்கு வேண்டும். உங்கள் இலட்சியத்தில் நம்பக்கை வையுங்கள். தன்னம்பிக்கைதான் அனைத்துத் தோல்விகளுக்கும் விடுதலையாக அமையும் என்பது நிஜம்.

*"தோல்வியை கண்டு துவண்டுவிடாமல்*
*தோற்று விட்டேனே என்று முடங்கி விடாமல்*
*தோற்பையை தோளில் போட்டபடி*
*தூரநோக்கோடு நீ செயல்படு!*
*தேள்போல கொட்டிக் கொண்டிருக்கும்*
*தோல்வியை, தூசுபோல தட்டி விடு.*
*அப்போ தோல்வி எல்லாம் வெற்றிப்படிகளாகும்!*
*சோகங்கள் எல்லாம் சுகமாக மாறும்!*
*நீ சாதனை படைப்பது உறுதி!*
***தன்னம்பிக்கை படைத்தவன் தன் வாழ்வில் தோற்றதாக சரித்திரமே இல்லை.*** ●

## வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை இலகு தமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!

# வாழ்வும் வழிபாடும்

தருவது வலண்டின் ஜோசப்



தொடர் - 4

## 4. வழிபாட்டிற்கு விவிலியத்தை எடுத்துச் செல்ல வேண்டுமா?

வழிபாட்டிற்கு விவிலியத்தை எடுத்துச்செல்ல வேண்டுமா? என்று பல கத்தோலிக்கர்கள் கேட்கிறார்கள். இதுவரை ஆலயத்திற்கு விவிலியம் எடுத்துச் செல்வது நமது பழக்கமாக இல்லை. அருங்கொடை இயக்கங்களின் தூண்டுதலால்தான் இப்போது சிலர் ஆலயத்திற்கு விவிலியம் எடுத்துச செல்கிறார்கள். திருச்சடங்குகளில் பங்கேற்பதை விட்டுவிட்டு, விவிலியத்திலேயே கவனத்தைச் செலுத்துகிறார்கள். இது சரியா? என்பது பலருடைய வாதமாக உள்ளது.

ஆலயத்திற்கு விவிலியத்தை எடுத்துச்செல்வது மிகவும் சிறப்பான செயல். இதுவரை இவ்வாறு இல்லாததற்குக் காரணம், வரலாற்றில் கத்தோலிக்கர்களுக்கும், பிரிவினைச் சகோதரர்களுக்கும் ஏற்பட்ட கசப்பான கருத்து வேறுபாடுதான். *விவிலியம் போதும், வழிபாடு தேவையில்லை* என்று கூறிய பிரிவினைச் சகோதரர்களை எதிர்கொள்கின்ற நிலையில்தான் திருச்சபை இந்தப் பழக்கத்தை ஊக்குவிக்கவில்லை.

இன்று விவிலியத்தை நமது வழிபாட்டின் மையமாக நாம் வடிவமைத்திருக்கிறோம். ‘*இறைவார்த்தைக் கொண்டாட்டமே வழிபாடு*’ என்ற புதிய இலக்கணத்தோடு வழிபாட்டு இயக்கங்கள் திருச்சபையில் பெரும் புரட்சியையே ஏற்படுத்தியுள்ளன.

இறைவார்த்தைகள் அடங்கிய விவிலிய நூல்கள் ஆதிக் கிறிஸ்தவ சமுதாயங்களின் நம்பிக்கை அனுபவங்கள். யூத சமயத்தில் வெளிப்பட்ட இறைவனின் அருஞ்செயல்களை நினைத்துப் பார்த்து, அவை கிறிஸ்துவில் முழுமை பெற்ற விந்தையைக் குறித்துக் காட்டி இறைவனின் மாட்சிமையை அறிக்கையிடும் அற்புதக் கோலங்கள்.

### இறை வார்த்தைக் கொண்டாட்டம்

வழிபாட்டில் நாம் இறைவார்த்தையைக் கொண்டாடுகிறோம். வரலாற்றில் இறைவன் செயல்பட்ட விதங்களை எண்ணிப் பார்த்து, இன்று இந்த இறைவார்த்தை நம்மோடு பேசும் விதங்களைக் கண்டுணர்வதே இறைவார்த்தைக் கொண்டாட்டம்.

வழிபாட்டில் குடும்பத்தின் மத்தியில் இறைவார்த்தை முழங்கப்படுகிறது. இறைவார்த்தையின் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. இறைவார்த்தைக்கான பதிலுரைகள் நன்றியுணர்வுகளாகவோ, புகழுரைகளாகவோ வழிபாட்டுச் சமுதாயத்தில் வெளிவருகின்றன.

இந்தப் பதிலுரைகள் உயிரோடும், உணர்வோடும் கலக்கச் செய்யும் அடையாளச் செயல்களாகச் சடங்குகள் உள்ளன. நற்கருணைக் கொண்டாட்டத்தில் அப்பமும், இரசமும் இறைவார்த்தையின் மற்றொரு ஆழமான வெளிப்பாடுதான்.

இந்தச் சடங்குகளால் உள்வாங்கப்பட்ட இறைவார்த்தை, விழுமியங்களாக மாறி, சமுதாயத்தில் வார்த்தையின் பணியாளர்களாக வாழ்வதற்கு நம்மை அழைத்துச் செல்கின்றன. எனவே, இறைவார்த்தையின் கொண்டாட்டமான திருவழிபாட்டிற்கு விவிலியத்தை எடுத்துச் செல்வதை நாம் ஊக்கப்படுத்த வேண்டும். எடுத்துச்செல்வதே மிகப்பெரிய அடையாளமாக மாறுகிறது. விவிலியத்தைக் கொண்டாடச் செல்கிறோம் என்ற எண்ணத்தை உருவாக்குகிறது.

### எப்படி விவிலியத்தைப் பயன்படுத்த வேண்டும்?

இது மிகப் பொருத்தமான கேள்வி. இறைவார்த்தை அடங்கிய விவிலியத்தைத் தனியாக வாசித்துக்கொண்டிருப்பதற்காக நாம் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லவில்லை. கிறிஸ்தவ சமுதாயம் முழுவதும் இணைந்து இறைவார்த்தையை வாசிக்க வேண்டும். இறைவார்த்தை வழிபாட்டில் முழங்கப்படுகிறது. இவ்வாறு முழங்கப்படும்போது கேட்பதுதான் திருவழிபாட்டுச் செயல். நம்பிக்கையோடு வார்த்தையின் பணியாளர் இறைவார்த்தையை வாசிக்கும்போது அதைப் பார்க்காமல், அவரது வார்த்தைகளைக் கேட்காமல் விவிலியத்திலேயே மூழ்கிக் கிடந்தால் அது சமுதாயக் கொண்டாட்டம் அல்ல. கவனமாகக் கேட்பதற்கு கொண்டு செல்லும் விவிலியம் உதவியாக இருக்க வேண்டுமே தவிர தடையாக இருக்கக்கூடாது. இறைவார்த்தையை வாசிப்பவர் விவிலியத்தில் உள்ள அதிகாரத்தையோ, எண்களையோ சொல்லி, தான் வாசிப்பதை மக்கள் பின்பற்றச் சொல்வதும் ஒரு சிறந்த முறைதான்.

இறைவார்த்தையைக் கேட்பவர்கள் அதனால் பாதிக்கப்பட்டு தங்கள் உணர்வுகளை பதிலுரையாக, ஆர்ப்பரிப்பாக, மன்றாட்டாக, நம்பிக்கை அறிக்கையாக வெளியிட வேண்டும். அதில்தான் வழிபாட்டின் வெற்றியே அடங்கியிருக்கின்றது. இந்தப் பதிலுரையை மக்களிடம் எழுப்பும் வண்ணம் விவிலியம் வழிபாட்டில் பயன்படுத்தப்படலாம். மறையுரை சொல்லும் பணியாளர் தொடர்புடைய விவிலியப் பகுதிகளைப் பார்க்கச் சொல்லலாம். வார்த்தையை வாசித்துத் தியானிக்கச் சொல்லலாம்.

### திருவழிபாடு விவிலிய வகுப்பா?

பலருக்கு மறையுரை விவிலிய வகுப்பா? என்ற கேள்வி எழுவது இயற்கை. நிச்சயமாக மறையுரை விவிலிய வகுப்பு அல்ல. அதேசமயம், இறைவார்த்தை மக்கள் மனதில் பதியும்படி தொடர்பு ஊடகமாக விவிலியத்தைப் பயன்படுத்துவது தவறு அல்ல. உரிய காலம், மக்களின் கவனம் ஆகியவற்றைப் பொறுத்து இத்தகைய செயல்களை வடிவமைப்பது அவசியம்.

பதிலுரைப்பாடல் எப்போதும் திருப்பாடலாக அமைய வேண்டும் என்று திருச்சபை வலியுறுத்துகின்றது. காரணம், இறை வார்த்தைக்கு இஸ்ராயேல் மக்கள் பதில் தந்த விதங்கள்தான் திருப்பாடல்கள். ஆலயத்திலும், தொழுகைக்கூடங்களிலும், பாஸ்காச் சடங்குகளிலும் இறைவார்த்தையின் தூண்டுதலுக்குப் பதில் சொன்ன விதங்கள்தான் திருப்பாடல்கள். சாதாரண பாடல்களைப் பாடுவதைவிட திருப்பாடல்களைப் பதிலுரையாகப் பாடுவதே சிறந்தது. இத்தகைய நேரங்களில் திருவிவிலியத்தை பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானதாகும்.

திருப்பலிப் புத்தகத்தில் வருகைப் பல்லவி, திருவிருந்துப் பல்லவி என்று அழகுற அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அவை எல்லாமே விவிலிய வார்த்தைகள்தான். பாடல்கள் பாடாதபோது சொல்லப்படும் சிறிய பல்லவிகள் அவை. வருகைப்பாடல், காணிக்கைப்பாடல், திருவிருந்துப்பாடல் போன்ற பாடல்கள் பாடப்படும் நேரங்களில் விவிலியப் பகுதிகளையே சில சமயங்களில் இசையமைத்துப் பாடுதல் பொருத்தமானதாக இருக்கும். இத்தகைய தருணங்களில் விவிலியத்தைப் பயன்படுத்தலாம்.

### வழிபாட்டுக் குழுவின் பணி

விவிலியத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்று திட்டமிட்டுச் செயல்படுவது குறிப்பிட்ட சமுதாயத்தினுடைய பங்கேற்பைப் பொறுத்தது. வழிபாட்டில் விவிலியம் மிக முக்கியமான அடையாளமாக இருக்கிறது என்பதே நான் வலியுறுத்த விரும்பும் கருத்து.

சில வருகைப் பவனிகளில் விவிலியத்தை எடுத்துச் செல்கின்றனர். விவிலியத்தைக் கொண்டாடப்போகிறோம் என்று மக்களுக்கு பறைசாற்றிச் சொல்லும் இந்தப் பழக்கம் வரவேற்கத்தக்கதே. சிலர் இறைவார்த்தைக்கு அஞ்சலி செய்கின்றனர். அதுவும் பாராட்டத்தக்கது. ‘அல்லேலூயா’ என்று இறைமக்கள் அனைவரும் ஆர்ப்பரிக்கின்ற நேரத்தில், திருத்தொண்டரோ அல்லது குருவோ விவிலியத்தைப் பவனியாக எடுத்துச் செல்வது மிகப் பொருத்தமானது.

சில இடங்களில் வாசக மேடையே இருப்பதில்லை. திருவழிபாட்டைப் பொறுத்தவரை பலிப்பீடம் எந்த அளவிற்கு முக்கியமோ, அந்த அளவிற்கு வாசக மேடையும் முக்கியமானது. இறைவார்த்தைப் பகுதி முழுவதும் அந்த மேடையிலே நடைபெற வேண்டும். சில ஆலயங்களில் முதல் வாசகம், பதிலுரைப்பாடல், இரண்டாம் வாசகம் மட்டுமே வாசக மேடையில் முழங்கப்படுகிறது. அருட்பணியாளர் நற்செய்தி வாசிக்கவும், மறையுரை சொல்லவும், பீடத்திற்குச் சென்றுவிடுகிறார். இது சரியான முறையல்ல. மக்கள் அனைவரையும் சென்றடையும்படி வாசக மேடைகளை ஆலயத்தின் முக்கிய பகுதியில் அமைத்து, இறைவார்த்தை வழிபாடு முழுவதையும் அதில் நடத்துவதே பொருத்தமானது.

### இறை வார்த்தைத் தயாரிப்புகள்

சில பங்குகளில் திருப்பலிக்குமுன் இறைவார்த்தையைச் சின்னக் குழுக்களிலோ, வீடுகளிலோ, தனியாகவோ வாசித்து, தியானித்துவிட்டு வரும் பழக்கம் இருக்கிறது. இந்தப் பழக்கத்தை அருட்பணியாளர்கள் வலியுறுத்த வேண்டும். இறை வார்த்தையைக் கொண்டாட வேண்டுமெனில் அதற்கான தயாரிப்புகள் அவசியமானவை. இறைவார்த்தையின் பின்னணி பண்பாட்டுச்சூழல், வார்த்தையின் பொருள் ஆகியவற்றைத் தெரிந்து வந்தால் செய்தியைக் கொண்டாடுவது வலிமையுடையதாக அமையும்.

சில பங்குகளில் அருட்பணியாளர்கள் மறையுரைக்குழு என்ற ஒன்று அமைத்துச் செயற்படுகின்றனர். அந்தக் குழுவோடு சேர்ந்து ஞாயிறு மறையுரையைத் தயாரிக்கும்போது மக்களின் தேவையின் அடிப்படையில் இறைவார்த்தையைப் பிட்டுக்கொடுக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது.

பல இடங்களில் ‘ஞாயிறு மின்னல்’ போன்று துண்டுத்தாள்கள் கொடுக்கப்படுகிறது. அதில் மறையுரைகள், குறிப்புக்கள் அடங்கியுள்ளன. அவற்றைப் பார்த்து அப்படியே மறையுரை வழங்குவது பொருத்தமானது அல்ல. அவை மறையுரைக் குறிப்புகள் மட்டுமே. மறையுரை என்பது குறிப்பிட்ட இறைமக்கள் சமுதாயத்தின் வாழ்வில் இறைவன் என்ன பேசுகிறார் என்பதை எடுத்துச் சொல்லும் இறைவார்த்தைக் கொண்டாட்டமே. எனவே, வெறும் கதைகள், நிகழ்வுகள் அடங்கிய சொற்பொழிவு மறையுரையாகாது.

### கணினிகள் வழியாக

சில ஆலயங்களில் இறைவார்த்தையைக் கணினிகள் துணைகொண்டு மக்களின் கவனத்தை ஈர்க்கும் ஓவியங்களாகவோ, அடையாளங்களாகவோ, வார்த்தைகளாகவோ பொறித்து வைக்கின்றனர். இத்தகைய முறையும் மக்களுக்கு மிகவும் பயன்படுகிறது.

சில பெந்தகோஸ்து சபைகள் செய்வதுபோல் இறை வார்த்தையை வரி வரியாக வாசித்துப் பொருள் கொள்வது வழிபாடு அல்ல. நமது வாழ்க்கையில் இறை உறவை இறை வார்த்தை வழிபாடாகக் கண்டுணர்ந்து கொண்டாடும் நிகழ்வே வழிபாடு.

ஆதித்திருச்சபையில் வழிபாட்டுச் சூழலில்தான் விவிலியமே உருவாகியிருக்கிறது. விவிலியத்தில் உள்ள பல்வேறு பகுதிகள் வழிபாட்டில் வடிவம் பெற்றவையே. இயேசுவின் வாழ்வு நிகழ்வுகள், திருத்தூதர்களின் மன்றாட்டுக்கள், அறிவுரைகள் போன்றவை வழிபாட்டுச் சூழலில் சொல்லப்பட்டவை. சொல்லி மெருகேற்றப்பட்டவை. எனவே, இறைவார்த்தையையும், வழிபாட்டையும் ஒருபோதும் பிரித்துப் பார்க்க முடியாது.

ஆலயத்திற்கு விவிலியத்தை எடுத்துச் செல்வோம். விவிலியத்தை ஆலயத்தில் கொண்டாடுவோம். இறைவார்த்தை என்பது இன்று இறைவன் நம்மோடு எவ்வாறு பேசுகிறார் என்பதன் அடையாளம். (வாழ்வும் வழிபாடும் தொடரும்)

---

## 1ம் ஆண்டு நினைவு



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 25 | | 28 |
| 08 |  | 04 |
| 1972 | | 2006 |

### குணரட்ணம் கோல்டன் (ஞானம்)
(கள்ளிகட்டைக்காடு)

ஓராண்டு சென்றாலும், ஓயாது எம் துயரம். வேதனைகள் பட்ட பரமன் பாதம் வேதனையுடன் உயிர் துறந்தாய். இல்லறத்தை நல்லறமாக்கி, எம் குடும்பத்திற்கே குலவிளக்காய்த் திகழ்ந்த எம் தெய்வமே! எம் மனதைவிட்டு நீங்காது உம் நினைவு. உம் ஆன்மா சாந்தியடைய அனுதினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 28.04.2007 சனிக்கிழமை மாலை கள்ளிகட்டைக்காடு குருசுக்கோவிலில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*இவரின் பிரிவால் துயருறும்,*
*அம்மா, மனைவி, பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள்.*

---

## 1வது பிறந்தநாள் வாழ்த்து.





01 ✤ 04 ✤ 2007

### எஸ். ஜீன் ஜெரீனா

மன்னார் வயல் வீதி, சின்னக்கடையை வசிப்பிடமாகக் கொண்ட ஜமுனா சாந்தகுமார் தம்பதிகளின் செல்வப் புதல்வி எஸ். ஜீன் ஜெரீனா தனது முதலாவது பிறந்த நாளை, தனது இல்லத்தில் 01.04.2007 அன்று மிக விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பா ஆகியோர் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பாகவும் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*தகவல்: திரு.திருமதி. சாந்தகுமார், ஜமுனா.*

---

## மனங்கள் மாறட்டும்



மனிதா! மனிதா!
உன்னையே நீ ஏற்றுக்கொள்கிறாயா?
சற்றுச் சிந்தித்துப்பார்.

ஆண் என்ன? பெண் என்ன?
இருவரும் மனித ஜாதியே!
உனக்குள் ஏன் பிளவுகள்? மனிதா
ஜாதி என்ன மதமென்ன
அழகென்ன அறிவென்ன – மனிதா
பட்டமென்ன பதவியென்ன
பணமென்ன பொருளென்ன – மனிதா
எல்லாம் இறைவன் கொடையே
உணர்ந்து கொள் மனிதா உணர்ந்து கொள்.

இனியும் பிளவுகள் ஏற்றத்தாழ்வுகள் வேண்டாம்
நான் நான் என்ற அகங்காரம் வேண்டாம்.
கிறிஸ்துவை ஆடையாக அணிந்து
திருச்செபமாலையை அணிகலமாக அணிந்து
செபத்தை வாழ்வாக்கி
திருச்சிலுவையை வழியாகக்கொண்டு வாழ்ந்துவிடு.

இல்லை என்பதை நிறுத்தி
ஆம் என்பதை நாவில் கொண்டு வாழ்.
வெளிவேடத்தனத்திலிருந்து மாறிவிடு

*பி. திலகா,*
*பிச்சைகுளம், முருங்கன்.*

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர் 39

## அன்புக்கு அலையும் அனாதைகள்

சொல்லின் செல்வர்
அமுது

1973இல் இந்தியாவுக்கு வெளியில் 5 இல்லங்கள் அமைத்ததோடு வெளிநாடுகளில் 20 இல்லங்கள் ஆகின. அவற்றில் ஒன்று, தென் அமெரிக்காவில் அன்டிஸ் மலை முதுகில் உள்ள பெரு என்ற தேசத்தில் காலூன்றியது. அங்கே லைமா என்ற இடத்துக்கு அண்மையில் குடிபோன மடம் ஒன்றை பெற்றுக்கொண்டனர். அந்த இடத்தில் வீடுகள் தற்காலிக சமாளிப்புக்காக அமைந்தவை. நிலத்தின் போக்குக்குப் பொருத்தமானவை. வரண்ட நிலமாயும் தூசிப்படலமாயும் அது தோன்றியது. அங்கே சனநெருக்கமும், ஆரவாரமான சத்தமும் நிறைந்திருக்கும். கன்னியர்கள் தங்கள் இல்லத்துக்கு சமாதானத்தின் வீடு எனப் பெயர் சூட்டினர். 400 பேரை அடக்கக் கூடிய விசாலமான இல்லம் அது. இளம் பிள்ளைகள், வீடற்றவர்கள், மதுப்பிரியர், வலது குறைந்தோர் என்போரால் அது நிரம்பியது. அங்கு வாழ்ந்த பிள்ளைகளில் இருவர் அப்சலம், எசக்கியேல் என்ற சகோதரர்கள்.

அவர்களின் தலை பெரிது, உடல் மெல்லியது. நடக்கும்போது கிழவர்மார்போல் தக்குப்புக்கென்று நடப்பர். அவர்களுடைய உண்மையான வயது 14,12 ஆக இருந்தாலும் பார்வைக்கு 6, 7 வயதுக்குமேல் மதிக்க முடியாது. மலைப்பகுதியில் ஒரு சின்ன இருண்ட வீட்டிலே ஒரு கன்னியர் அவர்களைக் கண்டார். அங்கே அவர்கள் தவழ்ந்துகொண்டே வந்தார்கள். கன்னியர்கள் அவர்களை எடுத்து வளர்த்து வந்தனர்.

1973இல் இந்திய அரசு அன்னை திரேசாவுக்கு இலவச விமானச் சீட்டை வழங்கியது. அதைக்கொண்டு உலகின் எந்த மூலைகளுக்கும் அவர் இலவசமாக பயணம் செய்யலாம். அதற்குக் கைமாறாக, விமானத்தில் செல்லும்போது பணியாளராக வேலைசெய்ய விரும்பி அன்னையவர்கள் கேட்டுக்கொண்டபோது பெருந்தன்மையாக மறுத்துவிட்டனர்.

இதே ஆண்டில் செல்வாக்கும் பாரம்பரியக் கீர்த்தியுமுள்ள பரிசொன்று அன்னை அவர்களுக்குக் காத்திருந்தது.

பிரிந்திருக்கும் கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் அன்புப்பணிக்கான பரிசை அன்னை திரேசாவுக்கு அளிக்க வேண்டுமென்பதில் வேறுபட்ட கருத்தைக் காட்டியதில்லை. எல்லாச் சாதி இனங்களும் அன்னையின் சேவையை மதித்துப் பாராட்டினர். சமயத் தொண்டரின் சேவையை வியக்கும் தெம்பிள்டன் பரிசு (Templeton Prize for Progress in Religion) என்பது அதன் பெயர். அன்னை திரேசா இங்கிலாந்துக்குச் சென்றார். அரசகுமாரனும், இராணியின் கணவனுமான பிலிப் இப்பரிசை அளித்தார்.

பரிசைப் பெற்றுக்கொண்ட வேளையில் இயேசுவைப்பற்றி சுருக்கமான சிற்றுரையொன்றை அன்னை ஆற்றினார். அது இதயங்களைத் தட்டியது.

“முன்புபோல இப்போது இயேசு நம்மிடையே வந்தால் நாம் அவரை அறிந்துகொள்ள மாட்டோம். அவர் கந்தல் துணியை அணிந்து, சிதைந்த உடலுடன் வறுமைக் கோலத்தில் வருகிறார். செல்வத்தைக் குவித்து மூச்சுத்திணறிக் கொண்டிருப்போரிடத்திலும் வருகிறார். அவர்கள் இதயம் தனிமையில் தவிக்கும்போது - ஒருவரும் அவர்களை அன்பு செய்யாமல் விலத்தி வைத்திருக்கும்போது - உங்களிடத்திலும் என்னிடத்திலும் அவர் வருகிறார். பலமுறை அடிக்கடி - நாங்கள் அவரைக் கடந்து செல்லுகிறோம். இங்கே இங்கிலாந்திலும் வேறுபல இடங்களிலும் கல்கத்தாவிலும் நாங்கள் தனியனாக ஆள்அரவமில்லாமல் வாழ்கின்றவர்களைக் காண்கின்றோம். அவர்களுடைய முகவரி, அவர்கள் வசிக்கும் அறைகளின் இலக்கங்கள்தான் அவர்களை அறிமுகமாக்கும். எனவே நாங்கள் எங்கே இருக்கிறோம்? இவ்வாறான மக்கள் வாழ்வதை நாம் உண்மையில் அறிந்திருக்கிறோமா? காசை எறிந்துவிட்டு அதனால் திருப்தியடைந்து விடலாமா? பணம் மாத்திரம் போதாது. அவர்களுக்குச் சேவை புரிய உங்களுடைய கைகள் தேவை. அவர்களில் அன்பு பாராட்ட உங்கள் இதயம் தேவை.”



அன்னை திரேசா பேசிய உரையைச் செயலில் காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

அராபியக் குடியரசு நாடுகளில் ஒன்றான யீமன் நாடு, சவூதி அரேபியாவின் அருகே உள்ளது. அங்கே அறிமுகமான கிறிஸ்தவர்கள் இல்லை. ஆறு வருடப் பஞ்சத்தாலும் வரட்சியாலும் பலர் வருந்தலாயினர். ஒரு கோயிலைக் கட்டிக்கொள்ளலாமா? என்ற பேச்சுக்கே இடமில்லை. கடவுளின் அன்பைத் தங்கள் பரிவினாலும் இரக்கத்தாலும் அவர்கள் புலப்படுத்தினர். மனநோயாளருக்கு இல்லங்கள் அமைத்துப் பரிபாலித்தனர். மருத்துவ நிலையங்கள், உணவளிக்கும் விடுதிகள் அமைத்துப் பணிபுரிந்தனர். வளர்ந்தோருக்கு கல்வி புகட்ட வகுப்புகள் நடாத்தினர். யீமனில் மாத்திரமல்ல, இஸ்ரவேல், அவுஸ்ரேலியா, எத்தியோப்பியா, பப்புவா நியூகினியா, சிசிலி என்னும் இடங்களிலும் அவர்களுடைய பணி விரிவடைந்தது.

1975ஆம் ஆண்டில் இந்தியாவில் 61 நிலையங்களிலும், பூகோளத்தில் 27 இடங்களிலும் அன்புப் பணியாளர் சபை என்ற ஆலமரம் கிளைகளைப் பரப்பி, விழுதுகளை இறக்கி அதில் தங்கிய ஆயிரம் ஆயிரம் பேருக்கு அபயம் அளித்தது.

(தொடரும்...)

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் பகுதி இல.47

மன்னாப் பத்திரிகை தனது பத்தாவது ஆண்டின் நிறைவை நோக்கி நடைபோட்டுக்கொண்டிருக்கின்றது. இந்த நீண்ட பயணத்தில் பல நல்ல கரங்களின் உழைப்பினால் ஊட்டம் பெற்றுவருகின்றது. இவை யாவும் மக்களிடம் சென்றடைந்தால்தான் இதற்காக உழைக்கின்றவர்களின் முயற்சி அர்த்தமுள்ளதாகும்.

ஆக, மன்னாவை வாங்கினால் மட்டும் போதாது, அதை முழுமையாக வாசிக்க வேண்டும். உங்கள் நண்பர்களையும் மன்னா வாசிப்பதற்கும் போட்டிகளில் பங்குபெறுவதற்கும் ஊக்குவியுங்கள்.

1. சிலுவையின் வல்லமை பற்றி புனித பவுல் 1 கொரிந்தியர் 1:18ல் என்ன கூறுகின்றார்?

2. விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி 56ற்கு சரியான விடை எழுதியவர்கள் 101 பேர். வழமைபோல் பாராட்டுப்பெறும் அதிஸ்ரசாலிகள் 50 பேர். உயிலங்குளப் பங்கிலிருந்து எத்தனைபேர் பாராட்டுப் பெறுகின்றார்கள்?

3. 2006ம் ஆண்டில் மன்னார் மாவட்டத்தில் சிறந்த அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டவர் யார்? அவர் எந்தப் பாடசாலை அதிபர்?

4. ‘டம்டம்’ என்பது என்ன? இது எங்குள்ளது?

5. 23ம் அருளப்பர் பாப்பரசரின் சமாதானத்துக்கான பரிசு 1971ம் ஆண்டில் அன்னை திரேசாவுக்கு வழங்கப்பட்டது. இப்பரிசு யாரால் வழங்கப்பட்டது?

6. வழிபாட்டை சமூகமாற்றத்தின் கருவியாக மாற்றி வெற்றிகண்ட பேராயர் யார்? எந்த நாட்டில்?

7. “நான் இறந்த பின்னர் எனது அவயவங்கள் எவற்றை எல்லாம் எடுக்க முடியுமோ அவற்றை எல்லாம் எடுத்து தவிப்பவர்களுக்குத் தானம் செய்யுங்கள்” என்று அமெரிக்க அரசுக்கு உயில் எழுதிக் கொடுத்த தமிழ் இளைஞன் யார்? அவர் இலங்கையில் எந்த ஊரைச் சேர்ந்தவர்?

8. “நாம் இறைவனை நோக்கி வேண்டும்போது அவருடன் பேசுகின்றோம். இறைவார்த்தைகளை வாசிக்கும்போது அவர் பேசுவதைக் கேட்கின்றோம்” இவ்வார்த்தைகள் எந்த நூலில் உள்ளன?

9. “அவசரமான - மிகவும் அவசரமான செய்தி என்றால் நான் அதற்காக இன்னும் அதிகமாகச் செபிக்க வேண்டும்” இவை யாருடைய வார்த்தைகள்?

10. ஐக்கிய நாடுகள் சபையின் புதிய செயலாளர் நாயகம் ‘பான் கி மூன்’ என்பவர். இவர் கொரிய நாட்டைச் சேர்ந்தவர். இவரது வயது 63. இவர் ஐ. நா. சபையின் எத்தனையாவது செயலாளர் நாயகம்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 45 இற்கான கேள்விகளுக்கு 40 பேர் விடை அளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

**பத்திநாதன் சுகிர்தசீலி,**
**அன்புக் கன்னியர் மடம், செட்டிகுளம்.**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்**

## 10 அதிஸ்ரசாலிகள்

1. மி. ஆன் சுஷாந்தினி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
2. திருமதி. பொபிதா அன்புராஜ் லெம்பேட், வங்காலை 02.
3. க. எமிலின், எழுத்தூர், மன்னார்.
4. சி. சிறோமி, தரம் 10, ஆண்டாங்குளம்.
5. பி. பெனில்டஸ், வேதசாட்சி கோவிலடி, தோட்டவெளி.
6. க. பொலின், எழுத்தூர், மன்னார்.
7. தி. சுஜி, புதுக்கமம், உயிலங்குளம்.
8. கி. செறின் சியாமா, குமனாயங்குளம், ஆண்டான்குளம்.
9. திருமதி. மெ. அ. லெம்பேட், வின்சென்ற் வில்லா, வங்காலை
10. றெ. யோகராஜா, சின்னக்கரிசல், பேசாலை.

# கவிதைக் களம்

## உயிர்ப்பு

தியாகத்தின் செம்மல் நீ
அன்பின் திருவுருதான் நீ
உன்னைப் பார்த்தால்
மனம் மலரும்
விடியல் புலரும்.
ஆனால் உன்
தந்தையின் இல்லமதை
கள்வர் குகையாக்கினர்
யூதர்.

அதனால்
உன் அன்புக் கரம்
பற்றியது சவுக்கை.

இன்று நாம்
துப்பாக்கிப் பேனா ஏந்துவது
உன் புகழுரைக்க,
கயவரின் மனத்தை மாற்ற,
அவர் உள்ளத்தைப்
பதைக்க வைக்க!

எம்மாலும் இயலும்
சாவைக் கொல்ல.
ஆனால்
இன்னும் வேண்டும்
உன் பேரன்பு
இன்னும் வேண்டும்
உன் இரட்சிப்பு!

*அ. பேனாட்,*
*54, 5வது ஒழுங்கை,*
*மன்னார் வீதி, வவுனியா*

## முயற்சி

கல்வி கற்க முயற்சி தேவை
கவலை போக்க முயற்சி தேவை
கருத்தாய்ச் செபிக்க முயற்சி தேவை
கள்வனைப் பிடிக்க முயற்சி தேவை.

நல்லவனாய் வாழ முயற்சி தேவை
நாடு செழிக்க முயற்சி தேவை
நறுமணம் பரப்ப முயற்சி தேவை
நானிலம் மலர முயற்சி தேவை.

சிந்தித்து வாழ முயற்சி தேவை
சிரித்து மகிழ முயற்சி தேவை
சீரழியாமல் இருக்க முயற்சி தேவை
சிறப்புடன் வாழ முயற்சி தேவை.

நிம்மதியாய் இருக்க முயற்சி தேவை
நிரந்தரம் கிடைக்க முயற்சி தேவை
நீரினில் நீந்த முயற்சி தேவை
நித்தமும் அர்ப்பணிக்க முயற்சி தேவை.

இறைவனை வணங்க முயற்சி தேவை
இறைபணி செய்ய முயற்சி தேவை
இசைபல கற்க முயற்சி தேவை
இசையுடன் பாட முயற்சி தேவை.

மன்னிப்புப் பெற முயற்சி தேவை
மனிதரை மதிக்க முயற்சி தேவை
மாசற்றவனாய் இருக்க முயற்சி தேவை
மண்ணில் செழித்தோங்க முயற்சி தேவை.

சூ. றஜீவன், சிறிய குருமடம், மன்னார்.

## ஒரு நவீன மனிதன் சிந்திக்கிறான்

இருண்டு கிடக்கும்
இதயங்களில்
செயற்கைக் கோள்
செலுத்தவும்,
அமைதியான இதயங்களில்
அணு ஆயுத பரிசோதனை
நடத்தவும்,
இனிமையான இதயங்களில்
எரிபொருள் கண்டுபிடிக்கவும்
நவீன மனிதன் சிந்திக்கிறான்.

மனிதரின் கண்ணீரில்
உப்புக் காச்சவும்,
மானிட இரத்தத்தில்
விச வாயு தயாரிக்கவும்,
மனிதர்களின் எலும்புகளில்
அணுக்குண்டு தயாரிக்கவும்,
அந்த மனிதன் சிந்திக்கின்றான்.

கருவில் இருக்கும் குழந்தைக்கு
ஊசிமூலம்
ஆயுதப் பயிற்சி வழங்கவும்,
தாய்ப்பால் அருந்தும்
மழலைக்கு
ஆயுதப் பால் கொடுக்கவும்,
அறநெறிப் பாதையை
ஆயுதநெறிப் பாதையாய் மாற்றவும்
அந்த மனிதன் சிந்திக்கின்றான்.

கடவுள் என்ற
நல்லவரைக் கண்டுபிடித்து
சிறையில் அடைக்கவும்,
கடவுள்வழி செல்வோரை
கருணையின்றிக் கொல்லவும்,
உண்மைக்காக உழைப்போரை
உயிரோடு புதைக்கவும்
அந்த மனிதன் சிந்திக்கின்றான்.

*அ. றேகன் சில்வா,*
*முள்ளிக்குளம்*

## காதலி!

நாட்டைக் காதலி நற்பிரஜையாய் ஆவாய்
பெற்றோரைக் காதலி பாசத்தை அறிவாய்
குருவைக் காதலி ஒழுக்க சீலனாவாய்
நட்பைக் காதலி நல்ல நண்பனை அடைவாய்
மலரைக் காதலி நல் வாசத்தை உணர்வாய்
இயற்கையைக் காதலி கவிஞனாவாய்
சமாதானத்தைக் காதலி சுதந்திரம் பெறுவாய்
இறைவனைக் காதலி சொர்க்கத்தை அடைவாய்.

*பி. பிரசாந்தன், சிறிய குருமடம், மன்னார்.*

## வாழும் நாளில்

ஓ மனிதா நேற்று வாழ்ந்த – நீ
இன்று இல்லாவிடினும் நாளை பேசப்பட வேண்டும்.

சுமையான உலகில் சுகத்தை மட்டும்
அனுபவிக்க நினைத்துச் சுருண்டு விழாதே
சாதிக்கத் துணிந்து சோதனைகளை ஏற்றுக்கொள்.

இமைதனில் தூக்கம் தொலைந்து
இதயத்தில் இலட்சியம் கொள்
உன்னை இகழும் - உலகம் நாளை புகழும்.

*சூ. நிலான் கிறிஸ்டி, அடம்பன் ம.ம.வி.*

குடும்பக் குவலயம்





# நிம்மதியாக வாழ...



எஸ். ஜே. யோகராசா,
உளநல ஆலோசகர், முதுநிலை விரிவுரையாளர்,
மொழியியல் துறை, களனிப் பல்கலைக்கழகம்

## திருமண வாழ்வு தேவைதானா?

திருமணம் முடிக்கத்தான் வேண்டுமா? திருமணம் முடிக்காமல் பிள்ளை பெற்று வாழ முடியாதா? என்ற கேள்விகள் இன்று எழுப்பப்படுகின்றன. திருமணம் முடித்தால் எமது சுதந்திரம் பறிபோய் விடும் எனப் பல பெண்கள் பயப்படுகிறார்கள்.

மிருகம் பிறந்ததும் எழும்பி நடக்க, பால் குடிக்கப் பழகிவிடும். ஆனால் மனிதக் குழந்தையால் பிறந்ததும் அவ்வாறு செய்ய முடியாது. நல்ல விதத்தில் பழக, பேச, உண்ண, நடமாட ஒரு நல்ல குடும்பத்திலிருந்து பழகவேண்டும். அப்பாவும் அம்மாவும் நல்ல அன்புறவுடன் வாழ்வதைப் பார்த்து பிள்ளையும் பழகும். அப்போதுதான் மனவளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி ஏற்படும்.

இன்று அதிகமாக பெற்றோர் தமது பிள்ளைகளின் சரீர வளர்ச்சி, அறிவு வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். ஆனால் மனவளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டுவது குறைவு. எவ்வளவுதான் படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும், சரீரத்தில் 40 வயதையடைந்து சரீர வளர்ச்சி பெற்றிருந்தாலும் திருமணவாழ்வு வெற்றியடையாது போகலாம். திருமண வாழ்வு வெற்றிபெற மனமுதிர்ச்சி தேவை. மனமுதிர்ச்சி பெறாதவர்கள் திருமணம் முடிக்கலாம். ஆனால் திருமணவாழ்வு வெற்றியடையும் என்று உறுதியாகக் கூறிவிடமுடியாது. இருவரில் ஆகக் குறைந்தது ஒருவருக்காவது மனமுதிர்ச்சி தேவை.

"உன்னைக் கலியாணம் முடிச்சதாலை எனக்கு என்ன பிரயோசனம்? அதைவிட நான் சும்மா இருந்திருக்கலாம்" என்று கணவன் மனைவியைப் பார்த்துக் கூறுகின்றான். இங்கே கணவன் தன்னை மையமாகக் கொண்டு வாழ்வதால்தான் அப்படி நினைக்கிறான்.

தனது திருப்தி, தனது நன்மையை மட்டும் பார்ப்பவருக்குத் திருமண வாழ்வு கசந்துவிடும். இன்று பலரின் அனுபவங்களைப் பார்க்கும்பொழுது பரித்தியாகம், எதிர்பாராமல் கொடுக்கும் அன்பு குறைந்து மற்றவரால் எனக்கு என்ன பிரயோசனம் என்பதை மட்டும் நினைக்கும் நிலை உருவாகி வருகிறது.

பணத்தை மையப்படுத்தியே உறவும் ஏற்படுகிறது. பணம் கொடுக்கும் பிள்ளையை ஒருவிதத்திலும், பணம் கொடுக்காத பிள்ளையை இன்னொரு விதத்திலும் பார்க்கும் நிலையைக் குடும்பங்களில் காண்கின்றோம். இவரோடு உறவு வைப்பதால் எனக்கு இலாபம் வருமா? எனப் பார்த்து உறவை வளர்க்கும் நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. கொடுக்கும் அளவுக்கு அன்பு எமக்குக் கிடைக்கிறது. எதிர்பார்த்து அன்பு செய்வது அன்பல்ல. எதிர்பாராமல் அன்பைக் கொடுப்பதே திருமண வாழ்வில் மலர்ச்சியைத் தரும்.

திருமண வாழ்வுக்கு மனஉறுதி தேவை. ஆரம்பிக்கும் பொழுதே எமது திருமணம் எப்படியாகுமோ? என்று பயந்து பயந்து ஆரம்பிப்பது தவறு. முடிவெடுத்ததன்பின் மன உறுதியோடு ஒவ்வொரு நாளையும் ஆரம்பிக்க வேண்டும். "இன்றைய நாளில் நேற்றைய நாளைவிட எமக்கிடையில் நல்ல அன்புறவை வளர்க்க முடியும்" என்று காலையில் எழுந்தவுடனே நம்ப வேண்டும்.

பணம் சம்பாதிக்க நாம் இன்று மிகவும் கஷ்ரப்படுகிறோம். ஆனால் பணம் சம்பாதிக்கக் கஷ்ரப்படும் அளவுக்கு கணவன் மனைவி உறவை வளர்ப்பது எப்படி என்பதை அறியக் கஷ்ரப்படுவதில்லை. பணம் சம்பாதிக்க நேரம், உழைப்பு, சக்தி சகலதையும் கொடுக்கிறோம். ஆனால் இருவரும் சேர்ந்து குடும்ப உறவை வளர்க்க முயற்சியெடுப்பது குறைவு.

முன்னைய காலங்களில் கணவன், மனைவி இருவரும் சேர்ந்து வீட்டில் சிறுசிறு வேலைகளைச் செய்யச் சந்தர்ப்பம் இருந்தது. ஆனால் இன்று இருவரும் சேர்ந்து உணவுண்பதில்லை, இருவரும் சேர்ந்து கதைப்பதில்லை, கலந்துரையாடுவதில்லை,

தொலைக்காட்சியின் முன்னால் அதிகமான நேரத்தைச் செலவழிக்கிறோம். தொலைக்காட்சியைப் பார்த்தவாறே உணவு உண்கிறோம். இருவரும் நேரம் ஒதுக்கித் தமது உணர்வுகள், கருத்துக்கள், ஆலோசனைகளைக் கலந்துரையாடுவது குறைவு.

சண்டை பிடிக்கும்போது மட்டும் தமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர். தமது அடிமனதில் தேக்கி வைத்திருக்கும் கருத்துக்கள், அபிப்பிராயங்களைக் குற்றம்சாட்டும் நோக்கத்துடனும், குறைபிடிக்கும் நோக்குடனும் கூறும்பொழுது மற்றவர்களுக்குக் கோபம் வருகிறது. இருவருக்குமிடையில் விரிசல் ஏற்படுகிறது.

திருமண வாழ்வுக்கு ஆயத்தம் தேவை. குறுகிய கால ஆயத்தம், நீண்டகால ஆயத்தம் என இதனை இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம். குறுகிய கால ஆயத்தம் என்பது எங்கே திருமணத்தை நடத்துவது? எப்படிச் செய்வது? யாரை அழைப்பது? போன்ற ஆயத்தங்கள். நீண்ட கால ஆயத்தம் என்பது நல்ல அன்புறவுள்ள அப்பா அம்மாவோடு குடும்பத்தில் வாழ்ந்திருப்பது. சிறிய வயதில் பெற்றோர் எப்படி வாழ்ந்தார்களோ அது மனதில் படிந்திருக்கும். எமது வாழ்க்கையில் முடிவெடுக்கும்போது, உறவை வளர்க்கும்போது எமது குடும்ப அனுபவங்கள் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இன்று ஒரு வைத்தியரை, பொறியியலாளரை, குருவை உருவாக்கப் பல ஆண்டுகள் பயிற்சி கொடுக்கின்றனர். ஆனால் திருமண வாழ்வில் இணையப்போகும் இருவருக்கும் நல்ல கணவன், மனைவியாகுவது எப்படி? நல்ல அப்பா, அம்மாவாக ஆகுவது எப்படி என்று பயிற்சியளிக்கப்படுவதில்லை.

முன்பு கூட்டுக் குடும்பங்கள் இருந்ததால் பயிற்சி தேவையாக இருக்கவில்லை. இன்று தனிக்குடும்பங்கள் அதிகரித்து வருவதால் பயிற்சி தேவை.


நல்ல பயிற்சி பெறாது, மன முதிர்ச்சியற்றவரைத் திருமணம் முடிப்பதால் மிகவிரைவில் விவாகரத்துச் செய்யும் நிலைக்கு வருகின்றனர். அல்லது பிள்ளைகளுக்காக விவாகரத்துச் செய்யாது மனதால் விவாகரத்துச் செய்து ஒரு கூரையின்கீழ் வாழ்கின்றனர்.

ஆகவே நல்ல குடும்பவாழ்வு தேவை. அதற்குத் திருமணம் தேவை. அதற்கு மனமுதிர்ச்சியும், மன உறுதியும் தேவை. ●



# மருத்துவப் பொழிவு

## பாட்டி வைத்தியம்



**குழந்தைக்குப் பலமான சளி பிடித்தால்:**

துளசி இலையை நன்கு கசக்கி சாறு எடுத்து, அதனோடு 8 துளிர் குப்பைமேனியைக் கசக்கி சாறு எடுத்து அதில் 8 துளியை சங்கில் விட்டு அத்துடன் கொஞ்சம் வெந்நீர் கலந்து வடிகட்டி குடிக்கக் கொடுத்தால் சளி எல்லாம் வெளியே வந்துவிடும்

**தாய்ப்பால் குடிக்காத குழந்தைகளுக்கு:**

குழந்தை சரிவர தாய்ப்பால் குடிக்கவில்லையானால், துளசி இலையை சிறிதளவு அம்மியில் வைத்து அதே அளவு அதிமதுரத்தையும் சேர்த்து மைபோல அரைத்து மார்பில் தடவிவிட்டு குழந்தைக்குப் பால் கொடுத்தால் பிறகு குழந்தை பாலை விரும்பிக் குடிக்கும்.

**தேள் கொட்டுக்கு:** கருந்துளசி இலையை தேள்கொட்டிய இடத்தில் வைத்துத் தேய்த்தால் விஷக் கடுப்பு நீங்கும்.

**அம்மையின் வேகம் குறைய:**

துளசி இலை 6 - 7உம், இரண்டு அல்லது மூன்று ஓமமும் சேர்த்து மைபோல் அரைத்து வெறும் தண்ணீரில் கலக்கி ஆகாரம் கொடுத்தவுடன் ஒருநாளைக்கு ஒருவேளை மட்டும் கொடுத்தால் அம்மையின் வேகம் குறையும்.

**நீர்க்கடுப்பு குணமாக:** நீர் முள்ளி இலையை சுத்தமான உரலில் போட்டு நன்றாக இடித்து சாதம் கொதிக்கும்போது கிடைக்கும் வெந்நீரை சூட்டுடன் அளவாக ஒரு பாத்திரத்தில் எடுத்து இடித்த இலையை அதில் போட்டுக் கலக்கி அப்படியே மூடிவிட வேண்டும். ஒரு மணிநேரமான பின் அதை எடுத்து வடிகட்டிக் குடித்துவிட வேண்டும். இந்தவிதமாக காலை, மாலையாக இரண்டே நாள் சாப்பிட்டால் போதும் நீர்க்கடுப்பு குணமாகும்.


# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது

ஜே. ஷமிலா, பள்ளிமுனை

## இஞ்சி பிஸ்கட்

**தேவையான பொருட்கள்**



மாஜரின் - 1/2 கி.கி
சீனி - 1/4 கி.கி
கோதுமை மா - 3/4 கி.கி
முட்டை - 3
பேக்கிங் பவுடர் - 1 தே.கரண்டி
இஞ்சி / வேர்க்கொம்பு - 25 கிராம்
வனிலா - அளவாக

**செய்முறை :**

மாஜரினையும், சீனியையும், முட்டையையும் சேர்த்து சீனி கரையும் வரை நன்றாக அடிக்க வேண்டும். பின்னர் இஞ்சிச்சாறு அல்லது வேர்க்கொம்புத் தூள் கோதுமை மா, பேக்கிங் பவுடர், வனிலா ஆகியவற்றைச் சேர்த்து நன்றாக பிசைய வேண்டும். 1/2 மணிநேரம் கழித்து மெல்லியதாக உருட்டி விரும்பிய வடிவில் வெட்டி பேக் பண்ணிப் பரிமாறலாம்.

# நிறங்களும் போசாக்குகளும்



**நீல நிறமுள்ள உணவு வகைகள்:**

கத்தரிக்காய், இது வயிற்றை நிரப்பும், ஆனால், உடலைப் பெருக்க வைக்காது, மாறாக இரத்தக் கொதிப்பைக் கட்டுப்படுத்தி, நன்கு சிந்திப்பதற்கு ஏதுவாக மூளையை விழிப்புடன் வைத்திருக்கும். பொட்டாசியம், உப்பு இதில் உள்ளது. உடலில் அதிகமாக உள்ள சோடியம் உப்பையும் பாதுகாப்பாக வைத்திருக்க இந்நிறம் உதவுகிறது.

நீல நிறமுள்ள முந்திரிப் பழத்திலும் இரத்த அழுத்தத்தைச் சீராகப் பராமரிக்கும் மக்னீசியமும், பொட்டாசியமும் உள்ளன. கூடுதலான நார்ச்சத்தும் உள்ளது. நாவற்பழத்தில் ஆரோக்கியமான, இதயத்திற்குத் தேவையான மேற்கண்ட இரு உப்புக்களுடன் கல்சியம், பொஸ்பரஸ், விட்டமின் ஆகியவை உள்ளன. நரம்பு மண்டலமும், தசைகளும் பாதுகாப்பாக இருக்க நீல நிறமுள்ள உணவு வகைகள் உதவுகின்றன.

**சிவப்பு நிறமுள்ள உணவு வகைகள்**

சிவப்பு நிறமுள்ள பழங்கள் மற்றும் காய்கறிகளில் விட்டமின் சி அதிகளவில் காணப்படுகின்றது. இது காயத்தை வேகமாகக் குணப்படுத்தும் குணம் கொண்டது. நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளது. மலச்சிக்கல், பெருங்குடல் புற்றுநோய், கொலஸ்ட்ரோல் முதலியவற்றைத் தடுக்கும். குண்டு மிளகாய், அப்பிள், தக்காளி முதலியவற்றில் உள்ள சிவப்பு நிறம் உடலுக்கு மிகவும் நல்லது.

**பச்சை நிறமுள்ள உணவு வகைகள்**

பச்சை நிறமுள்ள கனிகளில் கண்களுக்குத் தேவையான விட்டமின் சி, போலிக் அமிலம் போன்றவை உள்ளன. காய்ச்சல் எட்டிப் பாராமல் இருக்க முட்டைக் கோஸ், பச்சைக்கீரை, பச்சை திராட்சை, பச்சைப்பட்டாணி, லீக்ஸ் முதலிய ஏதேனும் ஒன்றைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**மஞ்சள் நிறமுள்ள உணவு வகைகள்**

புரதத்தையும், கொழுப்பையும் உடல் எளிதில் உறிஞ்சிக்கொள்ள உதவும் விட்டமின் பி 6 மஞ்சள் நிற உணவில் உள்ளது. தொற்று நோயைத் தடுக்கும் சக்தியும் மஞ்சள் நிறத்திற்கு உண்டு. வாழைப்பழம், அன்னாசி, எலுமிச்சை, சாத்துக்குடி, உருளைக்கிழங்கு முதலிய மஞ்சள் நிற உணவு வகைகளில் அடங்குகின்றன.

**வெண்மை நிறமுள்ள உணவு வகைகள்**

வெண்மை நிற உணவு வகைகள் இரத்த ஓட்டம் நன்றாக இருக்க உதவுகின்றன. இதனால், இதய அடைப்பு அபாயம் தடுக்கப்படும். வெள்ளை நிற வடிவில் வெங்காயம், வெள்ளைப் பூண்டு தினமும் சேர வேண்டும். கொலிபிளவர், புற்றுநோயைத் தடுக்கும். எலும்பு பாதுகாப்பிற்கான கல்சியம் இதில் உள்ளது.

**பழுப்பு நிறமுள்ள உணவு வகைகள்**

தேவையான அளவு நார்ச்சத்தும், மாச்சத்தும், கொலஸ்ட்ரோலைக் கட்டுப்படுத்தும் திறனும் உள்ளது. கைக்குத்தல் அரிசி, உலர்ந்த அத்திப்பழம், காளான், வித்து வகைகள், தானிய வகைகள் என அனைத்தையும் பழுப்பு நிறத்தில் அடக்கி விடலாம். நோய் தீர்க்கும் தன்மை, பெருஞ்சுரப்பி ஆரோக்கியம் முதலியவற்றிற்குத் தேவையான உப்பு பழுப்பு நிறத்தில் உள்ளது.

**ஒரேஞ் நிறமுள்ள உணவு வகைகள்**

நஞ்சை முறிக்கும் விட்டமின்களான ஏ,சி, ஈ வகைகள் ஒரேஞ் நிற உணவுகளில் உண்டு. பலவீனம், சோம்பல் முதலியவற்றை அகற்றும். மூலநோயும், கண்நோயும் குணமாக உதவும். எடையும் கட்டுப்பாட்டில் இருக்கும்.

*கரட், ஒரேஞ், பறங்கிக்காய், மூலாம்பழம் போன்றவற்றில் ஒன்றையேனும் தினமும் உணவில் சேருங்கள். அரிசி, கோதுமை, ரொட்டி, பால், தயிர், வெங்காயம், வெள்ளைப் பூண்டு, கரட், தக்காளி, அப்பிள், ஒரு கீரை, வாழைப்பழம், கத்தரிக்காய் முதலியவற்றைச் சேர்த்தால் ஓரளவு ஏழு வண்ண உணவுகளும் தினமும் நமக்குக் கிடைக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.*

மகிழ்ச்சியான மனம், கலக்கமற்ற சிந்தனை, அளவோடு உண்ணல், தூய காற்றைச் சுவாசிப்பது, மாசற்ற நீரைப் பருகுதல் போன்றவை உடல் நலத்தைப் பாதுகாக்கும். நல்ல காற்றில் உடற்பயிற்சி செய்ய வேண்டும். உறங்க வேண்டும். இவை உடலுக்கும் உள்ளத்துக்கும் நன்மை செய்யும்.

உடல் தோல் நல்ல நிறம் பெறுவதற்குத் தோல் பூச்சுக்களை நாம் பூசக்கூடாது. சரியான உணவு முறைதான் இதைத் தரும். தோலால் தனக்குத் தேவையான உடற்பூச்சை உற்பத்தி செய்து தன்னை மினுமினுப்பாக - மென்மையாக வைத்துக் கொள்ளமுடியும். ஆனால் அதற்குத் தகுந்த வகையில் நாம் உதவ வேண்டும்.

# பெரியப்பா பதில்கள்




கேள்வி : பெரியப்பா, அரசியலையும் கிரிக்கெட்டையும் ஒப்பிடுங்கள்? - *விவேகா, மன்னார்*

பதில் : குட்டையைக் குழப்பி மீன் பிடிப்பது அரசியல்!
மட்டையை எழுப்பி ரன் அடிப்பது கிரிக்கெட்!

கேள்வி : ஒரு ஆண், தாயின் அன்புக்கா அல்லது தாரத்தின் அன்புக்கா அடிமையாகிறான்....? - *அருண், ஆத்திக்குழி.*

பதில் : தொட்டிலில் தாயின் அன்புக்கு,
கட்டிலில் தாரத்தின் அன்புக்கு.

கேள்வி : இந்திய ஜனாதிபதியிடம் உங்களுக்குப் பிடித்தவை எவை? - *மதுசா, உயிலங்குளம்*

பதில் : பிடித்தவை நிறையவே உண்டு.

1. அவர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்.
2. நம் நாட்டுக்கு - தலைமன்னாருக்கு - மிக அருகில் உள்ள இந்தியாவின் - தமிழ்நாட்டின் - இராமேஸ்வரத்தில் இருந்து வந்து, உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியாகியவர்.
3. தனது நேர்மையினாலும், உழைப்பினாலும் இந்திய மக்களின் உள்ளங்களை வென்று, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாகிய - தென்னாசியாவின் வல்லரசான - இந்திய நாட்டின் தலைவரானவர்.
4. இந்தியாவில் உள்ள கல்லூரிகள்தோறும் சென்று, 'கனவு காணுங்கள்' என்று மாணவ மணிகளுக்கு சொல்லி வருபவர். கலாமுக்கு நிச்சயம் ஒரு சலாம் போடவேண்டும்.

கேள்வி : உலகிலேயே சிறந்த பானம் எது? - *மதுரா, செட்டிகுளம்*

பதில் : தண்ணீர்

கேள்வி : இன்று குழந்தைகள் யுத்தத்தில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்கிறேன்? - *அன்னதாஸ், அரிப்பு*

பதில்: நிகழ்கால வரலாற்றில் குழந்தைகளை அதிகம் பாதிப்பது வரலாற்று யுத்தங்கள் அல்ல - வீட்டு யுத்தங்களே!

கேள்வி : மற்றவர்களுக்கு வாழ வழிகாட்டும் பலர் தங்கள் வாழ்வில் கோட்டைவிட்டுவிடுகின்றார்களே? (தோற்றுப்போய் விடுகின்றார்களே?) - *புனிதவதி, ஆட்காட்டிவெளி*

பதில்: ஊருக்கெல்லாம் சேதி சொல்லுமாம் பல்லி
தானே விழுமாம் கழனிப் பானையில் துள்ளி.

கேள்வி : ஒரு நல்ல குடும்பம் எது? - *மணிமாறன், நானாட்டான்*

பதில் : எந்தக் குடும்பத்தில் பெண்கள் கை ஓங்காமலும் அதனால் ஆண்களின் கை வீங்காமலும் இருக்கிறதோ அதுவே நல்ல குடும்பம்.

கேள்வி : அறியாமை என்பது என்ன? - *அறிஞன், அரிப்பு.*

பதில் : கிரேக்க நாட்டில் ஒரு பெரிய ஆய்வு நடந்தது. "உலகின் மிகப்பெரிய அறிவாளி யார்?" எல்லோரும் ஒத்த குரலில் சொன்னார்கள் 'சோக்ரட்டிஸ்'.



செய்தி சோக்ரட்டிசுக்கு எட்டியது. தான் உண்மையிலேயே ஒரு அறிவாளிதானா என்று கண்டுபிடிக்க விரும்பினார். உலகின் இதர அறிவாளிகளைச் சந்தித்துப் பேசினார், தெளிவானார். அதில் ஒரு அறிவாளி கேட்டார், "உங்கள் அறிவின் இரகசியம் என்ன? எப்படி நீங்கள் அனைத்தும் அறிந்தவராக இருக்கிறீர்கள்?" அடக்கத்துடன் சொன்னார் சோக்ரட்டிஸ், "மற்றவர்கள் தங்களுக்கு என்னென்ன தெரியும் என்று தெரிந்து வைத்திருக்கிறார்கள். நானோ எனக்கு என்னென்ன தெரியாது என்று தெரிந்து வைத்திருக்கிறேன். அதுவே என் அறிவின் இரகசியம்" என்றார். அறியாமை என்பது தெரியாமை அல்ல. தெரிந்துகொள்ள முயலாமையே.

கேள்வி : இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைத் தாங்க முடியவில்லையே? - *சிலுவையடியான், அரிப்பு*

பதில் : யானை அசைந்துகொண்டே தின்னும்.
வீடு அசையாமல் தின்னும்.

கேள்வி : பெரியப்பா, சோதனைகளைத் தாங்க முடியவில்லையே, - *சிலுவையடியான், அரிப்பு*

பதில் : சாதனையாளர்களின் வரலாறு சோதனைகளில்தான் தொடங்கியிருக்கிறது, இதை மறந்துவிடாதீர்கள்.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 20 - 01 - 1927
உதிர்வு 02 - 04 - 2006

**திரு. பேதுரு அருளப்பு லோகு**
**(சின்னக்கடை, மன்னார்)**

பாசத்தின் திருவிளக்காய், நேசத்தின் ஒளிவிளக்காய், எம் இதயத்தின் அணையாத அகல்விளக்காய் ஒளி வீசும் எம் இனிய தந்தையே! பாரினில் பரமனின் வழிகாட்டி, பாசத்தை நாளும் பொழிந்து, பல ஆண்டுகள் எமக்காய் பாடுபட்டு உழைத்தீர்கள்! பிள்ளைகள் வாழ பல துன்பங்கள் வாழ்வில் அனுபவித்தீர்கள். எம்மைப் பிரிந்து ஓராண்டு மறைந்தாலும் மறையாது உங்கள் நினைவு. தங்களின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்

## 5ம் ஆண்டு நினைவு



மலர்வு 12 - 06 - 1933
உதிர்வு 30 - 04 - 2002

**அ. செபஸ்ரியம்மா**
**(முருங்கன் பிட்டி, முருங்கன்)**

அன்பினைக் காட்டி நின்றாய், அருளொளி ஊட்டி வந்தாய், புன்சிரிப்போடு பேசி புகழுடன் வாழ்வில் நின்றாய். உண்மையோடுறவு கொண்டாய் விண்ணகம் சென்றிட்டாலும் வேதனை தீரவில்லை. உம்மை நாம் என்று காண்போம்?

(இவரின் ஆன்ம சாந்திக்காக சித்திரை 30.04.2007 அன்று காலை 6.30 மணிக்கு முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்திலும் பிரான்ஸ், கனடா, கல்முனை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.)

*இவரின் பிரிவால் துயருறும், கணவர், மக்கள், மருமக்கள், பேரப் பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்*

## 21ம் ஆண்டு நினைவு



மலர்வு 02 - 02 - 1945
உதிர்வு 19 - 04 - 1986

**அந்தோனி காணிக்கை**
**பனங்கட்டுக்கொட்டு, மன்னார்**

"அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர்"

உதிர்ந்துவிட்ட எங்கள் அன்பு மலரே! ஆண்டுகள் இருபத்தொன்று ஓடிவிட்ட பின்பும், உங்கள் நினைவு ஓட்டங்கள் நெஞ்சைவிட்டு ஓடவில்லை. உமது அன்பை நினைத்தால் - இன்றும் இதயம் பாறையாய் கனக்கிறது ஐயா! இறையில் இணைந்து நிலைவாழ்வுபெற நித்தமும் உமக்காய் இறைஞ்சுகின்றோம்.

*இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 19.04.2007 காலை 5.45 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும்.*

*இவரின் பிரிவால் துயருறும், மனைவி, பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 3ம் ஆண்டு 1ம் ஆண்டு




**திரு. பெ. பாலசுந்தரம்** ✝ **மதலேனாப் பிள்ளை**

மலர்வு 15.03.1941
உதிர்வு 04.11.2004

மலர்வு 22.08.1946
உதிர்வு 10.04.2006

அன்பும் அரவணைப்பும், பண்பும் பாசமும் காட்டி, பக்குவமாய் பாலகர் எம்மை வளர்த்தீர்கள்! பாரினிலே எம்மை பரிதவிக்க விட்டு படைத்தவன் அழைப்பை பாசத்துடன் ஏற்றுச் சென்றீர்களோ? ஒன்றாய்ப் பரலோகம் சென்ற எங்கள் ஐயா, அம்மாவே! துயரம் எங்களைத் துடிக்கச் செய்கின்றது. எமக்கு சிறந்த பெற்றோராய்த் திகழ்ந்த உங்கள் ஆன்மா இளைப்பாற்றியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இவர்களின் பிரிவால் துயருறும்,
*அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 7ம் மாதம் 1ம் ஆண்டு




**தொம்மை அந்தோனி** ✝ **அந்தோனி திரேசம்மா**
**(குமானயன்குளம்)**

மலர்வு 10.07.1932
உதிர்வு 26.09.2006

மலர்வு 16.03.1936
உதிர்வு 27.04.2006

**சீவியத்தில் நேசித்தோம்**
**மரணத்திலும் மறவோம்.**

பெற்று வளர்த்து பெருவாழ்வு வாழ வைத்த பெற்றோரே! விண்ணிலே இறை ஒளியில் வாழும் நீங்கள் மண்ணில் வாழும் எங்களுக்காகவும் இறைவனிடம் வேண்டுங்கள்.

இவர்களின் பிரிவால் துயருறும்,
*அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.*

*தகவல்: மகள் அக்னேஸ் (கொக்குப்படையான்)*
*மகள் ஜெயந்தி (பெற்றா, மன்னார்)*

## 2ம் ஆண்டு நினைவு



மலர்வு 15 - 10 - 1933
உதிர்வு 28 - 04 - 2005

**திருமதி. சவேரியான்**
**திரேசம்மா**

**"ஆண்டவருக்குள் இறப்பவர் பேறுபெற்றவர்கள். ஏனெனில் அவர்கள் இளைப்பாறுவார்கள். ஏனென்றால் அவர் செய்த நன்மைகளே அவர்களின் பின்தொடர்ந்து கூடவரும்"**

**இவரின் பிரிவால்**
**துயருறும்**
***உற்றார்,***
***உறவினர்கள்,***
***நண்பர்கள்.***

## 6ம் மாத நினைவு



மலர்வு 10 - 10 - 1923
உதிர்வு 25 - 10 - 2006

**பேதுரு சவிரியம்மா லோகு**
**(மன்னார்)**

மங்காத புகழ் விளங்கும் மன்னார்ப் பதியினிலே எங்கள் குடும்பத்தின் சீர்மிகு தலைவியாய் உதித்தவரே! அன்பான அம்மாவே அன்புக்கோர் இலக்கணமே, ஆறுமுடிவதில்லை ஈர்மூன்று மாதங்கள் ஆகியதே! இத்தரையில் நாமெல்லாம் இன்பமுடன் வாழ்வதற்கு நல் ஆசானாய் வழிகாட்டி ஒளியேற்றினீர்கள். உடலொறுத்து உரமிட்டீர்கள். எம் குடும்பம் தளைக்க ஊக்கமாய் எமை வளர்த்து ஊறிய வாழவைத்தீர்கள். அம்மா, நீங்கள் மாதாவை வேண்டிவைத்த நாளிலே. இறக்கும்வரை மாதா பக்தை. மரியாயின் சேனைத் தலைவியும் நீங்கள்தான். மரியன்னை எமக்கு ஆறுதலாய் இருக்கின்றார். *பிரிவால் துயருறும்,*

*பாசமுள்ள குடும்ப அங்கத்தினர்கள்.*

## 2ம் ஆண்டு நினைவு



மலர்வு 06 - 01 - 1953
உதிர்வு 11 - 04 - 2005

**சிமியோன் செபதேயு**
**புதுக்கமம், உயிலங்குளம்**

"உடலே கோயில் அதனுள் உறையும் இறைவனே உயிர்"

*(இறைவனாகக் கருதப்படுவது பெற்றோர்)*

இந்தத் தீர்க்கமான கருத்தை மனதிற்கொண்டு, எம்மை இருள் எனும் மாயையில் மூழ்கவிடாது உங்களின் நற்பாதையில் இட்டுச் சென்றமையை நாமென்றும் மறவோம்.


இறந்தாலும் என்றும் எங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் அன்புத் தந்தையே! உங்கள் கரங்கள் என்றென்றும் எம்மை ஆசீர்வதிக்குமாறு இதயபூர்வமாகக் கேட்டு நிற்கின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும், மனைவி, மக்கள்.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 60

## 1 குறிப்பேடு - அதிகாரம் 11 - 20

உங்கள் விடைகளை 10. 05. 2007க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
(பதிப்பாசிரியர்)




### இடமிருந்து வலம்

1. பின்பு லேவியர் மோசேயின் கட்டளையாகத் தந்த ஆண்டவரது வாக்கின்படி கடவுளின் பேழையை அதன் .......... தங்கள் தோள்மேல் சுமந்து வந்தனர்.
3. ஆயினும் தாவீது சீயோன் .................. யைக் கைப்பற்றினார்.
7. ......................... கோலத்துடன் ஆண்டவரை வழிபடுங்கள்.
10. ஆயினும் கடவுளே அதுவும் உமக்குச் ...............த் தோன்றிற்று.
15. .......................... எறிதற்கும், வில்லினால் அம்பு எய்தற்கும், வலக்கை இடக்கைப் பழக்கமானவர்களாயும் இருந்தனர்.
17. குற்றமற்றவனான என்னை என் எதிரிகள் ...................... ஒப்புவிக்கும் பொருட்டு வந்துள்ளீர்கள் என்றால் நம் முன்னோரின் கடவுள் அதைக்கண்டு தீர்ப்புக் கூறட்டும்.
18. யாக்கோபுக்கு ..............வும் இஸ்ரயேலுக்கு என்றுமுள உடன்படிக்கையாகவும் அதை அவர் உறுதிப்படுத்தினார் (2வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே நிற்கின்றது.
20. அவர்தம் வியத்தகு ........................... அனைத்தையும் எடுத்துரையுங்கள்.

### மேலிருந்து கீழ்

1. மாறாக அவனை என் கோவிலின் மேலும், அரசின் மேலும், .............................. என்றென்றும் நியமிப்பேன்.
2. உலகெங்கும் வாழ்வோரே அவர் திருமுன் ........................ங்கள்.
4. இந்த ....................யை உம் அடியானுக்குக் கொடுப்பதாய்க் கூறியுள்ளீர்.
6. தாவீதின் சகோதரனாகிய சிமயா............... யோனத்தான் அவனைக் கொன்றான்.
9. தாவீது அவர்கள் மன்னனின் தலையிலிருந்த ................ எடுத்துக்கொண்டார். (2வது எழுத்து 1வது எடுத்துக்கு மேலே உள்ளது)
12. அவர்கள் போரில் தோள்கொடுத்த ஆற்றல்மிகு ....................
13. உம் அடியானுடைய வீட்டுக்கு வரவிருக்கும் பெரும் .............ப் பற்றி வெளிப்படுத்தினீரே.
14. அவர்களோ அவருக்கு முன்பாகப் புற.............. ஓடினர்.
16. முன்பு ஒருமுறை நீங்கள் சுமக்காததால் நம் கடவுளாகிய ஆண்டவர் நமக்குள் ................... உண்டாகச் செய்தார்.

### வலமிருந்து இடம்

2. பின்பு கடவுளின்முன் எரிபலிகளையும் .................ப் பலிகளையும், செலுத்தினர்.
5. அவர்கள் கடவுளின் ................. அபினதாபின் வீட்டிலிருந்து எடுத்து ஒரு புது வண்டியின்மேல் ஏற்றினர்.
4. மேலும் தாவீது தமஸ்கு ...................... நடுவில் பாளையங்கள் அமைத்தார்.
9. தங்கள் உயிரை ஒரு பொருட்டாக எண்ணாத இந்த ......... இரத்தத்தை நான் குடிப்பது எப்படி?
13. காத்து நகரையும் அதன் ................யும் பிலிஸ்தியரிடமிருந்து கைப்பற்றினார்.
17. "போ, அவர்களை உன் .................. ஒப்புவிப்பேன்."
21. உணவுப் .............. ஏற்றி அவர்திருமுன் வாருங்கள்.

### கீழிருந்து மேல்

8. ஆண்டவர் .................... தாவீது அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டார்.
11. யூதா புதல்வரில் கேடயமும், ஈட்டியும் ............ப் போர்க்கோலம் பூண்ட ஆறாயிரத்து எண்ணூறு பேர்.
12. தாவீதின் புதல்வர் அவர்தம் அரசில் உயர் ................ வகித்தனர். (4ம் 5ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)
13. முன்புபோல் கொடியோர் கையில் ..................... மாட்டார்.
16. இஸ்ரயேலரின் மூப்பர்கள் எல்லோரும் எபிரோனிலிருந்த ...................... வந்தார்கள்.
19. இஸ்ரயேலரை ......................... நாளிலிருந்து இன்றுவரை நான் எந்தக் கோவிலிலும் தங்கியதில்லை.
20. அவர்தம் ...................... மக்களினங்கள் அறியச் செய்யுங்கள்.
21. ஏனெனில் பிலிஸ்தியரின் ......................... முறியடிக்கக் கடவுள் உனக்குமுன் செல்கிறார்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.59 ற்கான முடிவுகளை 2007ம் ஆண்டு மே மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

## அனைத்துத் தொடர்புகளுக்கும்

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar, Sri Lanka.

பதிப்பாசிரியர்.
மன்னா
திருமறைப்பணி நிலையம்.
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.

தொலைபேசி. இல. 023 - 2232377

## நினைவுகளைப் பிரசுரிப்போர் கவனத்திற்கு

இறந்துபோன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக ரூபா 2000 அறவிடப்படும். இவற்றைக் கலர் பக்கத்தில் பிரசுரிப்பதாக இருந்தால் ரூபா 4000 அறவிடப்படும்.

இந்த நினைவுகள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.
- மன்னா நிர்வாகம்

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**
உள்நாடு - இலங்கை ரூபா 400
வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)

## 1வது பிறந்தநாள் வாழ்த்து




## றா. ஆன் ஸ்ரெப்னி லெம்பேட்

முத்தரிப்புத்துறையை பிறப்பிடமாகவும், இந்தியாவில் தேவகோட்டையை வசிப்பிடமாவும் கொண்ட றாஜன் விஜி தம்பதிகளின் செல்வப் புதல்வி றா. ஆன் ஸ்ரெப்னி லெம்பேட தனது முதலாவது பிறந்த தினத்தை இறை ஆசியுடன் தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பப்பா, அப்பம்மா, அம்மையா, அம்மம்மா, சித்திமார், சித்தப்பாமார், மார்மாமார், அத்தைமார், பாட்டி, மச்சிமார், மச்சாமார், அனைவரும் செங்கோல் அன்னையின் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*தகவல்: பி. அந்தோனி பீரிஸ், முத்தரிப்புத்துறை*

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 58ல்

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*

அ. பிறிற்றோ,
எம்-8, மடுக்கோவில்,
மடு.

*இரண்டாம் பரிசு*

அ. நிசாமினி,
சிறுத்தோப்பு,
பேசாலை.

*மூன்றாம் பரிசு*

நி. மேரி ஜோசப் குரூஸ்,
டிலாசால் இல்லம்,
மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 150 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 144 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.58ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. எம். அன்ரனி றினோஜன், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
2. றெ. யேசுராஜா, சின்னக்கரிசல், பேசாலை.
3. ஜே. யூட் புஸ்பாந்தன், 235, தாழ்வுபாடு வீதி, மன்னார்.
4. ஏ. எஸ். ஜோன், ஹெந்தல, கொழும்பு - 13.
5. செ. நிக்சலா, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
6. அருட்சகோதரி. மேரி பற்றீசியா, றம்பாவ, அனுராதபுரம்.
7. எஸ். தியோகன், புனித மரியாள் மாணவர் விடுதி, கல்முனை.
8. ஆர். ஆன் சினேகா பீரிஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
9. ந. கனிஸ்ரா, தி.கு.கன்னியர் மடம், பெரிய பண்டிவிரிச்சான், மடு.
10. சி. சகாயராணி, நடுக்குடா, பேசாலை.
11. எம். கசில்டா (நிரோஷா), பள்ளிவாசல் வீதி, கீரி, மன்னார்.
12. ம. யூட்றேகன், பார்மேனிப்பாதை, கீரி, மன்னார்.
13. ச. நித்தியா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
14. அகுஸ்தீன் திரேசா, முருங்கன் பிட்டி, முருங்கன்.
15. பிரகாசம் டெய்சி, கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம்.
16. தேவநேசன் மேரி அல்போன்சியா, யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி
17. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
18. க. லூசியா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
19. திருமதி. அ. விஜயகுமாரி, சாளம்பைக்குளம், காத்தான்குளம்.
20. அ. றூபா குரூஸ், தேவ பராமரிப்புச் சபை, தேவத்தை, றாகம.
21. ரா. ஜெனோவா மேரி, 21/2, றொஹெம்ட்டன், அப்புத்தளை.
22. எஸ். அன்ரன் எக்ஸ்பெற்றா, சுவிஸ்.
23. என். ஜனார்த்தனா, மணற்குளம், உயிலங்குளம்.
24. வை. மஞ்சு, தரம் 12, அடம்பன் மத்திய மகா வித்தியாலயம்.
25. திரு. எஸ். ஜே. மரியரட்ணம், பூங்காவீதி, வவுனியா.
26. எ. எட்வேட், மணிக்கடை இல A6, நானாட்டான், மன்னார்
27. ஞா. பிரதீபா, 5-மன்னார் வீதி, நேரியகுளம.
28. பு. டக்சனா, சவேரியார்புரம், சிலாவத்துறை, முருங்கன்.
29. றபேக்கா பற்றிக் (ஐடா), சின்னக்கடை, மன்னார்.
30. க. பொலின், எழுத்தூர், மன்னார்.
31. ஜோ. வொசின்டினா, பாவிலுபட்டான் குடியிருப்பு, பேசாலை.
32. அ. கரோலின் கீர்த்திகா, 70, பேராலய வீதி, திருகோணமலை.
33. வை. றொபேட், அன்றூஸ், பட்டித்தோட்டம், மன்னார்
34. அ. யோகவதனி, பிள்ளையார் கோவில் வீதி, வெளிக்குளம்.
35. சி. ராஜேஸ்வரி, அன்பின் சகோதரிகள் இல்லம், செட்டிகுளம்.
36. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
37. ப. நியூட்டன் பிறேமறாஜ், பரிகாரிகண்டல், முருங்கன்.
38. இ. சர்மிளா, முகத்தான் குளம், செட்டிகுளம்.
39. ச. லின்ரா, கீளியன்குடியிருப்பு, தலைமன்னார்.
40. பி. றெமூந்துப்பிள்ளை, கங்காணிதீவு, நானாட்டான்.
41. யே. டிலாணி, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
42. க. எஸ்தரூபி, தி.சி.க.மடம், முல்லைவீதி, பரந்தன், கிளிநொச்சி.
43. பிரான்சிஸ்கா டொறின் டானியல், நாரஹென்பிட்டி, கொழும்பு-5
44. ஜெ. அமலேஸ்வரன், தட்சனாமருதமடு, பாலம்பிட்டி.
45. எ. ஜெ. விஜானி, தரவன்கோட்டை, எழுத்தூர், மன்னார்.
46. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
47. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
48. க. சிறோமி, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
49. பீ. ஒகஸ்ரினா, ராணி மில் வீதி, இறம்பைக்குளம், வவுனியா.
50. செ. இன்வென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.

## கிறிஸ்துவின் .... (7ம் பக்கத் தொடர்ச்சி)

ஆம்! பழையது ஒன்று போனால்தானே புதியது ஒன்று பிறக்க முடியும். இன்று 'எதற்கெல்லாம்' இறக்க வேண்டியிருக்கிறதென்று பார்ப்போம்:

### முதலாவதாக :

நமது சாதிய எண்ணங்களுக்கு நாம் இறக்க வேண்டும். இதுதான் திருச்சபைக்குத் தலைகுனிவைக் கொடுத்துக்கொண்டிருப்பது. அயலாரிடம் நம்மைக் காட்டிக் கொடுக்கிறது. மதத்திற்குள் அரசியலைப் புகச்செய்ததும் இதுதான். எனவே இத்தகைய எண்ணங்களுக்கு மரித்து, ஒன்றுபட்ட சமூகமாய் உயிர்ப்போம்.

### இரண்டாவதாக :

நம் கத்தோலிக்க சபையில் நிலவும் அசட்டைத்தனத்திற்கு மரிக்க வேண்டும். இதோ நேற்றுத் தோன்றிய சபைகளில் பணியாளர்களும் மக்களும் எவ்வளவு ஆர்வமாகச் செயற்படுகிறார்கள். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் செபத்தில் செலவழிக்கத் தயாராக இருக்கிறார்கள். நமக்கு எங்கேபோனது இந்த ஆர்வம்? பாதித் திருப்பலிக்கு வருபவர்களும், கடவுளுக்கு நேரம் ஒதுக்கப் பயப்படுபவர்களும் அதிகரித்துக்கொண்டு வருகிறார்களே! பலர் திருவருட்சாதனங்களை எந்தத் தயாரிப்பும் தகுதியும் இல்லாமல் பெறவே வருகின்றனர். இத்தகைய நிலைகளுக்கு மரித்துச் செயலார்வம் மிக்க மனிதராய் உயிர்ப்போம்.

### மூன்றாவதாக :

நம் குடும்பங்களில் இயேசுவின் பக்தி குறைந்து, அந்நிய தெய்வங்களில் நம்பிக்கை வைக்கும் நிலை வளர்ந்து வருகிறது. குறிபார்ப்பது சில பகுதிகளில் அதிகரித்து வருகிறது. இவ்வாறு செய்யும்போதெல்லாம் இயேசுவுக்குச் சாட்சியம் பகர மறுக்கின்றோம். நம் இயேசுவைச் சக்தியற்றவராக்கி விடுகிறோம். இந்நிலைக்கு மரித்து விசுவாச வாழ்விற்கு உயிர்ப்போம்.

### இறுதியாக

தனிப்பட்ட வாழ்வில் எவ்வளவோ அஞ்ஞானச் சிந்தனைகள். அவற்றிலிருந்தும் கடந்து வருவோம். இவ்வாறு செய்யும் நாளன்று தான் நமக்கு 'ஈஸ்டர். உண்மையில் இது ஒரு நாளில் நடந்து முடியக்கூடிய காரியமன்று. மாறாகத் தினந்தோறும் நடக்க வேண்டியது. மரித்து வாழும் வாழ்விலிருந்து உயிர்க்கத் தயார் செய்வதுதான் தவக்காலம். கிறிஸ்தவ வாழ்வு ஒவ்வொரு நாளும் உயிர்தெழும் வாழ்வு. அல்லேலூயா பாடும் வாழ்வு.

இங்ஙனம், புது உலகில் அடி எடுத்து, புது விடியலைக் காணும்போது நம்முடைய வாழ்வு உயிர்த்த இயேசுவின் அனுபவத்தைப் பெறுகின்ற ஊக்கமுடைய பிள்ளைகளாக்கும். நம் வாழ்வே பிறரிடம் பேசும்.

அப்போது பேதுரு, யோவானைப்போல, "நாங்கள் பார்த்ததையும் கேட்டதையும் பேசாமல் இருக்க எங்களால் இயலாது" (திருத்தூதர் பணிகள் 4:20) என்று சொல்லும் அளவுக்கு துணிவுள்ள, ஆர்வமுள்ள, உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கும் சாட்சிகளாவோம்! ●

# Easter மன்னா

## கடவுள் அவரை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பி காட்சி அளிக்கச் செய்தார்

(திருத்தூதர் பணி 10:39-41)







## Happy Birthday Holy Father!



இம்மாதம் (ஏப்ரல்) 16ம் திகதி
தனது 80வது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
எம் திருத்தந்தைக்கு எமது மனம் நிறைந்த
வாழ்த்துக்களும், செபங்களும் உரித்தாகட்டும்.

## மன்னா

**உங்கள் வாசற் படியைத் தட்டுகிறது!**

**மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை.**

### மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப்பணத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் உறவினர், நண்பரின் வீடுதேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 400ஐயும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 2000ஐயும் (20 யூரோ) அனுப்பவும். சந்தாப் பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம். காசோலை மூலம் அனுப்புவதாயின்
வங்கியின் பெயர்: Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர்: The Editor - MANNA
வங்கிக் கணக்கு இலக்கம்: S/A No.02-1678001-5
என்று குறிப்பிடவும்.
உங்கள் ஆன்மீகப் பசிக்கு உணவாக - உங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் வகையில் மன்னா இன்னும் புதிய அம்சங்களுடன் புதுமெருகுடன் தொடர்ந்து வெளிவரும்.

# சாதனைகள்

### அகில இலங்கை ரீதியிலான சித்திரப் போட்டியில் பாராட்டுப் பெற்ற செல்வன் ரிறோன்



மன். புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் செல்வன் அன்ரன் அல்பிரட் ரிறோன் அவர்கள் 2006ம் ஆண்டுக்கான கிறிஸ்மஸ் முத்திரையை தெரிவுசெய்வதற்கான அகில இலங்கை ரீதியான சித்திரப் போட்டியில் பங்கெடுத்துப் பாராட்டுச் சான்றிதழ் பெற்றுள்ளார். இப்போட்டியானது இலங்கைத் தபால் திணைக்களத்தின் ஆதரவில் சமய விவகாரங்களுக்கான அமைச்சின் கிறிஸ்தவ விவகாரப் பிரிவினால் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. செல்வன் ரிறோனுக்கு மன்னா சார்பாக எமது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

### மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் மாகாண மட்ட ஆங்கிலதின, தமிழ்த்தின நிகழ்வுகள்

2006 ற்கான ஆங்கிலதின தமிழ்த்தின நிகழ்வுகள் திருகோணமலையில் நடைபெற்றன. ஆங்கில தின நிகழ்வுகளில் மன்/சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையின் சிரேஷ்ர பிரிவினரின் ஆங்கில நாடகம் 1ம் இடத்தையும், கனிஷ்ர பிரிவினரின் ஆங்கில நாடகம் 3ம் இடத்தையும் பெற்றது.


தமிழ்மொழித்தின நிகழ்வுகளிலும் சிரேஷ்ட பிரிவினரின் நாடகம் 1ம் இடத்தைப் பெற்றது. இதேபோல் நாட்டியநாடகம் 3ம் இடத்தையும், தனிநடனம் முறையே 1ம் இடத்தையும், 3ம் இடத்தையும் பெற்றுள்ளது. இந்நிகழ்வுகளை ஒழுங்கமைத்த அனைவருக்கும், பங்கேற்ற மாணவச் செல்வங்களிற்கும், கல்லூரி நிர்வாகத்திற்கும மன்னா தனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றது.



செல்வி. தயாளினி தயானந்தன்

மன்னார் தாழ்வ்பாடு கிராமத்தில் அமைந்துள்ள மன்/ புனித வளனார் றோ.க.த.வித்தியாலயத்தில் 7ஆம் தரத்தில் கல்வி பயிலும் செல்வி. தயாளினி தயானந்தன் வடக்குகிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற தமிழ்மொழித்தினப் போட்டியில் பிரிவு 2இன் கீழ் கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதலில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவரை எமது பாடசாலை சமூகம் வாழ்த்தி நிற்பதில் மகிழ்ச்சியடைகின்றது. இவர் கோட்ட, வலய மட்டங்களிலும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரை மன்னா பத்திரிகையும் வாழ்த்தி நிற்கின்றது.

# செதுக்கப்பட்ட சிலைகள்...





அன்னை திரேசா



தந்தை பியோ

# உறங்காத விழிகளோடு

## 25ம் ஆண்டு நினைவு

மலர்வு 29 * 11 * 1924



உதிர்வு 12 * 04 * 1982

கவிஞர் செபமாலை மொத்தம் போல்

(நறுவிலிக்குளம்)

மலர்வு 03 * 10 * 1934



உதிர்வு 24 * 12 * 1983

துணைவி ஆனாள்

வாக்கினி லுண்மை தங்க
மனதருள் அன்பு பொங்க
நோக்கினிற் புனித மேவ
நோன்பினாற் தொலையும் பாவப்
போக்கினை விலத்தி வந்தாற்
புது நலப் பிறவியாகி
மோக்கிச வழியிற் புக்க
முழுமனத் தவசு நன்றே
(அன்னாரின் ஆன்மசிந்தனைக் கவிதைகளிலிருந்து சில வரிகள்)

நீங்காத நினைவாக - மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பில் நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது